பொருளியல் நோக்கு

மார்ச்
1986



பாற்பண்ணைக்
கைத்தொழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார குறிகாட்டிகள்

குறிப்பாக விவசாயத்துறையிலும், கைத்தொழில் உற்பத்தித்துறையிலும் நிகழ்ந்த உற்பத்தி அதிகரிப்புக்களின் விளைவாக 1985 ல் இலங்கை 5 சதவீதமான வளர்ச்சியை பதிவு செய்தது. இதே வேளையில் 1985 ல் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தி 5.3 சதவீதமாக அதிகரித்தது; இது 1983 ல் 4.1 சதவீதமாகவும், 1984 ல் 5.1 சதவீதமாகவும் இருந்தது. 1984 ல் ரூ. 8759 ஆகவிருந்த தலா நபர் மொத்த தேசிய உற்பத்தி 1985 ல் 3.7 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 9,219 ஆகியது. எனினும், 1985 ன் மத்திய வங்கியின் ஆண்டறிக்கை எடுத்துக்காட்டும் அடிப்படை பொருளாதார குறிகாட்டிகளின் பிரசாரம், (டொலர் வீதத்திலான) தலா நபர் மொ. தே. உ. 1984 ல் 344 அமெரிக்க டொலரிலிருந்து 1985 ல் 339 அ. டொலராக வீழ்ச்சியடைத்துள்ளது. 1983 ல் 18.6 சதவீதமாகவும், 1984 ல் 16.4 சதவீதமாகவும் இருந்த மொத்த தேசிய செலவினத்தின் விஸ்தரிப்பு 1985 ல் 10.0 சதவீதமாக கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

1984 ல் 3060 கோடி ரூபாவாகவிருந்த உள்நாட்டுச் சேமிப்பு 28.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1985 ல் 2190 கோடி ரூபாவாக இருந்தது. மொத்த தேசிய உற்பத்தியில் தேசிய சேமிப்பின் சதவீதம் 1984 ல் 22.2 சதவீதத்திலிருந்து 1985 ல் 16.1 சதவீதமாக வீழ்ச்சிகண்டது.

தொடர்ந்து நெருக்கி வந்த பாதகமான காரணிகளுக்கு மத்தியிலும் கூட, 1985 ல் நாட்டின் பொருளாதாரமானது குறிப்பிடக்கூடிய வளர்ச்சி வேகத்தை அனுபவித்து வந்துள்ளது. நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கினை வகிக்கும் விவசாயத்துறையில் இடையறுது நிகழ்ந்து வந்த விஸ்தரிப்புக்களே இதற்கான காரணமாகும். முன்னைய ஆண்டில் வீழ்ச்சி கண்டிருந்த தென்னை, நெல் உற்பத்தித்துறைகளில் கணிசமான அளவு அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

குறிப்பாக் தேயிலை, தெங்குப் பொருட்கள் என்பவற்றின் பண்ட விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இவ்வாண்டில் பொருளாதாரம் சந்தித்த துரதிர்ஷ்டங்களில் ஒன்றாகவிருந்தது. மேலும், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஏற்பட்ட குறைவு, அதிகரித்து வந்த பாதுகாப்புச் செலவினங்கள், வெளிநாட்டு முதலீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி, நாட்டின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட சீர்குலைவு போன்ற தடங்கல்களையும் பொருளாதாரம் எதிர்நோக்க வேண்டியிருந்தது. இலங்கையின் சென்மதி நிலுவை நிலைமை 1985 ல் பாரதூரமான விதத்தில் சீரழிந்து சென்றமை மிக மோசமான ஒரு தாக்கமாக இருந்தது. ஏற்றுமதி வருமானங்களும் (1972 க்குப் பின்னர்) முதற்தடவையாக வீழ்ச்சியுற்றன.

மொத்த தேசிய உற்பத்தி
நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்



மொத்த தேசிய உற்பத்தி



இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 863

பொருளியல் நோக்கு

மலர் 11 இதழ் 12 மார்ச் 1986

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

நிரல்கள்

நிகழ்ச்சிக் குறிப்பேடு 2 ஜனவரி – பெப்ரவரி 1986

கப்பற் சேவை 17 கடல் சார் மோசடிகளை தவிர்த்தல்

விசேஷ அறிக்கை

3 பாற்பண்ணைக் கைத்தொழில்

எம். யூ. ஏ. தென்னக்கோன் 8 இலங்கையின் கால் நடைகள் - பால் உற்பத்தி வீழ்ச்சிக்கான காரணங்கள்

சிறப்புக் கட்டுரைகள்

எப். ஜே. ஏ. பௌமன் 21 வளர்முக நாடுகளில் முறைசாரா சேமிப்பு கடனுதவி ஒழுங்குகள் – இலங்கை பற்றிய சில குறிப்புக்கள்

மெல்வின் வெஸ்ட்லேக்
லக்ஸ்மன் ஜயவர்தன 26 மூன்றாவது உலக ஏற்றுமதி முறையாக்க வலயங்கள்

28 ஏற்றுமதி முறையாக்க வலயங்கள் - கடினமான பாதை

அடுத்த இதழில்

- ★ இலங்கையில் நன்னீர் மீன் பிடி: பிரச்சினைகள், வளர்ச்சி வாய்ப்புகள் என்பன பற்றிய ஒரு பரிசீலனை
- ★ இலங்கையின் பொருளாதாரம் - 1985
- ★ சமீபத்திய முதலீட்டுப் போக்குகள்
- ★ பாரிய நீர்பாசனத்திட்டப் பிரதேசங்களில் சமூக - பொருளாதார பிரச்சினைகள்

அட்டைப்படம்

சேபாலிக்கா பெர்ணன்டோ

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிக் குறிப்பேடு

ஜனவரி

1. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் 1985 டிசம்பரில் 575.3 ஆக இருந்ததென குடிசனமதிப்பு, புள்ளி விவர திணைக் களம் அறிவித்தது. இது நவம்பர் மாதத்தில் 567.0 ஆகவும், 1984 நவம்பரில் 566.9 ஆகவும் இருந்தது.

3. குறிப்பாக, மென்ரக கைத்தொழில், விவசாய கைத்தொழில் திட்டங்களுக்கு முதலீடுகளைக் கவர்வதற்கு வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு கடுமையான முயற்சிகளை மேற் கொண்டது. அனுமதிக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை 1983 ல் 77 ஆக விருந்து 1984 ல் 56 ஆகவும், 1985 ன் முதல் பத்து மாதங்களில் 44 ஆகவும் வீழ்ச்சியுற்றது.

4. உலக எண்ணெய் சந்தைகளில் 'ஒபெக்' தாபனத்தின் நிலைமை மீண்டும் ஸ்திரப்படுத்துவது குறித்து அல்ஜியர்சில் கூடிய லிபிய, இரானிய, அல்ஜீரிய அமைச்சர்கள் பேச்சு வார்த்தைகள் நடத்தினர்.

7. மொனராகலை மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டமொன்றைச் செயற்படுத்திவரும் பெல்வத்தை சீனிக்கம்பனி உற்பத்தி செய்யும் சீனியின் விலை தற்போதைய விலைகளில் இறக்குமதி செய்யப்படும் சீனியின் விலையை விடவும் அதிகமாக இருக்கும் என பத்திரிகைச் செய்தியொன்று தெரிவித்தது. இக்கம்பனி 1986 ம் ஆண்டில் 14,000 மெட்ரிக் தொன்களையும், 1987 ம் ஆண்டில் 15000 மெட்ரிக் தொன்களையும் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. தற்பொழுது நாட்டின் வருடாந்த சீனி நுகர்வு 270,000 மெட்ரிக் தொன் அளவில் இருக்கிறது.

8. 1986 ம் வருடம் சர்வதேச கடற்றொழில் ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் கடற்றொழில் துறையைப் பொறுத்த வரையில் இதனை ஒரு முக்கிய வருடமாக கருதவும், மீன்பிடி சமூகங்களுக்கு உச்சமட்ட உதவிகளை வழங்கவும் கடற்றொழில் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

11. நிதியமைச்சின் அறிக்கையொன்றின் பிரகாரம், 1983 ல் 20 புள்ளிகளாகவும் 1984 ல் 8 புள்ளிகளாகவும் இருந்த பணவீக்க விகிதம் 1985 2 புள்ளிகள் வரை வீழ்ச்சியடைந்துள்ளது.

14. கடன் நிவாரணமாக இலங்கைக்கு 24.5 கோடி யென்னை (8.3 கோடி ரூபா) வழங்க ஜப்பான் இணங்கியது.

15. கம்புள்ளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கால்நடைப் பண்ணைகளையும், சிறு கைத்தொழில்களையும், ஏனைய விவசாய நடவடிக்கைகளையும் விருத்தி செய்வதற்காக வேர்ல்ட்வீவ் இன்டர்நசனல் என்ற சர்வதேச தாபனம் 850,000 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

16. இலங்கையின் மின்சார பெருந்திட்டத்துக்கான நிபுணத்துவ, உபகரண உதவிகளை ஜேர்மன் வழங்கும். பண வடிவில் இவ்வுதவியின் பெறுமதி 6.1 கோடி ரூபாவாக இருக்கும்

25. இரத்தினபுரி, களுத்துறை மாவட்டங்களுக்கு மின்சார, நீர்ப் பாசன வசதிகளை வழங்கி, வெள்ளப் பெருக்குகளை கட்டுப்படுத் துமென எதிர்பார்க்கப்படும் களுகங்கை பலநோக்கு செய் திட்டம் குறித்த சாத்தியப்பாட்டு ஆய்வொன்றை நிதிப் படுத்த ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் கொள்கையளவில் இணங்கியுள்ளது.

28. கொழும்பு ஏல விற்பனைகளில் தேயிலைக்கான விலைகள் தொடர்ந் தும் வீழ்ச்சியுற்றுக்கொண்டே வந்தன. ஜனவரியின் கடைசி விற்பனையில் கிலோ ஒன்றுக்கான சராசரி விலை ரூ. 29.04 ஆக இருந்தது. இது 1974 ன் இதே காலப்பகுதியில் ரூ. 75.30 ஆகவும், 1985 ல் ரூ. 60.87 ஆகவும் இருந்தது.

31. ஒபெக்கின் பிரதான உற்பத்தி நாடான சவுதி அரேபியாவின் அதிகரித்த உற்பத்தியினாலேயே அண்மைய மாதங்களில் மசகெண்ணெய் விலை 50 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ள தென அவதானிகள் தெரிவித்தனர்.

பெப்ரவரி

5. திறைசேரியின் அண்மைய ஆய்வொன்றின் பிரகாரம், இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பண்டமாக தேயிலை யிலிருந்து 1986 ம் ஆண்டில் அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானம் கடந்த ஆண்டில் கிடைத்த 220 கோடி ரூபாவிலும் அரைவாசிக்கும் குறைவாக இருக்கும்.

6. இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் 125,000 மெட்ரிக் தொன் எண்ணெய்க்கான விலை கோரலை நிறைவு செய்தது. இதன் விளைவாக சர்வதேச எண்ணெய் விலைகளில் ஏற்பட்டுள்ள சரிவு இலங்கைக்கு எண்ணெய் இறக்குமதிகளில் கணிசமான சேமிப்புகளை உருவாக்க உதவும். கூட்டுத்தாபனத்தின் முன்னைய கொள்வனவின்போது பீப்பா ஒன்றுக்கானவிலை 27.18 அ. டொலராக இருந்தது. இம்முறை இது 20 டொலருக்கும் குறைவாக உள்ளது.

15. 1984 ல் 20.4 கோடி கிலோகிராமாக இருந்த இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 1985 ல் 19.8 கி. கிராமாக வீழ்ச்சியடைந் தது. கப்பற்றளம் வரையிலான சராசரி விலை 1984 ல் கிலோ ஒன்றுக்கு ரூ. 77.14 ஆக இருந்து 1985 ல் ரூ. 60.61 ஆக குறைந்திருந்தது. தேயிலை மூலமான வெளிநாட்டுச் செலா வணிச் சம்பாத்தியம் ரூ. 1400 கோடியிலிருந்து 1200 கோடி யாக வீழ்ச்சியடைந்தது.

24. எண்ணெய் விலைகள் தொடர்ந்தும் சரிவுற்று வந்து ஐரோப்பிய ஸ்தல சந்தையில் பீப்பாய் ஒன்றுக்கான விலை 16.25 அ. டொலராக இறங்கியிருந்தது. நான்கு மாதங்களுக்கு முன்னர் பீம்பாய் ஒன்றின் விலை 28.75 டொலராக இருந்தது.

27. இலங்கையில் ஒரு மருந்துப் பொருள் தொழிற்சாலையையும், தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கான தலைமைக் காரியாலய கட்டத்தையும் நிர்மாணிப்பதற்கென ஜப்பான் 39 கோடி ரூபாவை நன்கொடையாக வழங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தளம், அநுராதபுரம், பொலனறுவை போன்ற உலர் வலய மாவட்டக்களில் பெருந் தொகையான கால்நடைகள் வளர்க்கப்பட்ட போதிலும் விவசாய, குடிசனமதிப்பு புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்ட இவ்வரைபடம், குருணகல், கம்பகா மாவட்டங்களில் பசு/எருமைகளின் கூடிய செறிவு இருப்பதனை காட்டுகிறது.

பாற்பண்ணைக் கைத்தொழில்,

பாற்பண்ணைத் தொழிலினை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றி கடந்த 50 வருடங்களாக இலங்கையின் எல்லா அபிவிருத்தித் திட்டங்களிலும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. 1983 இலிருந்து ஐந்து பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. நிதியின் கிடைப்புத் தன்மைக்கு ஏற்ப இவை அமுலாக்கப்பட்டுள்ளன. இத் தொழிலின் முக்கியத்துவத்திற்கான காரணங்களை இம்முன்மொழிவுகள் யாவும் கொண்டிருந்தன. நாட்டின் வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதுடன், வேலைவாய்ப்பு, வருமானம் என்பவற்றைத் தோற்றுவித்து கிராமீயத் துறைக்குத் தேவையான போஷாக்கினையும் இது அளிக்கின்றது. ஒரு பசுவின் வருடாந்தச் சராசரிப் பால் உற்பத்தி, மந்தைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு என்பவற்றின் வாயிலாக ஒரு குறுகிய காலத்திற்குள் பாற்பண்ணைப் பொருட்களின் உற்பத்தியில் தன்னிறைவு காண்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை அடைவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான பண்ணைகளும் பல்வேறு அளவிலான தனியார் முதலீடுகளும் பயன்படுத்தப்படுகின்றன. மந்தை வளர்ப்பு, பால் கறத்தல், சேகரிப்பு பதனிடற் பொறிகள் ஆகிய நடவடிக்கைகளில் ஒரு சில பசுக்களின் உடைமையாளர்களிலிருந்து பல்தேசியக் கம்பனிகள் வரையிலும் ஈடுபடுத்தப்படவுள்ளன.

பற்பண்ணைத் தொழிலின் ஆரம்பம் மந்தை மேய்ப்பு யுகத்துடன் தொடர்புடையதாகும். இலங்கையில் இத் தொழில் ஆரம்பகால வரலாற்றுடன் (கி. மு. 500) தொடர்புபடுகின்றது. இங்கு ஆரம்பத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய வட இந்தியர்கள் பாரம் சுமப்பதற்கும் பால், வெண்ணெய் என்பவற்றைப் பெறுவதற்கும் மந்தைகளையும் எருமைகளையும் கொணர்ந்தனர். இன்று பாற்பண்ணைத் தொழில், சந்தைப்படுத்தல், பண்ணை முகாமை என்பவற்றை உள்ளடக்கிய ஒரு தனிக் கலையாக மாறியுள்ளது. ஆகையால் இயக்கம், அணுகுமுறை, அபிவிருத்தி என்பவற்றில் இது பல்தன்மை மிக்கமாக விளங்குகின்றது. இதே போன்று பாற்பண்ணை என்ற வார்த்தைப் பிரயோகமும பால் உற்பத்தி, சந்தைப்படுத்தல், பால் சேகரிப்பு, மந்தைவளர்ப்பு, உணவூட்டுதல் போன்ற பல்வேறு பணிகளையும் குறிக்கின்றது. இன்று பாற்பண்ணைத் தொழிலின் பணிகள் விஞ்ஞான, தொழினுட்ப அபிவிருத்தியின் ஒன்றிணைப்பாக விளங்குகின்றன; உடலியல், உடல்கூறியல், நுண் அணுவுயிரியல், இரசாயனம், போஷாக்கு போன்ற பல்வேறு துறைகளையும் உள்ளடக்கியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் பாற்பண்ணைத் தொழிலின் பங்கு

பாற்பண்ணைத் தொழில் விரிவான உற்பத்திச் செய்முறைகளுடன் தொடர்புபட்டுள்ளது. விலங்குணவு உற்பத்தி, பதனிடல் என்பவற்றிலிருந்து பாற்பண்ணைப் பொருட்கள் நுகர்வோரைச் சென்றடைவது வரையிலான பணிகளை இது உள்ளடக்குகின்றது. இந்நீண்ட செய்முறை இரு உப கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மந்தைகளை வளர்த்து, உணவூட்டி, பால் கறப்பது வரையிலான பணிகளை முதலாவது கட்டம் உள்ளடக்குகின்றது. இது மிகவும் எளிமையானதாகத் தென்பட்ட போதிலும், பால் உற்பத்திச் செய்முறையில் எழுபது சதவீதத்தை உள்ளடக்குகின்றது. இக்கட்டத்தில் பால் உற்பத்திக்கான அத்திவாரம் இடப்படுகின்றது. இது பல்வேறுபட்ட தொழில்களை உள்டக்குகின்றது. இரண்டாவது கட்டம் மீதி 30 சதவீதத்தை உள்ளடக்குகின்றது. சேகரிப்பு, பதனிடல், போத்தலில் அடைத்தல், பெட்டியிலடைத்தல், சந்தைப்படுத்தல், விநியோகம் என்பன இக்கட்டத்தில் இடம்பெறுகின்றன. இக்கட்டத்திலேயே பாற்பண்ணைப் பொருளாதாரம் பிரதான பங்கினை வகிக்க ஆரம்பிக்கின்றது.

இலங்கை 65,500 சதுர கி.மீற்றர் அல்லது 16.2 மில்லியன் ஏக்கர் நிலப் பரப்பினைக் கொண்டுள்ளது. இதில் நான்கிலொரு பங்கு சாகுபடிக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. 1981 அளவில் மரப் பயிர்த்துறை இதில் 50 சதவீதத்தையும் நெற் பயிர்த் துறை 37 சதவீதத்தையும் உள்ளடக்கின.

பல்வேறுபட்ட விவசாயக் காலநிலையின் விளைவாக, பல்வேறு விவசாயப் பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. நாட்டின் மொத்த சனத்தொகை 1 கோடி 50 லட்சம் என மதிப்பிடப் பட்டுள்ளது. இவர்களுள் 80 சதவீதமானோர் கிராமங்களில் வாழ்கின்றனர். இவர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ விவசாயத்துடன் தொடர்புபட்டுள்ளனர். விவசாய நிலத்திற்கும் சனத்தொகைக்கும் இடையிலான இப்பரம்பல் பண்ணைத் தொழில் மீதும் பண்ணை அபிவிருத்தி மீதும், ஒரு சில மேலைத் தேசங்களில் போன்று தீவிர பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. ஆகையால் பாற்பண்ணை தொழிலுடன் தொடர்புடைய திட்டங்கள் யாவும், இப்பௌதிக மட்டுப்பாடுகளுடன் இணைந்து செல்லக் கூடிய வகையில் பின்பற்றப்படுகின்ற தொழினுட்பத்தில் தங்கியுள்ளது. நிலத்தின் மீதான இப்பாரிய அமுக்கம் வாடகை, பகிர்வு சார்ந்த பிரச்சினையும் தொழினுட்பத் தெரிவு, அதன் இயக்கம் என்பவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது.

பாற்பண்ணை, கால்நடை என்பன தொடர்பான தரவுகள் மிகக் குலறவாகவும் நம்ப இயலாதவையாகவும் உள்ளன. புதிய மதிப்பீடுகளின்படி, மந்தைகளின் மொத்த எண்ணிக்கை 17 லட்சமாகும்; இவற்றுள் 17 சதவீதம் கறுப்பு இனங்களாகும். 9 லட்சம் எருமைகளும் உள்ளன. மொத்த உள்ளூர் உற்பத்தியில் இதன் பங்கு 2 சதவீதத்திற்கும் குறைவாகும். நாட்டின் மொத்த விவசாய வெளியீட்டில் இதன் பங்கு 8 சதவீதமாகும். பால் தருகின்ற மிருகங்களின் எண்ணிக்கை 552,000 என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஏறக்குறைய 75 சதவீதம் பசுமாடுகளாகும். இவை நாட்டின் வறண்ட வலயத்தில் செறிவாக உள்ளன; வறண்ட வலயத்தில் நாட்டின் கால்நடைகளுள் 70 சதவீதம் உள்ளன.

பால் உற்பத்தி தொடர்பான தரவுகள் போதிய அளவில் இல்லை. பல்வேறு மூலகங்களிலிருந்தும் பெறப்பட்டுள்ள தரவுகள் ஒன்றுடனொன்று முரணாக உள்ளன. ஒரு நாளைக்கு 4,00,000 மில்லி லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுவதாக நுகர்வு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால், பால் தரக்கூடிய மிருகங்களின் கணிப்பீட்டின்படி இது ஒரு நாளைக்கு 7,00,000 மில்லி லீற்றர்களாக இருக்க வேண்டும். பெரும்பாலான மூன்றாவது உலக நாடுகளைப் போன்று, இந்த உற்பத்தியில் பெரும் பகுதி வீட்டில் நுகர்விற்கு வைத்துக் கொள்ளப்படுகின்றது. மீதி தரகர்கள் வாயிலாக உள்ளூர்ச் சந்தையை அடைகின்றது. சந்தைக்கு வருகின்ற பாலை தேசிய பால்சபை கொள்வனவு செய்கின்றது. ஒரு நாளைக்கு 4,50,000 மில்லி லீற்றர் பாலைப் பதனிடக்கூடிய கொள்ளளவு உள்ள பொறித் தொகுதியையும் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் மேலும் நான்கு பொறித் தொகுதிகளையும் கொண்டுள்ளது. இவை பாஸ்ரர் முறையில் பதனிடப்பட்ட பால்,

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உத்தேச செய்திட்டம் முழுநாட்டையும் உள்ளடக்கியதாகும். இத்திட்டத்துக்காக இலங்கை ஐந்து பாற் கொட்டில்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. **யாழ்ப்பாணம்** : யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா.
2. **கொழும்பு** : கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, காலி, கம்பகா.
3. **கண்டி** : கண்டி, மாத்தளை, நுவரெலியா
4. **பொலனறுவை** : பொலனறுவை, அநுராதபுரம், புத்தளம், குருணாகல், திருகோணமலை,
5. **மொனராகலை** : மொனராகலை, பதுளை, அம்பாறை, அம்பாந்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4 -ம் பக்கத் தொடர்ச்சி)

கிருமி நீக்கிய பால, கட்டிப் பால், பால் மா என்பவற்றுடன், சீஸ், வெண்ணெய், ஐஸ் கிறீம் போன்ற பாற் பொருட்களையும் தயாரிக்கின்றன. இத்துடன் ஒரு சர்வதேசக் கம்பனியால் நிறுவப் பட்ட ஒரு நாளைக்கு 3,00,000 மில்லி லீற்றர் கொள்ளவு உள்ள ஒரு பொறித் தொகுதியையும் பால் சபை கொண்டுள்ளது. இப்பொறித் தொகுதி பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா, வெண்ணெய் என்பவற்றை உள்ளீடாகக் கொண்டுள்ளது.

உற்பத்தி செய்யப்படுகின்ற மொத்தப் பாலில் ஏறக்குறைய 40 சதவீதத்தை உலர் வலையம் உற்பத்தி செய்கின்றது. நாட்டின் 70 சதவீதமாக கால் நடைகளை இவ் வலயம் கொண்டிருப்பதனால் இந்த உற்பத்தி போதியதாக இல்லை. ஈரவலயம் (மலைநாடு) 25 சதவீதமான பாலை உற்பத்தி செய்கின்றது. மீதிப் பால் இடைநிலை வலயங்களிலிருந்து பெறப்படுகின்றது.

நாட்டின் மொத்தப் பாலில் 25 சதவீதத்தை உற்பத்தி செய்கின்ற ஈரவலயம் (மலைநாடு), தேசிய பால் சபையின் பால் சேகரிப்பில் 48 சதவீதத்தை அளிக்கின்றது. ஒரு புறத்தில், குறைந்த போஷாக்கு மட்டத்தைக் கொண்டுள்ள உற்பத்தியாளர்களால் நுகரப்பட வேண்டிய பால் அவர்களிடமிருந்து எவ்வாறு பெறப்படுகின்றது என்பதையும், மறுபுறத்தில், பால் உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படுகின்ற நிறுவன ரீதியான சேவையில் வேறுபாட்டையும் காட்டுகின்றது. நாட்டின் மொத்தக் கால்நடைகளுள் 70 சதவீதத்தையும் பால் உற்பத்தியில் 40 சதவீதத்தையும் கொண்டுள்ள உலர் வலயம், தேசிய பால் சபையின் பால் சேகரிப்பில் 85 சதவீதத்தைக் கொண்டுள்ளது. வறண்ட வலயத்தில் தேசிய பால் சபையினால் அளிக்கப்படுகின்ற விலைகளுக்கும் உள்ளூர்ச் சந்தையில் அளிக்கப்படுகின்ற விலைகளுக்கும் இடையிலான வேறுபாடு கவனத்தை ஈர்க்கின்ற இன்னொரு அம்சமாகும். இது தேசிய பால் சபையினால் அளிக்கப்படுகின்ற விலைகளை உலர் வலயப் பால் உற்பத்தியாளர்கள் அனுபவிக்க இயலாதவாறு தடுக்கின்றது எனலாம்.

பால் நுகர்வு மக்களின் வருமான மட்டங்களுக்கு ஏற்பவே அமைந்துள்ளது. பாற் பண்ணைத் தயாரிப்புக்களின் நுகர்வும் இவ்வாறு இருப்பதனை நாம் அவதானிக்கலாம். உயர் வருமான வகுப்பினரே பொதுவாக பாலையும் பாற் தயாரிப்புக்களையும் மிகையாக நுகருகின்றனர். ஒரு இலங்கைப் பிரசைக்கு ஒரு நாளைக்கு 5.5 அவுன்சு பால் தேவை என வைத்திய ஆராய்ச்சி நிலையம் தெரிவிக்கின்றது. எனினும், இது வயது, சமூக அடிப்படையில் ஆராயப்படல் வேண்டும். உதாரணமாக, ஒரு வயதுக்கு குறைந்த பிள்ளைக்கு ஒரு நாளைக்கு 26.3 அவுன்ஸ் பால் தேவைப்படுகின்றது.

பாலுக்கான கேள்வியும் அதன் நுகர்வும் உள்ளூர் உற்பத்தியை விடவும் 50 சதவீதம் அதிகமாகும். இதனைப் பிரதான பால் உற்பத்தி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. வருடாந்தம் ஏறக்குறைய 12,000 தொன் பாற்பண்ணைப் பொருட்கள் இறக்குமதி செய்யப் படுகின்றன; இது 4,00,000 மில்லி லீற்றர் பாலுக்குச் சமமாகும். 1982 இல் ரூபா 48 கோடியாகவிருந்த பாற்பொருட்களின் இறக்குமதி 1984 இல் ரூபா 65.1 கோடியாக அதிகரித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படுகின்ற பாலில் முழு ஆடை, அரை ஆடைப்பால் மா 80 சதவீதமாகும். நெதர்லாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா என்பன பிரதான ஏற்றுமதி நாடுகளாகும். மீதி கட்டிப் பாலாகும்; வெண்ணெய், பாலாடைக் கட்டி, தயிர் நெய் என்பன சிறிதளவு இறக்குமதி செய்யப் படுகின்றன. பாற்பொருட்கள் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை ஏறு வரிசையில் அமைந்துள்ளன. குழந்தைப் பால் மீது 5 சதவீத தீர்வையிலிருந்து வெண்ணெய், பாலாடைக்கட்டி என்பவற்றுக்கு 100 சதவீதம் வரையில் இது அதிகரித்துச் செல்லுகின்றது.

பாற்பண்ணைத் தொழிலின் முக்கியத்துவம், வளர்ச்சித் தேக்கம், இத்துறை எதிர் நோக்குகின்ற தடங்கல்கள் என்பன 1984 ஆகஸ்டில் தயாரிக்கப்பட்ட ''கால்நடைத்துறை தந்திரோபாய அறிக்கை'' யின் அறிமுகத்தில் சுருக்மாகக் குறிப் பிடப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளினதும் முகவர்களினதும் உதவியுடன் பாற்பண்ணைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் அண்மைக்காலத்தில் தீவிரப்படுத் தப்பட்டுள்ளன. உலக வங்கியின்

(20 -ம் பக்கம் பார்க்க)

அட்டவணை 1

நிலப் பாவனை — மரப் பயிர்களும் ஏனைய பயிர்களும்

நிலப் பாவனை	ஏக்கர் (000)	சதவீதம்
தேயிலை	604	13.5
இறப்பர்	550	12.3
தென்னை	1,100	24.5
மரப் பயிர்களின் மொத்தம்	(2,254)	(50.3)
நெல்	1,650	36.8
ஏனைய பயிர்கள்	(2,232)	(49.7)
மொத்தக் களப் பயிர்கள்	4,486	100.0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் போஷாக்கு

பால் ஒரு பூரண உணவெனக் கருதப்படுகிறது. குட்டிகளுக்கு முலைப் பால் கொடுக்கும் பிராணிகளின் உலகிலே குட்டிகள் ஜீரண மண்டலம் மற்றும் மாற்றுணவுகளை ஜீரணிப்பதற்குப் போதிய சக்தி பெறும்வரை பாலே அவற்றின் தனி உணவாக விளங்குகிறது. மனிதக் குழந்தைகளின் வளர்ச்சிக் கிரமம் மற்றும் முலையூட்டிகளின் குட்டிகளுடைய வளர்ச்சிக் கிரமத்திலிருந்து வேறுபட்டதாகும். ஏனென்றால், மனிதக் குழந்தைகளின் பிறப்புக்கும் முதிர்ச்சிக்குமிடையேயுள்ள காலம் மிக நீளமானதாகும். இக்காலத்தில் வெவ்வேறு உருவங்களிலும் மூலங்களிலிருந்தும் பெறப்படும் பால் அத்தியாவசிய போஷாக்குப் பொருள்களில் பெரும் பகுதியை வழங்குகிறது. பால் மற்றும் உணவு வகைகளை விட சிறந்ததாகும். ஏனெனில், பால் அத்தியாவசிய கனிசங்களையும் ஜீவ சத்துக்களையும் சம விகிதத்திலும் சுலபமாகக் கிரகிக்கக் கூடிய உருவத்திலும் வழங்குகிறது.

மேற்கண்ட அட்டவணைப்படி, சத்தமான பாலிலும் பாற்பொருள்களிலும் (உலர்ந்த உருவில் காணப்படாதவை) நீரும், அதையடுத்து கொழுப்புகளும் புரதமும் லக்டோசும் சாம்பலும் கல்சியமும் வெவ்வேறு சேர்க்கைகளில் அடங்கியுள்ளன. ஒப்பியல் ரீதியாக, வெண்ணெய் (80.6 சதவிகிதம்) பட்டர் எண்ணெய் (99 சதவிகிதம்), பாலடைக்கட்டி (32 சதவிகிதம்) உலர்ந்த ஆடைப் பால் (65 சதவிகிதம்) போன்ற பாற்பொருள்களில் கொழுப்பு அதிக அளவில் அடங்கியுள்ளது. அதேவேளை புரதம் உலர்ந்த பாலாடை (13.4 சதவிகிதம்) யிலும் தெளிந்த இறுகிய ஏடெடுத்த பாலிலும் (12.7 சதவிகிதம்) உலர்ந்த ஏடெடுத்த பாலிலும் (35.9 சதவிகிதம்) பாலடைக்கட்டி (25.9 சதவிகிதம்) யிலும் அதிக அளவிலுள்ளது. கல்சியம் உலர்ந்த ஏடெடுத்த பாலிலும் (1308 மில்லிகிராம்) பாலடைக் கட்டியிலும் (750 மில்லிகிராம்) நிறையக் கிடைக்கிறது.

பாலும் பாற்பொருள்களும் பெரும்பாலான ஜீவாதாரமான ஜீவசத்துக்களாலும் கனிசங்களாலும் வளமூட்டப்படுகின்றன. அட்டவணை - 2 இந்தப் பாற்பொருள்களில் கிடைக்கும் ஒருசில ஜீவசத்துக்களை எடுத்துக் காட்டுகிறது:

மூளையின் வளர்ச்சி, மன வலிமையின் முதிர்வு ஆகியவற்றின் ஆரம்ப வருடங்களில் பால் முற்றாக அத்தியாவசியமாகும். ஆதலால், வாழ்க்கையின் ஆரம்ப கட்டங்களில் பால் அருந்தாமையும் போஷாக்குக் குறைவும் ஆயுட் காலம் வரை உள வளர்ச்சியைத் தடைப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறது.

குழந்தைகளின் ஆரம்ப வளர்ச்சிக் கட்டங்களில் தாய்ப்பாலூட்டலே சிறந்த வகையான உணவென்பதில் சந்தேகமில்லை. எனினும், வளர்ச்சிக் கட்டங்கள் முழுவதும் தாய்ப்பாலூட்டல் சாத்தியமல்ல. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது வளர்ச்சிக் கட்டங்களில், குழந்தை உடற்செழிப்பியல் ரீதியாக வயதுவந்த பருவத்தை அடையும் வரை இந்த உணவு இடைவெளியின் ஒரு பகுதியை நிரப்ப, பாலும் பாற்பொருள்களும் அத்தியாவசியமாகும். இவர்களைத் தவிர, பால் கொடுக்கும் தாய்மார், பலம் குன்றியோர், வயதானவர்கள் ஆகியோருக்கும் பால் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது.

அட்டவணை — 1

பாலுணவுப் பொருள்களில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதியின் அமைப்பு

உற்பத்திப் பொருள்	தண்ணீர்	கொழுப்பு	புரதம்	லக்டோஸ்	சாம்பல்	கல்சியம்
சத்தமான பால்	87.0	3.9	3.5	4.9	0.7	118
உலர்ந்த பாலாடை	0.7	65.0	13.4	17.9	3.0	—
வெண்ணெய்	16.0	80.6	0.6	0.4	2.4	20
பட்டர் எண்ணெய்	0.2	99.5	0.3	—	—	121
ஆடை நீக்கிய பால்	90.5	0.1	3.6	5.1	0.7	121
நொதித்தபால் (யோகர்ட்)	89.0	1.7	3.4	5.2	0.7	120
தெளிந்த இறுகிய ஏடெடுத்த பால்	66.0	0.4	12.5	18.4	2.5	—
இனிப்பூட்டிய இறுகிய பால்	26.5	8.1	8.1	11.4	1.6	262
ஐஸ்கிறீம்	63.2	10.6	4.5	6.6	0.8	146
உலர்ந்த ஏடெடுத்த பால்	3.0	0.8	35.9	52.3	8.0	1308
உலர்ந்த மோல்டட் பால	2.6	8.3	14.7	20.0	3.6	288
பாலடைக்கட்டி	37.0	32.2	25.0	2.1	3.7	750

அட்டவணை - 2

சில பாற்பொருள்களில் அடங்கியுள்ள ஜீவசத்துக்கள்

பொருள்	ஏ கரோட்டின் (ச அ/100 கி)	பீ1 தயோமைன் (மி.கி./கி.கி.)	பீ2 ரிபோபிலேவின் (மி.கி./கி.கி.)	நிக்கொடின் அமிலம் (மி.கி./கி.கி.)	பீ6 பைரிடொக்ஸைன் (மி.கி./கி.கி)	பன்டோதினிக் அமிலம் (மி.கி./கி.கி)	பயோடின் (மி.கி./கி.கி.)	பீ12
பால்	156	0.44	1.75	0.94	0.64	3.46	0.31	.0043
வெண்ணெய்	3108	0.03	0.16	0.5	0.4	2.3	—	—
ஏடெடுத்த பால்	9	0.4	1.7	0.86	0.45	3.6	0.16	.0038
ஐஸ்கிறீம்	523	0.48	2.3	1.1	—	—	—	—
செடார் பாலாடைக்கட்டி	1196	0.30	5.0	0.49	0.75	2.7	0.20	.013

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் கால்நடைகள்

பால் உற்பத்தி வீழ்ச்சிக்கான காரணங்கள்

எம். யூ. ஏ. தென்னக்கோன்

விலங்குகளின் பிறப்பியைபு

ஏறக்குறைய 188 கிலோ சராசரி தசை எடையைக் கொண்ட ஓர் உள்நாட்டுக் கறவைப் பசு பால் சுரத்தலொன்றுக்கு ஏறக்குறைய 270 கிலோவிலிருந்து 450 கிலோ வரையான பாலைத் தருகிறது. 300 கிலோ சராசரி தசை எடையைக் கொண்ட ஓர் உள்நாட்டுப் பெண் எருமை பால் சுரத்தலொன்றுக்கு ஏறக்குறைய 500 கிலோ பால் தரவல்லது. மித சீதோஷ்ண நிலையில் உயர் இனப்பசுவொன்று பால் சுரத்தலொன்றுக்கு 2,000 கிலோவுக்கு மேற்பட்ட பால் உற்பத்தி செய்கின்றது. பாலின் தின உற்பத்தி அடிப்படையில், ஓர் உள்நாட்டுப் பசு 2 பைந்திலிருந்து 5 பைந்து வரையான பாலை உற்பத்தி செய்கிறது. ஆனால், மித சீதோஷ்ண நிலையில் பசுவொன்று 15 பைந்துக்கு மேற்பட்ட பாலை உற்பத்தி செய்கிறது.

சீதோஷ்ண நிர்ப்பந்தங்கள்

விலங்கின் பரிமாணத்துக்கும் சீதோஷ்ண நிலைக்கும் பரஸ்பர சம்பந்தம் இருப்பதாகத் தோன்றுகிறது. வேனிற் காலத்தில் பாற்பண்ணைக் கால் நடைகள் பாதிக்கப்படுகின்றன; அப்போது விலங்குகள் தங்கள் உடல்களிலிருந்து வெப்பத்தை இழப்பது மிகக் கஷ்டமாகிவிடுகிறது. காற்றின் வெப்பநிலை 26.5 பாகை சென்டி கிரேட் (70 பாகை பாரன்ஹைட்)டுக்குக் கீழே இருக்கும் போது, இயற்கை முறைகள் மூலம் வெப்பத்தை உடனடியாக இழக்க முடியும். காற்றின் வெப்ப நிலைகள் இந்த வரம்புக்கு மேல் உயரும்போது, இயற்கை முறைகளில் இழக்கப்படும் வெப்பம் போதாததாகின்றது. சுவாச வீதங்களை அதிகரித்து, கலாசப்பைகளை விரிவாக்குவதன் மூலம் அதிகவெப்பத்தை வெளியேற்ற வேண்டியிருக்கிறது.

காற்றின் வெப்பம் உடல் வெப்ப நிலையை அடையும் போது அல்லது அதைமிஞ்சி, வெப்பக் கதிர் வீச்சு வழியும் போது, ஆவியாவதன் மூலம் வெப்பம் முழுதும் இழக்கப்பட வேண்டும். காற்றின் வெப்ப நிலைகள் அதிகரிக்கும்போதே ஈரப்பதன் முக்கியமாகிறது. ஏனென்றால், வெப்பத்தில் அடங்கியுள்ள நீராவி மேலெழும் போது, விலங்கின் உடலிலிருந்து நீரை உட்கவர்வதற்கான அதன் சக்தி வீழ்ச்சியடைகிறது. ஈரப்பதமுள்ள அயனமண்டலங்களில் காற்றின் வெப்ப நிலை உயரும் போது, வெப்பத்தை அகற்றும் பிரச்சினைகள் மிக அவசரமானவையாகி விடுகின்றன. ஜீரண முறையினால் அதிகரிக்கும் வெப்பத்தைக் குறைப்பதற்காகப் பசி அடிக்கடி குறைந்து விடுகிறது. இப் பிரச்சினைகளை இலங்கையின் பெரும்பாலான பகுதிகளில் தெளிவாகக் காணலாம். அங்கு வெப்ப நிலைகள் பெரும்பாலும் 80 பாகை பாரன்ஹைட்டுக்கு மேலேயே இருந்து வருகின்றன; அத்துடன் ஈரப்பதனும் வருட முழுவதும் நிலையாக அதிக அளவிலேயே இருந்து வருகிறது.

விலங்குகளின் ஆரோக்கியக் குறைவு

வெப்பமான ஈரப்பதமுள்ள அயன மண்டலங்களில் கால் நடைகளைப் பீடிக்கும் நோய்களின் பட்டியல் நீண்ட தொன்று. மித வெப்பமுள்ள நாடுகளில் வைரசு (விஷநீர்) களாலும் பக்டீரியா நுண்கிருமிகளாலும் ஏற்படும் நோய்களில் பெரும்பாலானவையும், அத்துடன் அங்கு மறைந்துவிட்ட கோமாரி நோய், கால் நடைகளுக்கு வரும் புடைச்சவவு நிமோனியா முதலிய நோய்களும் அப்பட்டியலில் அடங்கும். மேலும், குறிப்பாக அயனமண்டலங்களில் ஏற்படும் நோய்கள் அல்லது மிதவெப்ப நாடுகளில் விட அயனமண்டல நாடுகளில் மிகக் கடுமையாகத் தாக்கும் டைப்பரஸோமியாஸிஸ், உண்ணிகாவும் ஜுரம், இரத்தத்திலும் குடலிலுமுள்ள ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய்கள் முதலியனவும் இப்பட்டியலில் சேரும்.

அயன மண்டலங்களில் கால் நடைகளை வளர்ப்பதில் கடும் சீதோஷ்ண நிலையும் நோய்களும் இரு பிரதான இடுக்கண்களாயிருப்பதால், அயன மண்டலப் பகுதிகளுக்கேற்ற சிறந்த கால் நடைகளைப்பற்றி முடிவு செய்வதில் விலங்கு வளர்ப்போர் இன்னும் பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர். இறக்குமதி செய்யப்பட்ட ஸெபு வர்க்கங்கள் போன்ற சில இனங்கள் அதிக வெப்பத்தையும் குறைவான ஈரப்பதனையும் தாங்கிக் கொள்கின்றன. ஆனால், ஈரப்பதன் அதிகமாயிருக்கும்போது அவை அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றன. ஸாஹிவல், சிந்தி, தார்பாகர் ஆகிய இனங்கள் அதிக வெப்பத்தையும் சற்றே அதிக ஈரப்பதனையும் சகித்துக் கொள்ளும் சக்தியுள்ளவை. எனவே, இவ் வர்க்கங்கள் உலர் வலயத்தில் உள்ளூர் வர்க்கங்களுடன் கலப்பினப் பெருக்கத்துக்கு மிகச் சிறந்தவையாகுமெனத் தோன்றுகிறது. ஐரோப்பிய வர்க்கங்கள் அயன மண்டல மேட்டுக் காணிகளில் (உதாரணமாக அம்பே வெல) உள்ள குளிர்ச்சியான மித சீதோஷ்ண நிலைகளுக்குத் தங்களைச் சற்றே திருப்திகரமாகச் சரிக்கட்டிக் கொள்ளுகின்றன. ஆனால், குறைந்த குத்துயரமுள்ள பகுதிகளில் (நாட்டின் மத்திய பிரதேசம், தெங்கு வளரும் முக்கோணப் பிரதேசம் முதலியன) அதிகரிக்கும் வெப்பத்தினாலும் ஈரப்பத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞலும் அயன மண்டல நோய்களாலும் அவற்றின் இசைவாக்க சக்தி குன்றிவிடு கிறது.

இந்தச் சீதோஷ்ணத் தடை களின் காரணமாக, மித சீதோஷ்ணமுள்ள நாடுகளி லிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படும் விலங்குகளின் பிறப் பியல் விருத்தி முயற்சி கடின மாகிவிடுகிறது. இத்தகைய விலங்குகள் இலங்கையில் முதற் கன்றீனுதல் பிந்திய வயதிலேயே நடைபெறுகிறது. நியூஸிலாந் திலிருந்து இறக்குமதி செய்யப் பட்ட கன்றீனு ஜெர்ஸி இனப் பசுக்கள் இலங்கையிலே சராசரியாக 35 மாதங்களான பின்பே தங்கள் முதற்கன்றை ஈன்றன; ஆனால், இவை தங்கள் சொந்த நாட்டில் 24 மாதங் களுக்கும் 30 மாதங்களுக்கும் இடைப்பட்ட வயதில் தங்கள் முதல் கன்றைப் போட்டிருககு மென்று ந‌டராஜா (1970) கூறுகிறார். 1956 ம் ஆண்டில் மகாதேவனும் இதே போலத் தெரிவித்தார்.

ஐரோப்பிய விலங்குகள் அயனமண்டல நாடுகளுக்குக் கொண்டுவரப்படும்போது, ஆரம்பத்தில் இனப் பெருக்கத் தொழில் செய்யக் கஷ்டப்படு கின்றன – அதாவது ஆண்விலங்கு கள் பிரியம் காட்டாது விறைப் பாயிருக்கின்றன; பெண் விலங்கு களில் சூலகச் சக்கரத்தின் சுழற்சிகள் ஒழுங்காக நடை பெறுவதில்லை. இறக்குமதி செய்யப்பட்ட விலங்குகள் அயன மண்டல சூழலில் குடியேறி நீண்ட காலத்துக்குப்பிறகு கூட உடனீர்ப் பிரச்சினைகள், தோல் கோளாறுகள், உரோமங் கொட்டுதல் ஆகியவற்றால் பாதிக்கப்படுகின்றன.

தீனியின் மோசமானதன்மை

இலங்கையின் உலர்வலயத் தில் நிகழ்வது போல், குறிப்பாக மாரிகாலமும் வறட்சிக்காலமும் மாறிமாறிவருவதன் காரண மாக, வெப்பமும் ஈரப்பதனும் ஏற்றத் தாழ்வாக மாறுவதால், இயற்கையாகக் இடைக்கும் இரையின் தன்மையும் அளவும் பெருமளவுக்கு மாறுபடு கின்றன. மழைகாலத்தில் இரை அபரிமிதமாகக் கிடைத்தபின், வறட்சிக்காலத்தில் அது தட்டுப் பாடாகி விடுகிறது.

தீனியின் தன்மை ஒருபுற மிருக்க, வறட்சிக்காலத்தில் புல் மேய்வதற்காகக் கடும் சூரிய வெப்பத்தில் இடத்துக்கிடம் செல்ல வேண்டியிருப்பதாலும் விலங்கு பாதிக்கப்படுகிறது. உலர் வலயத்தில் மாரிகாலத்தின் நடுப்பகுதியிலிருந்து இறுதிவரை நீர் நிலைகள் ஏராளமாயிருப் பதோடு புல்லினங்களும் அபரி மிதமாகவும் நியாயமான அளவுக்கு நல்ல தரமானவை யாகவும் கிடைக்கின்றன. எனவே, விலங்கு அதன் பரா மரிப்புக்கும் வளர்ச்சிக்கும் தேவையான அளவு புல்லைச் சுல பமாகக் கண்டுபிடிக்க முடியும். எனினும், வறட்சிக்காலத்தின் நடுப்பகுதியில் குறிப்பாக உலர் வலயத்தில் புல்லினங்கள் கிட்டத்தட்ட மறைந்து விடு கின்றன. ஒரு வறட்சிப்பருவம் யாழ்ப்பாணத்தில் 8 மாதங் களும் பொலநறுவையிலும் மட்டக்களப்பிலும் 3 மாதங்களு மாக வேறுபடலாம். இதன் விளைவாக, ஒரு சில இளந்தளிர் கள் தான் ஏற்றுக்கொள்ளத் தக் கனவாயிருக்கின்றன. விலங்கு தினமும் நெடுநேரம் மேய்ந்த போதிலும் அதன் பராமரிப்புக் குப் போதிய தீனியை அதனால் கண்டுபிடிக்க முடியவில்லை. கடும் சூரிய வெப்பத்தில் உருசியான புல்லையும் தாகத்தைத் தீர்துக் கொள்ளத் தண்ணீரையும் தேடிக் காண அதற்குப் பெரு மளவு சக்தி தேவைப்படுவதால் அதன் உடல் நிறையும் குறை கிறது. சில சமயங்களில் விலங்கு இதற்காகத் தினமும் 10 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டும். நீண்ட வறட்சிப்பரு வத்தைத் தொடர்ந்து மழை காலம் தொடங்கியதும் புல் அபரிமிதமாகக் கிடைப்பதால், விலங்குகளும் துரிதமாக வளர்ச்சி யடையும் என எதிர்பார்க்கப்படு கிறது. ஆனால், எதிர்பார்ப் பதற்கு மாறாக, அவை மாரி காலம் தொடங்கியதற்குப்பின் சிறிது காலம்வரை உடல் நிறையைத் தொடர்ந்து இழந்து வருகின்றன. புதிய புல்லினங் களில் அதிக ஈரப்பசை அடங் கியிருக்கிறது. இதனால் ஒரு விலங்கு தின்னக்கூடிய அளவு அதன் சாதாரண தேவையைவிட இன்னும் குறைவாகவே இருக் கிறது. (இரையையும் தண்ணீரை யும் தேடிக் கடும் சூரிய உஷ்ணத் தில் அலைந்து திரிவதால் சக்தி வீணவதைத் தவிர்ப்பதற்காக, இஸ்ரவேலிலும் ஆஸ்திரேலியா விலுள்ள குயின்ஸ்லாந்திலும் விலங்குகளை இரவில் மேயவிட்டுப் பரீட்சித்தார்கள். அதன் பெறு பேறுகள் பேருற்சாகமூட்டு வனவாயுள்ளன.)

அயன மண்டலத்திலுள்ள பல புல் வகைகளில் அடங்கி யுள்ள பக்குவமாகாத புரதம் 14 சதவிகிதத்துக்கும் குறை வெனச் சொல்லப்படுகிறது. சில புல் வகைகளில் 4 சதவிகிதம் மட்டுமேயான மிகக்குறைந்த புரதம் அடங்கியுள்ளது. விலங்கு களின் வளர்ச்சிக்கும் பராமரிப் புக்கும் உற்பத்திக்கும் இயற்கைப் புல்லினங்களில் அடங்கியுள்ள இந்த வரையறுக்கப்பட்ட புரதத்தைச் சரிவர உபயோகிப் பதற்குக் கடும் வெப்ப நிலையும் விலங்குகளின் ஆரோக்கியக் குறைவும் தடையாயிருக் கின்றன. எனினும், நாட்டின் மத்திய பகுதியிலும் மலைநாட்டி லும் புகுத்தப்பட்ட புல்லினங் களில் பெரும்பாலானவை உற் பத்தி செய்யும் பூண்டுகளில் குறிப்பிடத்தக்கவாறு அதிக புரதம் அடங்கியுள்ளதெனப் பல ஆராய்ச்சிப் பரிசீலனைகள் சுட்டிக் காட்டுகின்றன.

இலங்கையின் வறண்டுலர்ந்த பிரதேசங்களிலுள்ள மேய்ச் சற்றரைகளில், ஈரப்பசைக் குறைவால் நீண்ட காலம்வரை

(12 –ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன் வசதிகள்

1970 களின் இரண்டாம் பாதி வரை பாற்பண்ணை விவசாயிகளுக்குக் கடன் வசதிகள் வழங்குவதற்கு ஒரு குறிப்பான திட்டம் உருவாக்கப்படவில்லை. எனினும், பாற்பண்ணைகள் சம்பந்தமாக அதற்கு முன்பு தெரிவிக்கப்பட்ட யோசனைகளில் இக்கடன் வசதிகள் பால்பண்ணை அபிவிருத்தியின் ஓர் இணைந்த பாகமாக அமைய வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருந்தது. பாற்பண்ணை அபிவிருத்திக்கான முதலாவது முறைப்படியான கொடுகடன் திட்டம் சர்வதேச அபிவிருத்திச் சங்கமும் இலங்கை அரசாங்கமும் சேர்ந்து அமுல் செய்த திட்டத்துடன் தொடங்கப்பட்டது. பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தில் பங்குபற்றும் விவசாயிகளுக்குரிய நிறுவன ரீதியான கொடுகடன் தேவைகளைச் சமாளிப்பதற்காக, சர்வதேச அபிவிருத்திச் சங்கம் 38,75,000 ரூபா வரை உதவி நல்கியது. இந்த நிதிகள் இரு அரசவங்கிகளான மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றினிடையே சம அடிப்படையில் ஒதுக்கப்பட்டன. நிர்வாகச் செலவுகளைச் சமாளிப்பதற்காக 4 சதவிகித எல்லை வட்டி அறவிடப்பட்டது. கடன் வாங்கும் பாற்பண்ணை விவசாயிகள் செலுத்தவேண்டிய வட்டி 10 சத விகிதம் என நிர்ணயிக்கப்பட்டது.

இத்திட்டம் சம்பந்தமாகக் கடன் பெறுவதற்கான தகுதி, கடன் வாங்கும் விவசாயிகள் மேய்ச்சல் நில அபிவிருத்திக்குத் தகுந்த நிலமாகக் குறைந்த பட்சம் இரண்டு ஏக்கர் காணியாவது வைத்திருக்க வேண்டும்; கடனுக்கு விண்ணப்பிக்கும் விவசாயிகளின் நம்பகத்தன்மை அவர்கள் கடந்த காலத்தில வங்கிகளுடன் நடத்திய அலுவல்களில் பிரதிபலிக்க வேண்டும். (அதாவது அவர்கள் வாங்கிய கடனைத்திருப்பிக் கட்டத் தவறியிருக்கக் கூடாது); கையிலுள்ள யோசனை பொருளாதார வாழ்தகவு கொண்டதாகவும், வங்கிக் கடன் பெறுவதற்குத் தகுதியுள்ளதாகவும் இருக்க வேண்டும். கால் நடைகளை வாங்குவதற்கும் இரை அபிவிருத்தி வேலைகளுக்கும் கட்டடங்களையும் எந்திர சாதனங்களையும் சீரமைப்பதற்கும் கடன்கள் வழங்கப்பட்டன. கடன்களின் மேல் எல்லைகள் கால் நடை விலைகளின் பிரதேச வேறுபாடுகளாலும் (பசு ஒன்றுக்கு 2,500 ரூபாவிலிருந்து 3,500 ரூபா வரைக்கும்) நிதியளிக்கப்பட்ட கால் நடைகளின் தொகையாலும் நிர்ணயிக்கப்பட்டன.

இத்திட்டத்தின் நடவடிக்கைகளைப் பரப்புவதிலும், கடன் மனுக்களை ஏற்றுக் கொள்வதிலும், கடன்களை மீட்பதிலும் வங்கிகள் சாதித்துள்ளதைக் [illegible]னிக்குமிடத்து, திட்டத்தை நிறைவேற்றுவதில் வங்கிகளின் செயற்பாடுகள் உற்சாக மூட்டுவனவாயில்லை. இந்த நிலைமைக்கு இரு பிரபல வங்கிகளும் பல்வேறு காரணங்களை வலியுறுத்தியுள்ளன. அடிப்படை உள்ளமைப்பின்மை, உற்பத்திக்கான உயர் செலவுகள், செறிந்த தீனி கிடையாமை, நிலையான கறவை மாடுகளின் தொகை போன்ற காரணங்களை வங்கிகள் எடுத்துக்காட்டியுள்ளன.

சர்வதேச அபிவிருத்திச் சங்க உதவியுடனான திட்டத்துக்குப் புறம்பாக ஆரம்பிக்கப்பட்ட நுவரெலியா பால் பண்ணைத் திட்டம் கால் நடைகளைச் சந்தைப்படுத்தும் முறை, விஸ்தரிப்பு, பயிற்சி, சுகாதார, சேவைகள் ஆகியவற்றை விஸ்தரிப்பதன் முக்கியத்துவத்தை வற்புறுத்தியுள்ளது. இந்த ஒன்றிணைக்கப்பட்ட வேலைத் திட்டத்தில் மற்றும் விஷயங்களுக்கிடையே நிறுவனக் கடன் வசதிகள் ஒரு ஜீவாதாரமான அம்சமாக இனங் காணப்பட்டுள்ளன. 22 இலட்சம் 82 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதிக்குச் சமமான கொடுகடன்களை இரு அரசாங்க வங்கிகளும் பகிர்ந்துகொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்த வேலைத்திட்டத்துக்கு ஏற்றவையென கொழும்பு, காலி, கம்பஹா, யாழ்ப்பாணம், களுத்துறை, கேகாலை ஆகிய ஆறு மாவட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. பாற்பண்ணை விவசாயிகளாக விரும்புவோருக்கு (சிறிய காணிக்காரர்களும் விவசாயத் தொழிலாளர்களும்) கால் நடைகளையும் பாற்பண்ணையையும் வாங்குவதற்கு, நடுக்கால, நீண்டகால கடன் வசதிகளை வழங்குவது, மூலதனச் சொத்துக்களை வழங்குதல், மற்றும் ஸ்தாபனச் செலவுகளையும் தொழிற்படு மூலதனத் தேவைகளையும் சமாளிப்பதற்குப் பண உதவி செய்தல் ஆகிய பொறுப்புகளை அரசாங்க வங்கிகள் ஏற்க வேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது. பால் உற்பத்தி நிலையங்களை அமைப்பது, திருப்பிக் கொடுக்கப்படும் பணத் தொகைகளை வசூலிப்பது, முன்னரும் பின்னரும் மேற்பார்வையிடும் வேலைகளை நிறைவேற்றுவது, இறுதியில், வழங்கப்பட்ட நிதிகளை மீட்பது ஆகியன சம்பந்தமான நடவடிக்கைகளில் வங்கிகள் விலங்கு உற்பத்தி - ஆரோக்கியம் பற்றிய இணைக்களத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டன. தோட்டத் தொழிலாளர்களையும் கால் நடை வேளாண்மையில் சிரத்தையுள்ள மற்றும் மலைநாட்டு விவசாயிகளையும் ஒழுங்கமைந்த கால் நடை அபிவிருத்தித் திட்டமொன்றில் இணைப்பதற்காக அரசாங்க வங்கிகள் பிரதேச வாரியான வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்கவேண்டும். இத்திட்டம் மூன்று கட்டங்களில் நிறைவேற்றப்படும் வகையில் பிரித்தமைக்கப்பட்டது. கறவைமாடுகள் கிடைக்காமை போன்ற செயற்பாட்டுப் பிரச்சினைகளின் காரணமாக, பின்னர் இரு கட்டங்கள் கைவிடப்பட்டன.

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்குள்ளிருக்கும் விலங்கு உற்பத்தி - ஆரோக்கியம் பற்றிய திணைக்களமும் இரு அரசவங்கிகளும் சேர்ந்து, சிறிய அளவிலான கால் நடை விவசாயிகளின் பண்ணை அபிவிருத்திக்கான கொடுகடன் திட்டமொன்றைத் தயாரித்துள்ளன. கால் நடைகள், எருமைகள், பன்றிகள், கோழிகள் ஆகியவற்றின் தன்மையையும் உற்பத்தியையும் உயர்த்துவதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ள சிறிய விவசாயிகளுக்கு உதவி செய்வதே இதன் நோக்கம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் வடிவமைக்கப்பட்ட சவிஸ்தாரமான வேலைத்திட்டத்தின் நோக்கம், கால் நடை இனங்களின் தன்மையையும் தொகையையும் போஷாக்கையும் வேளாண்மையையும் விருத்தி செய்தல், கால் நடைகளைச் சந்தைப்படுத்தும் முறையைப் பலப்படுத்தல், விஸ்தரிப்புப் பயிற்சியையும் சுகாதார சேவைகளையும் விரிவாக்குதல் ஆகியனவாகும்.

கால்நடைத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட 10 மாவட்டங்களில், ஆறுமாவட்டங்கள் (கொழும்பு, காலி, கம்பஹா, யாழ்ப்பாணம், களுத்துறை, கேகாலை) பால்பண்ணை தொடர்பான அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. கால் நடைகளையும் மற்றும் மூலதனச் சொத்துக்களையும் வாங்குவதற்காகவும், ஸ்தாபனச் செலவுகளையும் தொழிற்படு மூலதனத் தேவைகளையும் சமாளிப்பதற்காகவும் பால்பண்ணைகளை நடத்த விரும்பும் விவசாயிகளுக்கும் உற்பத்தியாளர் சங்கங்களுக்கும் நடுக்கால, நெடுங்கால கடன் வசதிகளை வழங்கும்படி இரு அரச வங்கிகளும் கேட்கப்பட்டுள்ளன.

ஒன்றில் தற்போதிருந்துவரும் தொழில் முயற்சிகளை விரிவாக்குவதற்கோ அல்லது புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கோ கொடுகடன் உதவி விஸ்தரிக்கப்படும் ஏறக்குறைய 3,000 விவசாயிகளை உள்ளடக்குவதற்குத் திட்டம் எதிர்பார்க்கிறது. இத்தகைய ஒரு பால் பண்ணை இரு பசுமாடுகளை அல்லது எருமை மாடுகளைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கடன்களுக்கான ஆகக்கூடிய உச்ச வரம்பு 49,500 ரூபாவாக இருக்கும். நியதிகளும் நிபந்தனைகளும் தளர்த்தப்பட்டு, கடன் வசதி சுலபமாகக் கிடைக்கக் கூடியதாயிருப்பதன் காரணமாக, கடனின் பரிமாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறைய 15,000 ரூபாவாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கொடுகடன்கள், கொட்டகைகள் கட்டுதல், கலப்பின விலங்குகளை வாங்குதல் போன்ற ஸ்தாபனச் செலவுகளுக்காகவோ (முதலீட்டு மூலதனம்) அல்லது தீனி வாங்குதல் அல்லது மற்றும் செயற்பாட்டுச் செலவுகளுக்குப் பணந்தருவதற்காகவோ பயன்படுத்தப்படலாம்.

இந்த வசதி, திட்டத்தின் திசை வழிப்படுத்திய தன்மையைக் கொண்டிருப்பதால், கடன் பெறுவதற்கான தகுதி அளவுகோலைச் சற்றும் சிக்கலற்ற உருவத்தில் சீர்திருத்தியமைக்க வசதி ஏற்பட்டுள்ளது. கடன் பெறுவதற்குத் திட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள மிக முக்கியமான அளவுகோல்களில் சிலவற்றில், கடன் வாங்குவோரின் நேர்மை கடந்த காலத்தில் பெறப்பட்ட கொடுகடன் சம்பந்தமாக அவர்கள் கடைப்பிடித்த ஒழுங்கு முறையில் பிரதிபலித்தல், பால்பண்ணை நடத்துவதில் தேர்ச்சித்திறன் பெற்றிருத்தல், குறைந்த பட்ச நிதிவளமிருத்தல் (இதில் காணி, மற்றும் கடனுக்கு மேற்பட்ட சொத்துக்கள் ஆகியவற்றின் பெறுமதி திட்டத்தின் மொத்தச் செலவில் 15 சத விகிதத்துக்குக் குறைவாக இருக்கக் கூடாது) ஆகியனவும் அடங்கும். மேலும், பதிவு செய்யப்பட்ட பால் பண்ணை உற்பத்தியாளர் சங்கமொன்றில் அங்கம் வகிப்பதும் அத்தியாவசியமாகும்.

மத்திய வங்கியின் மறுநிதியளிப்பு வசதி வழங்கியிருப்பதால், திட்டத்தில் பங்குபற்றும் இரு அரச வங்கிகளும் இவ்வசதியைக் கணிசமான அளவுக்குக் குறைந்த வட்டி விகிதமான ஆண்டொன்றுக்கு 12.5 சதவிகிதத்தில் வழங்கியுள்ளன. மொத்த உதவிப் பொதியில், விஸ்தரிப்பு, கல்வி, சந்தைப் படுத்தல், மிருக வைத்திய சேவைகள், உற்பத்தியாளர் சங்கங்களை நிறுவுதல் போன்ற துணைச் சலுகைகளும் அடங்குகின்றன. இத்திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்படுவதற்கு, இவையாவும் ஒன்றிணைக்கப்பட்டு, சம விகிதத்தில் கலக்கப்பட வேண்டும். ஆதலால், இத்திட்டத்தின் கூட்டு மொத்தச் செயற்பாடு, இந்த ஒன்றிணைக்கப்பட்ட கூறுகளுக்கு அளிக்கப்படும் ஒப்பியல் முக்கியத்துவத்தினும், இத்திட்டத்தின் எதிர் பார்ப்புகளை உண்மையாக்க அவை தனித்தனியாகவும் கூட்டாகவும் செய்யும் பங்களிப்பின் அளவினாலுமே பெருமளவுக்கு நிர்ணயிக்கப்படும்.

திட்டமிடல்

பத்தாண்டு திட்டம் 1959 - 1968

விவசாய அபிவிருத்தியில் கால்நடை வளர்ப்புத்துறையில் கூடிய வளர்ச்சி வாய்ப்புக்கள் இருப்பதனை பத்தாண்டுத் திட்டம் இனங்காட்டியது. கால்நடை வளர்ப்புக்கும், நாட்டின் பால், இறைச்சித்தேவைகளுக்கும் கூடிய முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இத்துறையில் (இதுவரை பயன்படுத்தப்பட்டிராத) கூடிய வளர்ச்சி ஆற்றல் தென்பட்டது. பால், இறைச்சி,கால்நடை உற்பத்திப் பொருட்கள் என்பவற்றின் பெறுமதியை 1957 ல் இருந்த 8.7 கோடி ரூபாவிலிருந்து 1968 ல் 21.1 கோடி ரூபாவுக்கு அதிகரிக்கச் செய்வதனை இத்திட்டம் நோக்கமாக கொண்டிருந்தது. 1958 ல் 15.3 கோடி பைந்துகளாக இருந்த பாலுற்பத்தியை 1968 ல் 49.5 கோடி பைந்துகளாக அதிகரிக்கச் செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இவ்விலக்கினை எய்துவதற்காக நாட்டிலிருந்த 8,38000 பசு மாடுகளின் எண்ணிக்கையிலும், தரத்திலும் கணிசமான அளவு அபிவிருத்திகளைச் செய்ய வேண்டியிருந்தது. ஒரு பசுவிலிருந்து நாளொன்றுக்கு 3.2 பைந்து பால் கிடைக்குமளவுக்கு விருத்தி ஏற்பட்டால் மட்டுமே பாலில் தன்னிறைவு காணலாம் என்று இத்திட்டம் கூறியது.

விவசாய அபிவிருத்தி யோசனைகள் 1966 — 70

கால்நடைகளின் தரத்தினை விருத்தி செய்து, பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு இத்திட்டம் பல திடமான யோசனைகளை முன்வைத்தது. விவசாய-காலநிலை காரணிகளின் பிராந்திய வேறுபாடுகளையும் இத்திட்டம் கவனத்தில் எடுத்தது. மென்மையான காலநிலை நிலவும் மலையகப்பிரதேசத்துக்கு ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஜேர்ஸி, டேர்பி போன்ற கால்நடை இனங்கள் பொருத்தமானதாக இருக்கும் என இத்திட்டம் கூறியது. இவ்வலயத்தின் சூழலும், ஏனைய மூல வளங்களும் செறிவான கால்நடைப் பண்ணை அபிவிருத்திக்கு உகந்தது என்றும் கூறப்பட்டது.

பத்தாண்டுத் திட்டம் பூர்த்தியடைய முன்னர் இன்னொரு இடைக்காலத் திட்டம் குறுங்கால் செயற்பாட்டுத் திட்டம் 1962 - 1964 என்ற பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் பின்வருவனவற்றில் கூடிய கரிசனை காட்டியது.

(1) உள்ளூர் பசுக்களின் சராசரி வெளியீட்டினை அதிகரிக்கச் செய்தல்

(2) தற்பொழுதிருக்கும் பசுக்களில் கறவைப் பசுக்களின் எண்ணிக்கையை பெருக்குதல்.

வெளியீடு மிகக் குறைவாக இருந்ததனால் சராசரி வெளியீட்டினை அதிகரிக்கச் செய்வது கூடிய முக்கியத்துவத்தைப் பெற்றது. பால் சபையின் கீழ் பால் அடைக்கும் தொழிற்சாலையொன்று ஸ்தாபிக்கப்பட்டமை, உள்ளூர் நிலைமைகளுக்கு பொருந்தக்கூடிய விருத்தியுற்ற புல்லினங்களை அறிமுகம் செய்தமை, தென்னை முக்கோணப்பகுதியில் சில பிரதேசங்களை செறிவான கால்நடை வளர்ப்புக்கென ஒதுக்கியமை போன்றன மற்றும் யோசனைகளாகும்.

ஐந்தாண்டுத் திட்டம் 1970 - 75

விலங்கு வேளாண்மைத்துறை இறக்குமதி பிரதியீட்டுத் திட்டத்தின் கீழும், விவசாய பன்முகப்படுத்தல் திட்டத்தின் கீழும் கவனத்தை ஈர்க்கக் கூடியது என இத்திட்டம் எடுத்துக் காட்டியது. (1) தற்பொழுது 30,000 ஏக்கராக இருக்கும் புல் நிலங்களின் தரத்தை விருத்தியுறச் செய்து, விஸ்தீரணத்தை இரட்டிப்பாக்குவது (2) இறக்குமதி செய்யப்படும் பசுக்களைக் கொண்டு கலப்பு இனப் பெருக்கம்செய்து பால் உற்பத்தி ஆற்றலை கூட்டுதல் (3) தேசிய பால் சபையின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் பால் சேகரிப்பு நிலையங்களின் பின்னலமைப்பை மேலும் விஸ்தரிக்கச் செய்தல் (4) விஸ்தரிப்புச் சேவைகளினதும், கடன் வசதிகளினதும் முக்கியத்துவத்துக்கு உரிய அங்கீகாரம் வழங்குதல் என்பன இத்திட்டத்தின் இலக்குகளாக இருந்தன.

பால், பாற் பொருட்கள், வெண்ணெய் போன்றவற்றில் தன்னிறைவு நிலையை எய்துவதற்கு திட்டமிடப்பட்டது. எனினும், இத்திட்டத்தின் செயற்பாடு அதன் அசல் யோசனைகளை முற்றிலும் பூர்த்தியடையச் செய்யவில்லை. எனவே, அதற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுக்க வேண்டியிருந்தது. இச்சந்தர்ப்பத்தில், வர்த்தக ரீதியிலான பாற்பண்ணைகளுக்கு கடன் வசதிகளை வழங்குவதிலிருந்து, இந்தியாவில் அமைந்திருக்கும் குஜராத் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்க மாதிரியிலான (ஆனந்த்) சங்கங்களை உருவாக்குவதில் கவனம் திருப்பப்பட்டது. பால் உற்பத்தியாளர்களுக்கான அதிகளவு மானியங்களை அரசாங்கம் அறிமுகம் செய்ததுடன், பால் விலையையும் 38 சதவீதத்தால் அதிகரித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(9 –ம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சியற்றிருந்த புல்லினங்கள் பருவமழை பெய்யும் குறுகிய காலத்தில் துரிதமாக வளருகின்றன. புல் விரைவில் முதிர்கின்றது; அத்துடன் துரிதமாகப் பூப்பூத்து விதை கொள்ளும் கட்டங்களேயும் அடைந்துவிடுகிறது. எனவே, ஆண்டின் பெரும்பகுதியில் மிகக் குறைந்த ஈரப்பதனுடன் நிற்கும் புல்லேயே மேய வேண்டியிருக்கிறது. இப் புல்லினங்களில் அடங்கியுள்ள உலர் பொருள் அதிக அளவிலுள்ளது. விலங்குகள் வருடம் முழுதும் குறைந்த நீர்ப்பிடிப்புள்ள இரையையே தின்பதன் காரணமாக, இது சமிபாட்டுப் (ஜீரணம்) பிரச்சினைகளே உண்டாக்குகின்றது.

தீனித் தட்டுப்பாடு

தீனித் தட்டுப்பாடு உண்டாவதற்கு இரு காரணிகள் உண்டு. முதலாவதாக, பருவகாலத் தட்டுப்பாடு இது பிரதேசத்துக்குப் பிரதேசம் வறட்சி நீடிக்கும் கால அளவைப்பொறுத்து மாறுபடுவதுடன் ஒரு பிரதேசத்தில் வருடத்துக்கு வருடமும் மாறுபடுகிறது. வறட்சிப் பருவத்தில் உலர்வலயத்தில் ஆகக் கூடிய அளவிலும் ஈரவலயத்தில் ஆகக் குறைந்த அளவிலும் தீனித் தட்டுப்பாடு இருந்து வருகிறது.

இரண்டாவதாக, விஸ்தாரமான புற்றரைகள் குறைவாக இருப்பதாகும். ஜன நெருக்கமுள்ள நாடான இலங்கையில் மொத்தம் 10,70,000 ஏக்கர் பரப்பு நிரந்தரமாகப் புல்வெளிகளாகவும் மேய்ச்சற்றரைகளாகவும் இருந்து வருகிறது. இது ஆண்டு முழுதும் மேய்வதற்குச் சற்றே உகந்ததாகும். எனினும், பொலநறுவை மாவட்டத்திலுள்ள 'வில்லஸ்' போன்ற ஒரு சில விசாலமான மேய்ச்சல் நிலங்களேத்தவிர, முடிக்குரிய காணிகளிலும் தனியார் ஆதனங்களிலும் மற்றும் சிறிய, பெரும்பாலும் சிதறிக் கிடக்கும் புற்றரைத் துண்டுகள் பெரிய மந்தைகளே வைத்துப் பராமரிபதற்குத் தடையாயுள்ளன. காணியுடைமைகளில் ஏறக்குறைய 80 சதவிகிதம் 2 ஏக்கருக்குக் குறைவான பரப்பளவுள்ளவை (குடிஜனமதிப்பீடு, 1973). ஜனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க, விவசாயம் நடைபெருத பகுதிகளில் பொருளாதார வாய்ப்புகள் சாகுபடிக் கேற்ற காணிகளில் ஜன நெரிசலைக் குறைப்பதற்குப் போதிய அளவில் விரிவடைந்தாலொழிய மற்றப்படி காணியுடைமைகளின் பரிமாணங்கள் தொடர்ந்து குறைந்து கொண்டே வருமென்பது திண்ணம். சிறிய காணிகளில் தற்போது நடைபெற்றுவரும் தீனியின் உற்பத்தியளவைக் கவனிக்குமிடத்து, அவற்றில் மிகக் குறைந்த தொகையான மந்தைகளேயே அனுமதிக்கலாம். சிறிய ஆதனங்களில் பெரும்பாலானவை, இரண்டு அல்லது மூன்று விலங்குகளே மட்டுமே பராமரிப்பதற்குத் தகுதியுள்ளனவாயிருக்கின்றன. இக் காணியுடைமைகளில் சில எவ்வளவோ சிறியனவாயிருப்பதால், விவசாயிகள் இவற்றை மேய்ச்சலுக்கு உபயோகிப்பதேயில்லை.

தோட்டக்காணிகள் விஸ்தாரமாயிருந்த போதிலும், அவற்றில் பயிர் செய்யப்படும் முறைகள், ஒன்றில் விலங்குணவு உற்பத்திக்குக் கிடைக்கக் கூடிய இடப் பரப்பைக் குறுக்கி விடுகின்றன (தேயிலைத் தோட்டங்கள்) அல்லது தற்போது பயிர் செய்யப்படும் மரங்கள் அடர்த்தியான நிழலிடும் விதானங்களாக (றப்பர்த் தோட்டங்கள்) அமைவதால், கீழுள்ள தரையில் புல்லினங்கள் வளர்வதைத் தடுத்து விடுகின்றன. ஆதலால், இத் தோட்டங்களிலுள்ள தொழிலாளர்கள் தங்கள் விலங்குகளே வரையறுத்த அளவுக்கே மேயவிடுகிருர்கள். தென்னந் தோட்டங்களில் மட்டுமே நிலக் கீழ் பயிராக ஒரு வகையில் புல்லை வளர்ப்பது சாத்தியமாகிறது.

காணி மீதானகடும் நெருக்குதல் ஈரவலயத்திலுள்ளதை விடக் குறைவாயுள்ள உலர் வலயத்தில் ஜன நெருக்கம் குறைவாயிருப்பதால், நீர்பாய்ச்சக் கூடிய காணிகளில் ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது இரு முறையோ தானியங்கள் பயிர் செய்யப்படுகின்றன. நீர்பாய்ச்சி விலங்குணவைச் சாகுபடி செய்வதென்பது, இன்னும் அதிக பணச் செலவை உண்டாக்கும் ஓர் அலுவலாகவே இருந்து வருகிறது. ஓரக் காணிகள் கூட உயர்நில நெற்பயிருக்கோ அல்லது உப உணவுப் பயிர்களுக்கோ உபயோகிக்கப்படுவதால், மேய்ச்சல் நிலங்கள் வரையறுக்கப்பட்டுவிடுகின்றன.

உலர்வலய விவசாயிகள் விலங்கு வேளாண்மை (கால் நடை வளர்ப்பு) யைத் தானிய சாகுபடியுடன் ஒன்றிணேத்துச் செய்து பழக்கப்பட்டவர்களல்லர். விவசாயத்தையும் கால் நடைவளர்ப்பையும் சேர்த்துச் செய்யும் முயற்சியைத் தீவிரமாக மேற்கொண்டால், தானிய சாகுபடியிலிருந்து மட்டும் கிடைக்கும் வருமானத்தைவிட அதிக வருமானத்தைப் பெறலாமென அவர்களுக்கு உணர்த்தப்படும் வரை, குறைந்த அளவிலுள்ள நீர்பாய்ச்சக் கூடிய ஓரக்காணிகளில் தானியங்களேப் பயிரிடுவதிலேயே அவர்கள் முழுக்கவனஞ் செலுத்துவார்கள்.

செறிந்த உணவு போதாமை

சுதேசப் புல்லினங்களில் போஷாக்குப் பெறுமானம் (புரதச்சத்து) 14 சதவிகிதத்தை விட குறைவாக இருப்பதால், கறவைப் பசுக்களுக்குத் தேவையான குறைந்த பட்ச புரதச் சத்தான 16 சதவிகிதத்தை வழங்குவதற்காக, செறிவுச் சத்துக்களேக் கொண்டு கால் நடை உணவைக் குறைநிரப்பு செய்ய வேண்டும். (பத்துவருடத் திட்டம், 1959). இலங்கையில் வழக்கமாகக் கொடுக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

கிடைத்த செறிவு உணவின் கூறுகளைப் பற்றிய மதிப்பீடு

கூறுகள்	அளவு (தொன்கணக்கில்)
தானியங்கள்	10,000
கோதுமைத்தவிடு	25,000
அரிசித் தவிடு	10,000
கூட்டியெடுக்கப்பட்ட கோதுமை அரிசிக் கழிவுகள்	2,000
எள்ளுணவு	5,000

ஆதாரம்: திட்ட அமுல் திணைக்களம், கொழும்பு, 1977

செறிந்த உணவு பிண்ணுக்காகும். இதில் 20 சதவிகித புரதம் அடங்கியுள்ளது. காணிச் சீர்திருத்தங்களையடுத்து, தென்னந் தோட்டங்கள் புறக் கணிக்கப்பட்டதாலும், சிலாபம் பகுதியில் ஏறக்குறைய 4,00,000 தென்னமரங்கள் சூருவளியில் அழிந்ததனுலும், 1970 களின் ஆரம்பத்தில் கடும் வறட்சி நிலமைகள் நிலவியதனுலும் தேங்காய் உற்பத்தி குறைந்து, அதன் விலைகள் மடமடவென அதிகரித்தன. 1977 ம் ஆண்டில் பிண்ணுக்கின் கள்ளச் சந்தைவிலை கள் தொன் ஒன்றுக்கு 2,000/- ரூபாவிலிருந்து 2,400/- ரூபா வரை வேறுபட்டன. 1978 ம் ஆண்டில் 3,700/- ரூபாவுக்கு விலைப்பட்ட ஒரு தொன் பிண்ணுக்கு 1980 ம் ஆண்டிலே சில பகுதிகளில் 4,500/- ரூபா வுக்கு உயர்ந்தது. உள்நாட்டுப் பிண்ணுக்கு உற்பத்தியின் மீட்சி எவ்வளவோ குறைவாயிருந்த தால், 1979 ம் ஆண்டில் உள் நாட்டுத் தேவையில் ஒருபகுதி இறக்குமதி செய்யப்பட்டது.

மற்றும் குறை நிரப்பு உணவு களில், பல்வேறு விகிதங்களில் கலக்கப்பட்ட தானியங்கள், கோதுமைத்தவிடு. அரிசித்தவிடு, கூட்டியெடுக்கப்படும் கோதுமை, அரிசிக் கழிவுகள் ஆகியனவும் அடங்கும். இவற்றின் போஷாக் குப் பெறுமானங்களைக் கருதியல் லாது, இவை கிடைப்பதைப் பொறுத்து, இவற்றை விவசாயி கள் அவ்வவ்விடங்களில் தயாரித்துக்கொள்வார்கள். 1977 ம் ஆண்டில் இப்பொருள் கள் என்ன அளவில் கிடைத் தனவென்பது பற்றிய மதிப்பீடு அட்டவணை - 1 ல் தரப்பட்டுள் ளது.

விவசாயிகள் விலங்கு ணவைத் தயாரிக்கும்போது, இந்தப் பொருள்கள் பல்வேறு விகிதங்களில் உபயோகிக்கப்படு கின்றன. ஆனுல், கலவன் உணவின் பொருத்தமான விகிதங்களும் தலா குறைந்த பட்ச தினசரித் தேவைகளும் (பத்துவருடத் திட்டம், 1959) அவற்றிற்கான செலவும் அட்ட வணையில் தரப்பட்டுள்ளன.

இவ்விதமாக, 1977 ம் ஆண்டில் கால்நடை ஒன்றின் குறைந்த பட்ச தேவையான 3 இறுத்தல் கலவன் உணவுக்கு 4 ரூபா 80 சதம் செலவாயிற்று. இது சிறிய அளவில் பால்பண்ணை நடத்தும் விவசாயிக்கு அதிக பணக் கஷ்டத்தை ஏற்படுத்தி யிருக்கும்.

அட்டவணை 2

கலவன் உணவில் துணைப்பொருள்களின் விகிதசமங்களும் கலவன் உணவில் தலா குறைந்தபட்ச தினசரித் தேவையும் அதன் செலவும்

துணைப்பொருள்	விகிதசமம்		செலவு 1 (ரூபாக்கணக்கில்)
	சதவிகிதம்	இறுத்தல்	
பிண்ணுக்கு	50	1.5	1.49
கோதுமைத்தவிடு	25	0.75	2.68
அரிசித்தவிடு	20	0.6	0.54
தானியங்கள்	5	0.15	0.09

குறிப்பு: 1 - 1977 ம் வருட விலை (தொன் ஒன்று 2,400/- ரூபா)யில் கணக்கிடப்பட்டது.

ஆதாரம்: தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை (1979) யும் பத்து வருடத் திட்டமும் (1959)

உலர் வலயத்தில் பொது மேய்ச்சல் முறையின் குலைவு

கடந்த காலத்திலே கால் நடை வளர்ப்பு உலர் வலயத்தில் நடைபெற்ற விவசாய வாழ்க்கை யுடன் ஒன்றிணைந்த ஒரு பாக மாக இருந்துவந்தது. விவசாயி கள் தங்கள் பிழைப்புக்கான விவசாயத்தில் தேவைப்பட்ட இழுவை சக்திக்குக் கால்நடை களையே பெருமளவுக்குச் சார்ந் திருந்தனர். எனவே, கிராம வாசிகள் பயிர், கால்நடைகள் ஆகிய இரண்டையும் பாது காக்க வேண்டியிருந்தது.

இந்த இரட்டை நலனைப் பாதுகாப்பதற்கு மேற்கொள் ளப்பட்ட உபாயம் அலாதியான தொன்று. கிராமத் திலுள்ள சாகுபடி செய்யப்படாத காணி களிலுள்ள பொது மேய்ச்சற்ற ரைகளில் மேயும் தங்கள் கால் நடைகளை அவற்றின் சொந்தக் காரர்கள் கவனித்துக்கொள்ள வேண்டியிருந்ததைவிட மிக ஜாக்கிரதையாக விவசாயிகள் தங்கள் பயிர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது.

(16-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்பண்ணை - இந்திய அனுபவம்

இந்தியாவில் பால்பண்ணை - பாற்பண்ணைப் பொருள் அபிவிருத்தித்துறையில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட சாதனைகள், இந்தியாவிலுள்ள பொருளாதார, சமூக, கலாசாரச் சூழல், ஒரு பாற்பண்ணை வேளாண்மையின் தேவைகளுக்கு எந்த அளவுக்கு இணக்கமாயிருக்கிறதென்பதைப் பிரத்தியட்சமாக எடுத்துக் காட்டுகிறது.

பொருளாதார ரீதியாக இந்தியாவின் பெரும்பகுதி இன்னும் கிராமப் பிரதேசங்களாகவே இருந்து வருகிறது. அந்நாட்டின் ஜனத்தொகையில் கிட்டத்தட்ட 76.3 சதவிகிதத்தினர் கிராம மக்களாகவே இருந்துவருகின்றனர். இந்த அளவிறந்த கிராமத்துறையின் சமூக - பொருளாதார யதார்த்தங்களைக் கவனிக்குமிடத்து, கிராம மக்களில் 50.7 சதவிகிதத்தினர், நாளொன்றுக்கு ஆள் ஒருவருக்குக் கிடைக்கும் கலோரியான 2400 அலகுகளின் அடிப்படையில் கணக்கிட்டபடி, உத்தியோக பூர்வமாகக் குறிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழேயே இருக்கின்றனர். இதே போல வேலையில்லாத் திண்டாட்டம், சிறிய விவசாயிகள் எல்லைவிவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோரைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிராமக் கிருஷிகர்களை உள்ளிழுத்துக்கொள்வதற்குப் பொருளாதார விளைவுள்ள காணிகளின் பஞ்சம் ஆகிய பிரச்சினைகளால் குறுகிய காலத்திலேனும் அவர்களுடைய பொருளாதாரக் குழப்பங்களைத் தணிப்பதற்குப் பால் பண்ணையே மிகவும் காரிய சாத்தியமான மாற்று வழியாக அமைந்துள்ளது.

கலாசார ரீதியாக, கால் நடைகளைப் பராமரிப்பதும் விருத்தி செய்வதும் இந்திய வரலாற்றின் ஆரம்ப யுகங்களிலிருந்தே நடைபெற்றுவருகின்றன. இந்திய சமூதாயத்தில் பசுமாட்டுக்கு ஒரு புனிதமான இடம் அளிக்கப்படுகிறது. மகாபாரதத்திலிருந்து ஒரு மேற்கோள் காட்டுவது பொருத்தமாமாகும்: "அவற்றின் பாலுடனும் அதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களும் அவர்கள் பிரபஞ் சத்திலுள்ள சகல பிராணிகளையும் சம்ரட்சணம் செய்கிறுர்கள்..." இது இந்திய சமுதாயத்தில் பசுவின் அந்தஸ்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. கி. மு. 1200 வது ஆண்டுக்கு முன்பு எழுதப்பட்ட இந்து வேதங்களில் வெண்ணெய் உணவாக உபயோகிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பாலும் பாற்பொருள்களும் குறிப்பிடப்பட்டிருப்பதால், இந்திய வரலாற்றின் ஆரம்ப யுகங்களிலேயே பால் பண்ணைத் தொழில் நடைபெற்றுள்ளதென்பது நிரூபணமாகிறது.

இந்த வரலாற்று ரீதியான, கலாசார சம்ரட்சணை, பால்தரும் மந்தை விலங்குகளைப் பழக்குவதையும் வைத்திருப்பதையும் கிராம வாழ்க்கையின் ஓர் இன்றியமையாத பாகமாக்கியது. அதே விலங்குகள் வேலை செய்வதற்கும் பால் உற்பத்தி செய்வதற்கும் உபயோகிக்கப்பட்டன. பால், உற்பத்தி செய்யப்பட்ட இடத்திலேயே பாலாகப் பருகப்பட்டது: அல்லது வீட்டிற் செய்யப்பட்ட பாற்பண்ணைப் பொருள்களாக உபயோகிக்கப்பட்டது.

ஆதலால், பால்பண்ணை இந்தியாவில் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களிலும் உபாயங்களிலும் இடம்பெற்ற முதன்மை நிரலில் மிக நேர்த்தியாகப் பொருந்துகிறது. உதாரணமாக, ஆறுவது ஐந்து வருடத் திட்டம், கிராமாபிவிருத்திக்கான முதன்மை நிரலில் கீழ்க்கண்டவை இடம் பெற வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளது:

1. விவசாயத்திலும் அதனுடன் இணைந்த துறைகளிலும் உற்பத்தியையும் உற்பத்தித்திறனையும் அதிகரித்தல்.

2. முதலாவதும் இரண்டாவதும் மூன்றுவதுமான துறைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் கிராம மக்களில் வறுமையினுல் பாதிக்கப்படக் கூடிய பிரிவினரின் மூலபலத்தையும் வருவாயையும் அதிகரித்தல்.

3. வருவாயில்லாத விவசாயப் பருவத்தின்போது விவேகமான திட்டமொன்றின் வாயிலாக ஏழைக் கிராமவாசிகள் இலாபகரமான தொழில்களைச் செய்வதற்காக அவர்களுக்கு மேலதிக வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தல்.

4. அத்தியாவசிய குறைந்த பட்சத் தேவைகளை வழங்குதல்.

5. ஏழைக் கிராம மக்கள் சுய தொழிலில் ஈடுபடவும் சம்பளத்துக்காக வேலை செய்யவும் ஊக்குவிப்பதற்காகத் தேர்ச்சித்திறன்களை உண்டாக்குதலும் தேர்ச்சித்திறன்களைத் தரமுயர்த்தலும்.

6. கிராமங்களிலுள்ள ஏழைமக்களுக்காக மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களுக்கு ஆதரவாகப் போதிய கடன் வசதிகள் கிடைப்பதை இலகுவாக்குதல்.

முதன்மை நிரலில் இடம்பெற்றுள்ள இந்த ஆறு விஷயங்களும் பெருமளவுக்கு ஒன்றிலொன்று அடங்குவதாயிருந்தபோதிலும், நடு நாயகமான கருத்தென்னவென்றுல், கிராமாபிவிருத்திக்கான வேலைத் திட்டம் அந்தந்த இடங்களிலுள்ள இயற்கை வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டுமென்பது தான். பாற்பண்ணை முதன்மை நிரலிலுள்ள இந்த ஆறு முக்கிய காரியங்களில் பெரும்பாலானவற்றுடன் பொருந்தும் ஓர் அலாதியான அம்சத்தைக் கொண்டுள்ளது. ஏனென்றுல், பாற்பண்ணை சுயதொழில், போஷாக்கு, வருமான அதிகரிப்பு, இழுவைச்சக்தி, சேதனப்பசளை முதலானவற்றை உறுதிப்படுத்தக் கூடியதாகும்.

பாற்பண்ணை வேளாண்மை மற்றும் மாற்றுத் தொழில்களைவிட சிறந்ததென்பதும் உண்மை. ஏனென்றுல், கொடுகடன் வசதி, சந்தைப்படுத்தல், உள்ளீடுகள் விநியோகம், விஸ்தரிப்பு ஆகியவற்றை உள்ளடக்கும் அரசாங்க விநியோகத் திட்டத்துடன் சுலபமாகப் பொருந்திக்கொள்ளும் இயல்பான அனுகூலமும் அதில் உள்ளது. இதனுல் அரசாங்க ஸ்தாபனங்கள் அவற்றின் அபிவிருத்தித் திட்டங்களில் பாற்பண்ணைகளைக் கண்டபடி தெரிவு செய்யவே பெரிதும் ஆசைப்படுகின்றன. உதாரணமாக, சர்வதேச கிராம அபிவிருத்தித் திட்டங்கள் ஸ்தாபனத்தின் உதவிபெற்ற செய் திட்டங்களில் நிதியளிக்க வங்கியாளர்கள் பெருவிருப்புடன் மனமறியத் தெரிவு செய்யும் துறை பாற்பண்ணைதான்.

பாற்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல இந்திய மாநிலங்கள் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றும் ஒரு முன்மாதிரியமைப்பு 'அமுல்' அல்லது 'ஆனந்த்' அமைப்பு முறையாகும். இது முதலில் குஜராத் மாநிலத்தில்தான் கருத்துருவம் பெற்றது. இந்த மாதிரி அமைப்பைப் பின்பற்றும் வேலைத்திட்டத்துக்கு "வெள்ள நடவடிக்கை" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதன் கீழ் பாலுற்பத்தி செய்யும் பல மாவட்டங்களையும் இந்தியாவெங்கும் சிதறிக்கிடக்கும் நுகர்வு நிலையங்களையும் தனியொரு பாலுற்பத்தி - சந்தைப்படுத்தல் நெய்யரி (கிறிட்) யுடன் இணைக்க உத்தேசிக்கப்படுகிறது.

ஆனந்த் மாதிரியமைப்பு (அமுல்) ஒரு கிராம பாலுற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமாகக் கருத்துருவம் பெறுகிறது. இதில் கிராமத்திலுள்ள சகல பாலுற்பத்தியாளர்களும் தாமாகவே வறியவந்து சேர்ந்து விடுகின்றனர். கிராமமட்டத்திலுள்ள இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட மட்டத்திலுள்ள கூட்டுறவுப் பாலுற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தவர்களாக்கப்பட்டுள்ளன.

"வெள்ள நடவடிக்கை" எனப் பெயரிடப்பட்டுள்ள ஆனந்த் மாதிரியமைப்பைப் பின்பற்றும் நடவடிக்கை இரட்டை நோக்கங்களைக் கொண்டது. ஆண்டு முழுவதும் பாலுற்பத்தியாளர்களுக்கு உழைப்புக்கேற்ற விலைகளைப் பெற்றுக் கொடுப்பதும், நியாயமான விலைகளில் நகர்ப்புற நுகர்வோருக்குக் கிரமமாகப் பால் வழங்குவதுமே இவ்விரு நோக்கங்களுமாகும். ஒரு தேசியப் பால் நெய்யரி (கிறிட்) வாயிலாக, வழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையான பாலுற்பத்திப் பகுதிகள் முக்கியமான நுகர்வு நிலையங்களுடன் சரியாக இணைக்கப்படுவதற்கேற்ற முறையில் இந்தப் பின்பற்றல் முறை வடிவமைக்கப்படுகிறது. பாலுற்பத்திப் பகுதிகள் மேற்கு, வடக்கு, கிழக்கு, தெற்குப் பகுதிகள் எனப் பெயரிடப்பட்டிருந்த போதிலும், மேற்கிலுள்ள குஜராத், மகாராஷ்டிர மாநிலங்களைச் சுற்றியும் வடக்கில் உத்தர பிரதேசத்தையும் இராஜஸ்தானைச் சுற்றியும், கிழக்கில் மேற்கு வங்காளத்தைச் சுற்றியும், தெற்கில் ஆந்திர பிரதேசம் தமிழ்நாடு கர்நாடகம் ஆகிய மாநிலங்களைச் சுற்றியும் நுகர்வோர் நிலையங்கள் அமைந்துள்ளன. முக்கிய பால் சந்தைகள் டில்லியும் சம்பாயும் கல்கத்தாவுமாகும்.

இந்தியப் பாற்பண்ணை வேளாண்மை எதிர்பார்த்த இலக்குகளை அடைவதைத் தடைப்படுத்திய முக்கிய நிர்ப்பந்தங்களில் சில வருமாறு: பண்ணை விலங்குகளில் பெரும்பாலானவற்றின் பிறப்பியல்பு மோசமாயிருப்பதும், தீனிக்கும் இரைக்கும் நிலவும் கடுந்தட்டுப்பாடும், நாட்டின் சில பகுதிகளில் சூழல் நிலைமைகள் விதித்துள்ள கட்டுப்பாடுகளும் விலங்கு ஆரோக்கியப் பாதுகாப்புக்குத் தக்க ஏற்பாடுகளின்மையும், நாட்டின் மற்றும் பகுதிகளில் சந்தைப்படுத்தல் முறையிருப்பதுமாகும். இதனல் இந்தியப் பாற்பண்ணைகளின் பங்களிப்பைக் பாற்பண்ணைகளின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடுவதாகக் கருதக்கூடாது. பரந்த கோணத்திலிருந்து அச்சாதனைகளை மதிப்பிடுவதற்கு மட்டுமே இங்கு முயலப்பட்டுள்ளது.

இந்தியப் பாற்பண்ணை வேளாண்மை பல்தேசிய நிறுவனங்களின் போட்டியைத் தோற்கடித்துள்ள போதிலும், இது வரை சாதிக்கப்பட்டுள்ள சுயதேவைப் பூர்த்தி நிலையைக் கொண்டு, தற்போதைய பாலுற்பத்தி நாட்டின் முழுப்பால் தேவைகளையும் பூர்த்தி செய்துவிட்டதென்று கூறமுடியாது.

முந்திய மதிப்பீடொன்றின்படி, நாலாவது திட்டகாலத்தில் நாளொன்றுக்கு ஆள் ஒருவருக்குச் சுமார் 108 கிராம் பால் மட்டுமே கிடைத்தது. ஆனல் இந்திய வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனத்தைச் சேர்ந்த போஷாக்கு நிபுணர் குழு பாடசாலை செல்லும் வயதடையாத குழந்தைகளுக்கு 300 கிராம் பாலும், பாடசாலைக் குழந்தைகளுக்கு 250 கிராம் பாலும், வயது வந்தோருக்கு 200 கிராம் பாலும், கர்ப்பிணிகளுக்கு மேலதிகமாக 150 கிராம் பாலும் வழங்க வேண்டுமென்று சிபார்சு செய்தது. இந்த மதிப்பீட்டின் அடிப்படையில், உண்மையான தன்னிறைவு நிலையை அடைய, தற்போதுள்ள சுய தேவைப் பூர்த்திநிலை இன்னும் எவ்வளவோ தூரம் முன்னேற வேண்டும்.

ஆனந்த் மாதிரியமைப்பிலுள்ள இன்னொரு குறையும் சுட்டிக் காட்டப்பட்டது. கிராமங்களிலிருந்து பால் முழுவதையும் வெளியே இழுக்க அது உதவியதன் விளைவாக, கிராம மக்களின் போஷாக்கு பறிக்கப்பட்டு விட்டது. பொதுவாகக் கிராம மக்கள் ரொக்கப் பணம் பெறுவதற்காகப் பாலை நெய்யாக மாற்றி, போஷாக்குத் தேவைகளை ஓரளவுக்குப் பூர்த்தி செய்வதற்காக மோரையும் மோரிலிருந்து பெறப்படும் உப பொருள்களையும் உபயோகிப்பார்கள்.

பரம்பரையாகக் கூட கிராமங்களிலுள்ள உற்பத்திப் பகுதிகளிலிருந்து பால் நகர்ப்புற கோரிக்கை நிலையங்களுக்குச் சென்றுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டதற்குப் பின்பு, ஒப்பியல் ரீதியாக, பாலுக்குப் பரம்பரையாகக் கொடுக்கப்பட்டதைவிட நல்ல விலை கொடுக்கப்படுகிறது. எனவே பாலை நகர்ப்புறங்களுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் தீவிரமடைந்தன. ஒருவிதத்தில், இது ஒருபக்கத்தில் கிராமங்களிலுள்ள பால் முழுவதையும் முற்றாக வெளியே இழுத்துவிட அடிகோலி, மறுபக்கத்தில் போஷாக்கின் பரம்பரை ஆதாரத்தை அடியோடு உலர்த்தி விடுவதாகும். கிராம உற்பத்தியாளர்களுக்குத் தெரிந்த ஒரே ஓர் ஆதாரம் இதுவாகவே இருக்கலாம். இந்தச் சமமற்ற வடிப்பு பற்றிய ஆராய்ச்சிகள் வெவ்வேறு முடிவுகளுக்கு வந்துள்ளன. புதிய ருத்திரம், போஷாக்குக் குறைந்த தானியங்களையும் மற்றும் மாற்றீட்டுப் பொருள்களையும் நாடச்செய்து, கிராமப் பாலுற்பத்தியாளர்களைச் சேமநலத் தராசின் தாழ்ந்த தட்டில் உட்காரச் செய்யும் கட்டாயத்தை உண்டாக்கி விட்டதெனச் சில ஆராய்ச்சிகள் வற்புறுத்தியுள்ளன. இது பற்றி இன்னொரு கண்ணோட்டமும் உண்டு. "வெள்ள நடவடிக்கை" கிராம உற்பத்தியாளர்களின் பண வருவாயையும் கொள்வனவுச் சக்தியையும் உள்ளூர் நுகர்வுக்காகக் கிராமத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்படும் பாலின் அளவையும் அதிகரித்துள்ளதென அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

விற்கப்படும் அல்லது விற்பனைக்கு விடாமல் நிறுத்திக் கொள்ளப்படும் பாலின் சராசரிப் பெறுமதிகள் பற்றி இந்த ஆராய்ச்சிகளில் பெரும்பாலானவை முன்வைத்துள்ள முடிவுகள் உண்மை நிலைமையைத் திரித்துக் கூறுவனவாகவே உள்ளன. அம் முடிவுகள் ஒன்றில் பணக்கார உற்பத்தியாளர்களுக்கெதிராக ஏழை உற்பத்தியாளர்கள் விற்பனைக்கு விடாமல் நிறுத்தி வைத்துக்கொண்ட பாலின் யதார்த்தமான விநியோக நிலையை வெளியிடுவதாகவோ அல்லது நகர்ப்புற ஏழைகளுக்கெதிராக நகர்ப்புறப் பணக்காரர்கள் நுகரும் பால், மற்றும் பாற் பொருள்களின் மிதமிஞ்சிய அளவை எடுத்துக்காட்டுவதாகவோ இல்லை. எனினும், "வெள்ள நடவடிக்கை"யின் விளைவாக, பாலின் விலை நகர்ப்புற ஏழைமக்களின் கைக்கு எட்டாத உயரத்துக்கு ஏறிவிட்டதென்ற ஓர் உறுதியான நியாயவாதமுமுண்டு. ஏழைகளுக்கு மான்ய உதவிபெற்ற பாலை வழங்க விசேஷ விதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், நகர்ப்புற நிலையங்களில் மான்ய உதவிபெற்ற பாலை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவென்ருலும், இத்திட்டம் ஏழைகளுக்கு உதவியதாவென்பது இன்னும் கேள்விக்குரியதாகவே உள்ளது.

அமுல் - ஆனந்த் மாதிரியமைப்புக்குக் கொடைகள், கடன்கள், பாதுகாப்பு முதலியவற்றின் உருவில் மறைவாக வழங்கப்படும் மான்யங்கள் வாயிலாகப் பெருமளவுக்குப் பண உதவி அளிக்கப்படுகிறது. இதன் பயனுக, நுகர்வோரின் பொதுச் சேமநலம் அதிகரித்திருக்க வேண்டும். ஆனல் அப்படி நடக்கவில்லை. அமுல் ஸ்தாபனம் மொத்த மூலதனச் செலவில் 64 சதவிகிதம்வரை நிதியுதவி பெற்றுள்ளதென்பது கவனிக்கத்தக்கது.

"வெள்ள நடவடிக்கை" எனப் பெயரிடப்பட்ட திட்டத்துக்கெதிராகத் தெரிவிக்கப்படும் மற்றொரு குறை என்னவென்ருல், அது உணவு உதவிகளைப் பெருமளவுக்குச் சார்ந்துள்ளதனுல் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகளாகும். இந்த உணவு உதவிகளால், இந்தியாவில் பாலுற்பத்தி இறக்குமதிப்பாலை அதிக அளவுக்குச் சார்ந்திருக்கும் நிலையை அடைந்துவிட்டதெனச் சில சமயங்களில் புகார் கூறப்படுகிறது. "வெள்ள நடவடிக்கை"யின் சாதனைகளுக்கும் இலக்குகளுக்குமிடையே விரிவான இடைவெளிகளுக்கும் இதற்கும் சம்பந்தமுண்டென அடிக்கடி கூறப்படுகிறது. சாதனைகளைக் காட்டியுள்ள இடங்கள் முதன்மை நிரலில் இடம்பெருத பகுதிகளாகும். இப்பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்களின் தொகை, நிறுவப்பட்ட பொறித் தொகுதிகளின் தொகை, திரட்டப்பட்ட ஊழியர்களின் தொகை, அல்லது பதிக்கப்பட்ட நவீன இயந்திர சாதனங்களின் தொகை ஆகியனவே உண்மையான உற்பத்தித் தாயத்துடன் மறைமுகமான தொடர்பு கொண்டுள்ளன.

இந்த உண்மையான குறைகள், இருப்பதாக எண்ணப்படும் குறைகள் எல்லாம் இருந்த போதிலும், இந்தியாவில் பால் பண்ணை வேளாண்மையினதும் பாற் பொருள்களினதும் அபிவிருத்தி ஒரு நீண்ட பிரயாணத்தைப் பூர்த்தி செய்து விட்டது. இக்காலத்தில் உற்பத்தி மட்டமும் விலைக் குறிப்பும் சந்தைப்படுத்தலும் தொழில் நுட்பவியலும் மற்றும் பாலுற்பத்தி நாடுகளில் பெரும்பாலானவற்றின் மாதிரியுருவிலிருந்து மாறுபடும் ஒரு மாதிரியுருவை உண்டாக்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

இரை தேடியலையும் கால் நடைகள் சாகுபடி செய்யப்பட்ட வயல்களுக்குள் நுழைந்துவிடாது தடுப்பதற்காக விவசாயிகள் அவற்றைச் சுற்றிப் போதிய பலம் வாய்ந்த வேலிகளை அமைக்கவேண்டியிருந்தது. இந்த ஏற்பாடு அவசியமாயிருந்தது, ஏனெனில் பயிர்களின் சொந்தக்காரர்களே கால்நடைகளின் சொந்தக்காரர்களாகவுமிருந்தன ரென்பது வெளிப்படை.

இந்தப் பொதுச் சமூக ஏற்பாடு 1940 களின் பிற்பகுதியில் குலைவதற்குரிய முதலாவது அறிகுறிகள் தென்பட்டன. காணிகளில் வேலைசெய்வதற்குக் கால் நடைகள் ஓர் அத்தியாவசியத் தேவையல்லவென்று விவசாயிகள் எண்ணத் தொடங்கினர். பண்ணைகளில் வேலை செய்வதில் இயந்திரக் கலப்பைகள் (ட்ராக்டர்கள்) உபயோகிக்கப்படுவதைப் பிரபலப்படுத்துவதற்காக அரசாங்கம் செய்த பிரசாரத்தின் விளைவாக, இந்த எண்ணம் உதித்தது. இம் மாற்றம் சம்பந்தமாக முதலில் வேண்டா வெறுப்புடனிருந்த பாரம்பரிய விவசாயிகள் பின்னர், அரசாங்கத்தினால் படிப்படியாகப் பிரபலப்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்ப முறை (ட்ராக்டர் உபயோகம்) யைக் கைக்கொண்டனர்.

இதனால் எண்ணற்ற வயல் வேலைகளில் வேலை செய்வதற்கு விலங்குகளுக்குப் பயிற்சியளிப்பதைப் புறக்கணிக்க விவசாயிகள் தூண்டப்பட்டனர். இறுதியில் சோம்பிக்கிடந்த தங்கள் கால் நடைகளை விற்று விடவும் தூண்டப்பட்டனர். கால் நடைகளைச் சொந்தமாகக் கொண்டிராத விவசாயிகள் அதிகரித்ததும், கால்நடைகளைச் சொந்தமாக வைத்திருந்த விவசாயிகளுக்கும் சொந்தக் கால்நடைகளைக் கொண்டிராத விவசாயிகளுக்குமிடையே தகராறு மூண்டது. சாகுபடி செய்யப்பட்ட வயல்களின் சொந்தக்காரர்கள் தாங்கள் வயல்களைச் சுற்றித் தகுந்த வேலிகளிட்டுக் கிராமக் கால்நடைகளிலிருந்து தாங்கள் வயல்களைப் பாதுகாக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டுமா அல்லது கால் நடைகளின் சொந்தக்காரர்கள் பயிர்கள் சேதமுறாதவாறு தடுத்து பொது மேய்ச்சல் நிலங்களில் மேயும் தங்கள் கால் நடைகளைக் கண்டிப்பான கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டுமா வென்பதே அத்தகராறு.

இத்தகராறு ஆரம்பித்ததும், வயல் சொந்தக்காரர்கள் கிராமக் கால்நடைகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்கப் பலம் வாய்ந்த வேலிகளை அமைப்பதற்குப் பதிலாகப் பலக்குறைவான வேலிகளைக்கட்டி, கால் நடைகள் இத்தகைய பலவீனமான வேலிகளை உடைத்துக் கொண்டு சாகுபடி செய்யப்பட்ட வயல்களுக்குள் புகாதவாறு பார்த்துக் கொள்ளும்படி அவற்றின் சொந்தக்காரர்களைக் கட்டாயப்படுத்தினர். கிராமக் கால்நடைகளால் ஒரு பயிருக்குச் சேதம் உண்டானால், உணவு உற்பத்தியை அதிகரிக்கும் (பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட) கொள்கையைக் கொண்ட நிர்வாகிகள் சாகுபடியாளருக்கு ஆதரவாகவே செயற்பட்டனர். இந் நடவடிக்கை கிராமத்தில் கால்நடைகள் வைத்திருப்பதற்கு ஊக்கத்தைக் குறைத்தது. இதனால் இறுதியில் உலர்வலயத்திலே பாலுற்பத்தி தற்போதைய குறைந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

உலர் வலயத்திலுள்ள மாவட்ட நகரங்களில் அரசாங்கம் திறந்த இயந்திரக்கலப்பை நிலையங்கள் இயந்திரக்கலப்பைகளை உபயோகிப்பதனால் உழுவதில் நேரம் மிச்சப்படுகிறது என்பதைச் செய்முறையில் எடுத்துக் காட்டின.

மாட்டிறைச்சிக்கு அதிகரித்த கோரிக்கையும் மாடுகள் தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சியும்

நகர்ப்புற வாசிகளுக்கு மாட்டிறைச்சியே புரதத்தைப் பெறுவதற்கு மிக மலிவான மூலமாக இருந்து வருகிறது. குறித்த நிறையுள்ள மாட்டிறைச்சியின் விலை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மீனின் விலையை விட குறைவாயுள்ளது. எனவே, குறிப்பாக நகர்ப்புறங்களில் வசிக்கும் பெரும்பான்மையான ஏழை மக்களிடையே மீனுக்கான கோரிக்கையைவிட மாட்டிறைச்சிக்கான கோரிக்கையே எப்பொழுதும் அதிக அளவில் இருந்து வந்தது. புரதத்தை வழங்கும் மற்றும் மூலங்களான கோழிக் குஞ்சு, பன்றியிறைச்சி போன்றவை தட்டுப்பாடாயிருப்பதாலும் மாட்டிறைச்சிக்கான கோரிக்கை பெருமளவுக்கு உயருகின்றது.

இதன் விளைவாக, கால் நடைகளை இடத்துக்கிடம் கொண்டு போதல், கொல்லுதல் மீதான எண்ணற்ற கட்டுப்பாடுகளின் மத்தியில் இறைச்சிக்காக மாடுகளை வெட்டுதல் பெருமளவுக்கு அதிகரித்துள்ளது. பசு மாடுகள், கன்றீனும் பசுக்கள், கன்றுகள் ஆகியவற்றை இறைச்சிக்காக வெட்டக் கூடாதென மிகச் சமீபத்தில் தடைவிதிக்கப்பட்டது. எனினும், இத்தகைய கால்நடைகள் சட்ட விரோதமாகக் கொல்லப்படுதல் நிற்பது சற்றும் சாத்தியமல்ல. கால்நடைகளின் தொகையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் திட்டவட்டமான தன்மையைத் தெளிவாக நிர்ணயிக்க முடியாது. ஏனென்றால், இலங்கையிலுள்ள கால்நடைகளின் தொகை முறையாகக் கணக்கிடப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பற் சேவை

கடல்சார் மோசடிகளை தவிர்த்தல்

கடல்சார் மோசடிகள் கவலையை உண்டாக்குபவையாகவும், விடாப்பிடியாக நடைபெற்று வருவனமாகவும் உள்ளதால், இன்று அது சர்வதேச வர்த்தகத்துக்கே ஒரு பயமுறுத்தலாக அமைந்துள்ளது. இப்பிரச்சினையின் பரிமாணத்தைப் பற்றிய ஒரு மதிப்பீட்டின்படி, இம் மோசடிகளால் கப்பற்றுறைக் கைத்தொழிலுக்கு ஆண்டொன்றுக்கு 1300 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட நஷ்டங்கள் ஏற்பட்டு வருகின்றன. மேலும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளே மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பாதிக்கப்பட்டுள்ளன. 1985 ம் வருடம் அக்டோபர் - நவம்பர் மாதங்களில் ஜெனீவாவில் ''அங்டாட்'' (வர்த்தகம் - அபிவிருத்திய ஐ. நா. மாநாட்டு ஸ்தாபனம்) ஆதரவில் அரசாங்கங்களுக்கிடையான குழுக் கூட்டத்தில் கப்பற் போக்குவரத்து நிபுணர்கள் கண்டறிந்து வெளியிட்ட முடிவுகளில் இவை சிலவாகும். இக் கூட்டத்தில் சுமார் 50 நாடுகளும் பல அரசாங்கங்களுக்கிடையிலான ஸ்தாபனங்களும் அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்களும் பங்குபற்றின.

கப்பற்சேவை முகவர்கள்

இந்த ஜெனீவா கூட்டங்களில் வெளியிடப்பட்ட ஒரு முக்கியமான யோசனை என்னவென்றால், கப்பற்சேவை முகவர்களின் நிதித் தகைமை, தொழில் முறை யோக்கிய தாம்சங்கள் சம்பந்தமாக ஒரே சீரான குறைந்தபட்சத் தரங்களை உருவாக்க வேண்டுமென்பதாகும். இது தேசிய அதிகாரிகளுக்கு ஒரு வழிகாட்டு நெறியாகப் பயன்படுமென்றும் கூறப்பட்டது. சகல வகையான கப்பற் சேவை முகவர்களும் அதாவது கப்பலைக் குத்தகைக்கு அமர்த்தும் தரகர்கள், முறைக் கப்பல் வர்த்தகங்களிலுள்ள தரகர்கள், விற்பனை - கொள்வனவுத்தரகர்கள், துறைமுக முகவர்கள், கேழ்வு அனுப்புவோர் ஆகிய எல்லோரும் சேர்க்கப்படுவார்களென்று அங்டாட் செயலகம் வெளியிட்ட ஆவணமொன்று எதிர்பார்க்கின்றது.

அந்த அங்டாட் ஆவணம் வாதிப்பதாவது: ''கப்பற் சேவை முகவர்கள்மீது தகுந்த கட்டுப்பாடு இருந்துவர வேண்டிய தவசியமென்பதற்கு, ஒரு குழு என்ற முறையில், இவர்கள் கப்பல்களைச் செலுத்துதல், சரக்குகளை ஏற்றிக் கொண்டு போதல், கப்பல்களை விற்றல், கப்பல்களைக் குத்தகைக்கு அமர்த்தல், கப்பல்களைச் செயற்படுத்தல் ஆகியவற்றில் இட்டத்தட்ட ஒவ்வோர் அம்சத்திலும் சம்பந்தப்படுதல் அதிகரித்து வருவதே காரணம். ஆனல், கப்பற் போக்குவரத்துக் கைத்தொழிலும் மற்றுப் போக்குவரத்து முறைகளும் கொள்கலங்களில் சரக்குகளை அடைத்தலும் பலவித போக்குவரத்து முறைகளும் துரிதமாக வளர்ந்ததன் காரணமாக, சில தரகர் குழுக்கள் அதாவது முன் சரக்கனுப்பும் முகவர்கள் பிரதானிகளாகவும் தங்கள் சொந்தப் பெயர்களிலும் செயலாற்ற வந்து விட்டனர்.''

ஒரே சீராக ஒழுங்குபடுத்தும் திட்டமொன்றை ஸ்தாபிப்பது விரும்பத்தக்கதென்ற கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதென்றால், அப்பொழுது அதில் சேர்க்கப்பட வேண்டிய முகவர் செயற்பாடுகளின் தன்மையையும் வகையையும் ஆராய்ந்து பார்ப்பதும், கப்பற்சேவை முகவர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகளின் திட்டவட்டமான தன்மையைப் பரிசீலிப்பதும் அவசியமென்று அந்த ஆவணம் முன்னுணர்ந்து கூறுகிறது. கப்பற்சேவை முகவர்களுக்குத் தேவையான தகைமைகளைப் பொறுத்தவரை, அவர்களுடைய நிதி நிலைமை, தொழில்நுட்ப சமர்த்து, தொழில்முறை நடத்தை ஆகியன கவனிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆழமான பரிசீலனை பூர்த்தியானதும், நிதித்தகுதி, தொழில்முறைத் தகைமைகள் அத்துடன் தொழில்முறை ஒழுக்கம் சம்பந்தமாக ஒரே சீரான தரங்கள் வழிகாட்டு நெறிகளாக உருவாக்கப்பட வேண்டும். இத்தரங்களை ஒவ்வொரு நாட்டிலுள்ள தகுந்த தேசிய ஸ்தாபனம் அமுல் செய்யலாம்.

வார் நாமாக்களுக்கு மத்திய பதிவுக்கந்தோர்

வார் நாமாக்களுக்கு ஒரு மத்திய பதிவுக் காரியாலயத்தை அமைப்பது, பொய்ப்பித்தல் கடினமாயுள்ள பாதுகாப்பான வார் நாமாக்களை ஏற்படுத்துவது, கப்பலதிகாரியின் கையெழுத்துக்குப் பதிலாக முத்திரையிடும் நடைமுறைகளை உபயோகிப்பது, வார் நாமாக்களுக்குப் பதிலாகக் கடல் சுமைப் பத்திரங்களை உபயோகிப்பது, ஆகியன இன்னொரு யோசனை. ''சுமைப் பத்திரங்கள் உபயோகிப்பதைப் பொறுத்தவரை, இதற்குக் கடல்சார் பழக்கத்தில் ஒரு மிதமான மாற்றம் தான் செய்ய வேண்டும். சுமைக்கு அத்தாட்சியாகச் சாத்தியமான போதெல்லாம் பரிமாற்றத்தக்க பத்திரங்கள் உபயோகிப்பதை விட தனிப் பற்றுச் சீட்டுகளை உபயோகிப்பதனல், பெரும்பாலான ஆவண மோசடிகளைத் தடுக்கலாம்''

அரசாங்கங்களுக்கிடையிலான குழு கவனத்திற்கெடுத்த மற்றிரு யோசனைகளில் ஒன்று, வங்கி மீஉயர் சேவையொன்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தல்; மற்றது, மோசடி செய்வோர் மீது வழக்குத் தொடருவதற்கு வழிசெய்ய சர்வதேச ஒப்பந்தமொன்றின் சாத்தியத் கூறுபற்றி ஆராய்தல்.

மீஉயர் சேவையின் கீழ், ஒரு வியாபார நடவடிக்கையில் கொள்வனவாளராயிருப்பவர் கேட்டுக் கொள்வதன் பேரில் வங்கியொன்று, ஒரு குறித்த கப்பற் சரக்குக்கான சோதனைச் சான்றிதழை வழங்கியவருடன் கீழ்க்கண்டவற்றைச் சரிபார்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்: (அ) சோதனைச் சான்றிதழ் உள்ளது (ஆ) கொள்வனவாளரின் கையிலுள்ள சோதனைச் சான்றிதழ் அசல் பத்திரத்தின் ஓர் உண்மையான, அதிகார பூர்வமான, திருத்தப்படாத பிரதி என்பவற்றை வங்கி சரிபார்க்கும். இது சோதனைச் சான்றிதழில் கள்ளக் கையெழுத்திடும் சாத்தியக் கூற்றை ஒழித்துவிடும்.

யோசனை கூறப்பட்ட இந்தத் தடுப்பு நடவடிக்கைகளுக்குமேல், கடல்சார் மோசடிச் சம்பவங்கள் சம்பந்தமாகப் பயனுள்ள நடவடிக்கைகளைக் கைக்கொள்வதற்காக வழக்குத் தொடரும் அதிகாரிகளின் திறமையை அதிகரிப்பதவசியமென்றும் வலியுறுத்தப்பட்டது.

கடல் சார் மோசடிகளை எதிர்த்துப் போராடுவதற்குச் சர்வதேச ஒப்பந்தமொன்றை முடித்தல் விரும்பத்தக்கதெனக் குழு கருதியது. இதற்கு ஆதரவாக, ''கடல்சார் மோசடிகள் போன்ற சர்வதேச குற்றங்களை விளக்கிக் கூறுவதன் மூலமும் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடருவதற்கோ அல்லது ஒளித்தோடிய குற்றவாளிகளை நாடு கடத்துவதற்கோ அந்தந்த நாடுகுத் தக்க அதிகாரத்தை வழங்குவதன் மூலமும் இத்தகைய ஓர் ஒப்பந்தம் கடல் சார் குற்றவாளிகளைக் கைது செய்யக் குறிப்பிடத்தக்கவாறு உதவும்'' என்று குழு கூறியது.

அரசாங்கங்களுக்கிடையிலான இக் குழுவின் கூட்டங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க தீர்மானங்கள் வருமாறு:

* கப்பற் சேவை முகவர்கள் சம்பந்தமாகத் தொழில்முறை நடத்தைக்கும், நிதிப் பொறுப்புக்கும் குறைந்த பட்ச தரங்களை நிர்ணயிக்கும் பிரச்சினையில் அங்டாட் செயலகம் தொடர்ந்து கவனஞ் செலுத்த வேண்டும். முதலாவதாக, அங்டாட் செயலகம் ''கப்பற் சேவை முகவர்களின் தொழிற் சங்கங்கள் தேசிய மட்டத்திலோ அல்லது சர்வதேச மட்டத்திலோ பிரயோகிக்கும் வெவ்வேறு குறைந்தபட்ச தரங்களை ஒப்பியல் ரீதியாக ஆராய்ந்து, கப்பற் சேவை முகவர்களின் வேலைகளில் சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் கட்டாயமல்லாத குறைந்தபட்ச தரங்களுக்கான பொது வழிகாட்டு நெறிகளை விருத்தி செய்வதற்கு என்ன வாய்ப்புகளிருக்கின்றனவென்பதில் கவனஞ் செலுத்தவேண்டும். இவ்விதம் அறியப்படும் வாய்ப்புகளைக் கருத்திற்கொண்டு, அங்டாட் செயலகம் பின்னர் குறைந்தபட்ச தரங்களின் ஒரு நகல் அறிக்கையைத் தயாரிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.'' 1986 நவம்பர் மாதம் அங்டாட் கப்பற் போக்குவரத்துக் கமிட்டியின் அடுத்த கூட்டம் நடைபெறும் போது, குழு இதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்கும். மேலும், கப்பற் சேவை முகவர்கள் சம்பந்தமாகக் கல்வி, தொழில் ரீதியான நிபுணத்துவம், தொழில் முறை ஒழுக்கம் தொடர்பாகத் தரங்களை விருத்தி செய்யக் கூடிய நிலையிலுள்ள தொழில் முறை ஸ்தாபனங்கள் அவ்வாறு செய்ய வேண்டுமென்றும், அப்படிச் செய்யும்போது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தேவைகளில் விசேஷ கவனஞ் செலுத்த வேண்டுமென்றும் கோரும் இன்னொரு ஏற்பாடும் அத்தீர்மானத்தில் அடங்கியுள்ளது.

* வார்நாமாக்களுக்குப் பதிலாகக் கடல் சார் சுமைப் பத்திரங்களை அமுலுக்குக் கொண்டு வரும் சாத்தியக் கூறுகள் உட்பட வார்நாமாக்களின் உபயோகம் தொடர்பாக ஆவண மோசடிகளை தடுப்பதற்காக வர்த்தகப் பங்காளிகளுக்கு ஊக்கமளிப்பதற்கான வழிவகைகளைக் காண அங்டாட் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிப் பரிசீலனையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றும் 1986 நவம்பரில் கப்பற் போக்குவரத்துக் கமிட்டியின் அடுத்த கூட்டத்தில் இது பற்றிய அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

* மோசடிகள் சம்பந்தமாக வழக்குத் தொடரும் துறையில், கடல்சார் மோசடிகள் பற்றிய புலன் விசாரணைகளிலும் வழக்குத் தொடருவதிலும் இப்போது இருந்து வரும் தேசிய, சர்வதேச ஸ்தாபனங்களுக்கிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கும் வழிமுறைகளை ஆராயுமாறும், அந்நோக்கத்துக்காக நேரொத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஜெனீவா குழுக்கூட்டம் கப்பற் போக்குவரத்து பற்றிய அங்டாட் கமிட்டி கேட்டுக் கொண்டது.

கப்பற் கொள்ளை, கடல் சார் மோசடிகள் பற்றி அங்டாட் நடத்திய ஓர் ஆராய்ச்சிப் பரிசீலனையிலிருந்து, எத்தனையோ வகையான மோசடிச் செயல்கள் தற்போது சர்வதேச கப்பற் போக்குவரத்தையும் வர்த்தகத்தையும் அலைக்கழித்து வருவதாகத் தெரியவந்துள்ளது. அம்மோசடிச் செயல்கள் பல சந்தர்ப்பங்களில் வர்த்தக ஒப்பந்தங்களையும் ஆவணங்களையும், குறிப்பாக வார்நாமாக்களைத் துஷ்பிரயோகஞ் செய்யும் அயோக்கியத் தனங்களாகவே இருக்கின்றன. கப்பல் குத்தகைப் பத்திர மோசடிகள், கப்பற் சரக்குக் களவுகள், கடல் காப்புறுதி மோசடிகள் ஆகியனவும் கணக்கிலடங்காதனவாயுள்ளன. மற்றும் மோசடி வகைகள், கப்பற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை முகவர்களின் நடவடிக்கைகள் தொடர்பானவையாகவும் ஈடுமோசடிகளாகவும் துறைமுக நடவடிக்கைகளையொட்டி நடத்தப்படும் மோசடிகளாகவும் இருக்கின்றன.

ஆவண மோசடி என்று வழக்கமாகக் குறிப்பிடப்படும் வஞ்சகச் செயலைச் செய்வதில் பல்வேறு ஆவணங்கள் உபயோகிக்கப்படலாமெனினும், வார்நாமாதான் இத்தகைய தீத்தொழில்களுக்குக் கிட்டத்தட்ட ஏற்ற கருவியாக இருப்பதாகத் தோன்றுகிறது. வார்நாமா சரக்குகளை ஏற்றி வந்த கப்பல் அச்சரக்குகளுக்குக் கொடுத்த ஒரு பற்றுச்சீட்டாக மட்டுமன்றி, அச்சரக்குகளைச் சுமந்து வந்த ஒப்பந்தத்தின் அத்தாட்சியாகவும் பயன்படுகிறது. மிக முக்கியமாக, அது சரக்குகள் சம்பந்தமாக ஓர் உரிமை ஆவணமாகவும் விளங்குகிறது. சரக்குகளுக்குப் பணம் கொடுப்பதற்கு முன்பு ஒன்றில் சரக்குகள் ஏற்றப்படும் துறைமுகத்திலோ — இது நெடுந்தூரத்துக்கு அப்பால் உள்ளது - அல்லது சரக்குகள் வந்து சேரும் துறைமுகத்திலோ - சரக்குகளை விற்போர் சரக்குகள் வந்து சேர்வதற்கு முன்பு அச்சரக்குகளுக்கான பணத்தைப் பெற விரும்புகிறார்கள் - கொள்வனவாளர்கள் சரக்குகளைச் சோதித்துப் பார்ப்பதென்பது வழக்கமாக இயலாத காரியமாகவே உள்ளது. இதனுல் சரக்குகளுக்கான பணம், தக்க ஆவணங்கள் பிரதானமாக வார்நாமா (விக்கிரயப்பட்டியல்) ஒப்புவிக்கப்பட்டதும் கொடுக்கப்பட்டுவிடுகிறது.

பொதுவாக நடைபெறும் ஒரு மோசடியைக் கவனிப்போம். விற்பனையாளர்கள் வார்நாமா வழங்கப்படுவதற்காகச் சரக்குகளை ஒரு கப்பற் போக்குவரத்து நிறுவனத்திடம் ஒப்புவிக்கவேண்டும். ஆனுல், நேர்மையற்ற விற்பனையாளர்கள் இப்படிச் செய்வதற்குப்பதில், கப்பலேற்றப்படுவதற்கு எந்தச் சரக்குகளையும் ஒப்புவிக்காமலே அந்தக் கப்பல் கம்பெனியின் நியமப்படிவங்களில் கள்ள வார்நாமாவைத் தயாரித்து விடுகின்றனர். விற்கும் விலையைக்குறிக்கும் விக்கிரயப்பட்டியல், சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான கடல் காப்புறுதிப்பத்திரம், மூல நாட்டுச் சான்றிதழ், சோதனைச் சான்றிதழ் போன்ற மேலதிக ஆவணங்களும் கள்ளமாகத் தயாரிக்கப்பட்டுவிடுகின்றன. ஒப்பியல் ரீதியாக இது ஒரு சுலபமான காரியமாயுள்ளது. ''சரக்குகளுக்கான'' உரிமை ஆவணமாக வார்நாமாவும் மற்றும் ஆவணங்களும் சந்தேகப்படாத ஒரு கொள்வனவாளருக்கு விற்கப்படுகின்றன. அவர் குறித்த துறைமுகத்துக்கு வந்து சேர்ந்ததும் சரக்குகளைப் பெற்றுக் கொள்ளலாமென எதிர்பார்த்துக் காத்திருக்கிருர். எனினும், அந்தக் கப்பல் ஒரு போதும் வந்துசேர்வதில்லை. அப்படி வந்து சேர்ந்தாலும், அவர்வாங்கிய சரக்குகள் அதில் இருப்பதில்லை. கொள்வனவாளர் இம் மோசடியைக் கண்டு பிடிக்கும் போது, சரக்குகளை அவருக்கு விற்றவர் வழக்கமாக மறைந்து விடுகிருர்.

நேர்மையற்ற விற்பனையாளர்கள் இன்னெரு மாற்று உபாயத்தையும் கையாள்வதுண்டு. அதாவது, கொள்வனவாளருடன் முடிக்கப்பட்ட விற்பனை ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டதைவிட குறைவான தரத்தில் அல்லது அளவில் உள்ள சரக்குகளை அவர்கள் கப்பலேற்றிவிடலாம். குறிப்பாக, சரக்குகள் கொள்கலங்களில் முன்பே அடைக்கப்பட்டு விடுவதால் தரத்திலோ அல்லது அளவிலோ உள்ள வித்தியாசம் பல சந்தர்ப்பங்களில் கண்டுபிடிக்கப்படுவதில்லை.

மற்றும் வகையான கடல் சார் மோசடிகள் குத்தகைக்கு அமர்த்தப்பட்ட கப்பல்களை உபயோகித்தல் தொடர்பாக நடைபெறுகின்றன. உதாரணமாக, கப்பலொன்றைக் குத்தகைக்கு அமர்த்தும் ஒருவர் அக்கப்பலுக்குரிய குத்தகைப் பணத்தைத் தவணைமுறையில் செலுத்துவதாகக்கூறி, கப்பற்சரக்குகளைக் கொண்டு செல்லத் தமது சேவைகளை வழங்குகிருர்; அவர் குறிப்பிடும் கேழ்வுக் கட்டண விகிதங்கள் பல சந்தர்ப்பங்களில் அனுகூலமாயிருக்கின்றன. சரக்குகள் கப்பலில் ஏற்றப்பட்டவுடன் கப்பலைக் குத்தகைக்கு அமர்த்தியவர் வார்நாமாவை வழங்கி, கேழ்வுக் கட்டணத்தைச் சேகரிக்கிருர்; ஆனுல், கப்பல் உரிமையாளருக்கு மேலும் கொடுக்க வேண்டிய குத்தகைப்பணத்தைக் கொடுக்கத் தவறுகிருர்; பின்னர் ஒன்றில் மறைந்து விடுகிருர் அல்லது வங்கரோத்தாகிவிடுகிருர். கப்பல் உரிமையாளரும் கப்பற் சரக்குகளின் உரிமையாளரும் இவ்விதம் வெவ்வேறு உபாயங்களால் தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதைக் காண்கிருர்கள். ஒருவர் தமது கப்பலில் சரக்குகளை ஏற்றிச் சென்றதற்குரிய கட்டணப் பணத்தைப் பெறவில்லை. மற்றவர் சரக்குகளுக்கான பணத்தையும் கேழ்வுக் கட்டணத்தையும் கொடுத்துவிட்டு, சரக்குகள் தம்மிடம் முறையாக ஒப்புவிக்கப்படும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்.

இன்னெருவகையான மோசடி கப்பற்சரக்குகள் களவாடப்படுவதாகும். ஒரு கப்பல் உரிமையாளர் ஓர் ஒப்புக்கொள்ளப்பட்ட இடத்துக்குச் சரக்குகளைக் கொண்டுபோவதற்காகக் கப்பலொன்றை கடுத்தகைக்கு அமர்த்துமாறு அச்சரக்குகளின் உரிமையாளரைத் தூண்டும்போது இம்மோசடி நடைபெறுகிறது. எனினும், ஒப்புக்கொள்ளப்பட்ட இடத்துக்குப் போவதற்குப் பதிலாக, கப்பல் வழியில் திசைதிரும்பி இன்னேர் இடத்துக்குச் செல்கின்றது. அங்கு கப்பற்சரக்குகள் கப்பல் உரிமையாளரின் நன்மைக்காக விற்கப்படுகின்றன. பின்னர், அக்கப்பல்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றில் கடலில் ஆழ்த்தப்படுகிறது அல்லது ''காணாமற்போகிறது.'' கப்பலின் பெயரையும், கப்பலின் பெயரளவிலான உடைமையையும் கப்பல் பதிவு செய்யப்பட்ட நாட்டின் பெயரையும் மாற்றுவதன் மூலம் இத்தந்திரோபாயம் அடிக்கடி கையாளப்படுகிறது. யுத்தத்தினாலோ, உள்நாட்டுக் குழப்பத்தினாலோ அல்லது மற்றும் காரணங்களினாலோ இறுக்கமான மேற்பார்வையும், கட்டுப்பாடுமில்லாத துறைமுகங்களுக்கருகே தான் இவ்வகையான மோசடி செழித்தோங்குகிறது.

கடல் காப்புறுதி தொடர்பான மோசடிகள் பல்வேறு வகையில் நடைபெறுவதாக அவ்வறிக்கை கூறுகிறது. காப்புறுதி செய்வோரிடம் வஞ்சக நோக்குடன் தவறான விவரங்களைக் கூறுதல் அல்லது ஒரு முக்கியமான உண்மையை வெளியிடாதிருத்தல் போன்ற மோசடிகள் பல நடைபெறுகின்றன. வழக்கமாகக் காப்புறுதி செய்யப்படும் பொருளின் பெறுமதி சம்பந்தமாகவும், சில சமயங்களில் காப்புறுதி செய்யப்பட்ட பொருளின் இருப்பு பற்றிக் கூட இம்மோசடி செய்யப்படுகிறது.

கப்பலின் உடற்பகுதி, கப்பற் சரக்குகள் ஆகியன காப்புறுதி செய்யப்படுவதில் இவ்வித மோசடி நடைபெறலாம். மிதமிஞ்சிய பெறுமதிக்குக் காப்புறுதி செய்யப்பட்ட கப்பலொன்று அடித்தளத்தில் துவாரம் அறுத்து, கடலில் ஆழ்த்தப்படுதல் அல்லது சர்வதேச முறையில் கடலில் அமிழ்த்தப்படுதல் இம்மோசடியில் அடங்குகிறது. இது கப்பல் உரிமையாளருக்கு நன்மை செய்யும். ஏனென்றால், கப்பலின் உண்மையான பெறுமதிக்கு மேற்பட்ட தொகையை அவர் நஷ்டஈடாகக் கோருவார். கப்பற் சரக்கு உரிமையாளர் சம்பந்தப்படும் இன்னொரு விதமான மோசடியும் நடைபெறுகிறது. மிதமிஞ்சிய பெறுமதிக்குக் காப்புறுதி செய்யப்பட்ட சரக்குகளை அல்லது காப்புறுதி செய்யப்பட்ட இல்லாத சரக்குகளைக் கொண்டு செல்லும் ஒரு கப்பல் கடலில் ஆழ்த்தப்பட்டால், அக்கப்பற் சரக்குகளின் உரிமையாளர் நேர்மையற்ற முறையில் இலாபம் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. கபட நோக்குள்ள ஒரு கப்பல் உரிமையாளரும் கப்பலின் அடிப்பகுதியில் தூவாரம் அறுத்து, இலாபமடையலாம். கப்பற் சரக்குகளைக் களவாடி, கப்பலைக் கடலில் ஆழ்த்துவதற்கு முன்பு அச்சரக்குகளை இரகசியமாக விற்றுவிட்டு, கப்பல் கடலில் ஆழ்ந்து விட்டதென்று கூறி நஷ்டஈடு பெறலாம்.

இவ்வித சந்தர்ப்பங்களில் சந்தேகங்கொள்ளும் காப்புறுதிக்காரர் இத்தகைய நஷ்ட ஈட்டுக் கோரிக்கைகளைத் தவிர்க்க விரும்பினால், பிரஸ்தாப கப்பல் வேண்டுமென்றே கடலில் ஆழ்த்தப்பட்டதென்று நிரூபிப்பதுடன் மட்டுமன்றி காப்புறுதி செய்யப்பட்டவரும் இச்செயலில் உடந்தையாயிருந்தாரென்றும் நிரூபிக்க வேண்டும். இது பல சந்தர்ப்பங்களில் ஒரு கடினமான காரியமாகும். ஏனென்றால், சாட்சியங்கள் பல சமயங்களில் கிடைப்பதில்லை; அத்துடன், சில தேசிய சட்ட முறைகளின் கீழ் இந்தச் சாட்சியங்களைச் சமர்ப்பிப்பது சட்ட முறைப்படி கடினமாகும்.

(6 -ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு அங்கமான சர்வதேச அபிவிருத்திச் சங்கம் இவற்றுள் ஒன்றாகும். 1982/83 இல் இங்கு வந்த சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் தூதுக்குழு, அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட ஊக்குவிப்புக்கள், மாற்றங்கள் என்பவற்றுக்கு பாற்பண்ணைத்துறை எத்தகைய பிரதிபலிப்பினை அளித்துள்ளது என்பதனை மதிப்பீட்டு, பல புதிய ஆலோசனைகளை முன்வைத்தது. இதுவரையிலும் பின்பற்றப்பட்ட ஒரு பாரிய கொள்கை மாற்றமாக இது கருதப்படுகிறன்து. இதன் அடிப்படையில் நாடு பெருந்தோட்டங்கள், மத்திய பிரதேச சிறு உற்பத்தியாளர்கள், வறண்ட வலயம், யாழ்ப்பாண நகர்ப்புறம், எருமைச் சிற்றுடைமையாளர் என ஐந்து பிரதான பால் உற்பத்திப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது.

இத்திட்டம் அது அமுல்படுத்தப்பட்ட ஏழு வருடங்களுள் ஒரு நாளைக்கு 106,000 மில்லிலீற்றர் பாலை உற்பத்தி இலக்காகக் கொண்டுள்ளது. 1970 க்களில் சர்வதேச அபிவிருத்திச் சங்க உதவியுடன் அமுலாக்கப்பட்ட திட்டம், மத்திய பிரதேச ஈர வலயத்திற்கும் தென்னை முக்கோணத்திற்கும் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. பின்னர், நீண்ட காலத்தில் மொத்தத் தேசிய உற்பத்தித் திட்டத்திற்கு ஊக்கம் அளிப்பதற்கு, விவசாயக் காலநிலைப் பிராந்தியங்களின் அடிப்படையில் இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. பால் தருகின்ற மிருகங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், வீட்டு மிருக வகைகளை மாற்றியமைத்தல், கலப்பு இன மிருகங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், மிருகங்களின் நாளாந்த தலா பால் உற்பத்தி அதிகரிப்பு என்பவற்றின் மூலம் இத்திட்டத்தின் இலக்குகளை அடைய எதிர்பார்க்கப்பட்டது. கிராமீய மட்டத்தில் ஏறக்குறைய 1,920 பால் உற்பத்திச் சங்கங்களை ஏற்படுத்துவதன் மூலம் இதனை அடைய எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய ஒரு திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டால், தொழில் வாய்ப்பு, வருமான உருவாக்கம், வருமான மீள்பகிர்வு, வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்பு, போஷாக்கு நிலைமையில் அபிவிருத்தி, பொது நலன் வாழ்க்கைத்தரம் என்பவற்றில் நற்பயன்கள் விளையும். இதன் வெற்றி பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. இக்காரணிகள் சிறப்பாகக் கவனத்திலெடுக்கப்படாவிட்டால், நடைமுறையிலுள்ள நிலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படமாட்டாது.

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்முக நாடுகளில் முறைசாரா சேமிப்பு, கடனுதவி ஒழுங்குகள்

இலங்கை குறித்த சில அவதானிப்புக்கள்

எப். ஜே. ஏ. பௌமன்

இலங்கையிலுள்ள கிராமிய மக்கள் தமது நிதி விவகாரங்களை நிர்வகிப்பதற்காகக் கைக்கொள்ளும் முறைசாரா ஒழுங்கு முறைகள் பற்றிய இக் கட்டுரையில், நெதர்லாந்திலுள்ள வக்னின்ஜன் விவசாய பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பேராசிரியர். எப். ஜே. ஏ. பௌமன் மக்கள் தனிப்பட்ட யுக்தியினூடாகவும், குழு யுக்தியினூடாகவும் ஏன், எப்படி, யாருடன் சேமிக்கிறார்கள் என்பது பற்றி விமர்சிக்கிறார். சேமிப்பும், கடன்வாங்குதலும் ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்புள்ளவையாக இருக்கின்றதென்றும், இம் முயற்சியில் அமைப்பாளர்களின் ஈடுபாடு பற்றியும், முறைசாரா நிதி நடவடிக்கைகளில் மக்களின் விருப்பு பற்றியும் இங்கு குறிப்பிடப்படுகிறது. இக் கட்டுரையின் இறுதிப் பகுதியில், முறைசார்ந்த, முறைசாரா நிதிப்பிரிவுகளுக்கிடையேயுள்ள தொடர்பு நன்மைகள் பற்றி விவரிக்கப்படுகிறதுடன், இவையிரண்டிற்குமிடையே மேலும் தொடர்புகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் புதிய அணுகுமுறைகளைக் கொண்ட பரிசிலனைகளும் விவரிக்கப்படுகிறது.

மூன்றும் உலக நாடுகளிலுள்ள கிராமிய மக்களுக்கு, முறைசார்ந்த நிதித்துறையானது பயன்படத்தக்க முறையில் சேவை செய்யவில்லை என்ற ஒரு பொது அபிப்பிராயம் ஆராய்ச்சியாளர்களிடையே நிலவி வருகிறது. வறிய மக்களினால் ஏற்படுத்தப்படும் நிதி நிலைமை சவாலாக இருக்கும் புதிய எண்ணக்கருக்களை ஆராயவும், அவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடிய நடைமுறைகளை ஆராயவும், கொள்கை அமைப்பாளருக்கு ஒரு ஏவுதலை அளிப்பதில்லை. இதனால், இவ்வறிய மக்கள் தங்களின் நிதிசார் நடவடிக்கைகளை எவ்வாறு நிர்வகிக்கிறார்கள் என்ற வினா எழுகிறது. இதற்குரிய விடையின் ஒரு பகுதியாக, அவர்களின் சுய உதவிமுயற்சி அமைகிறது. நீண்ட கால மரபாக, மக்கள் தமது சேமிப்பு, கடனுதவி நோக்கங்களுக்கு திருப்தியளிக்கக் கூடிய வகையில் பரஸ்பர உதவிச் சூத்திரங்களை உருவாக்கியுள்ளனர். இவர்கள் நகை அடவு பிடிப்போர், கடை முதலாளிகள் வட்டிக்குப் பணம் கொடுப்போர் ஆகியோரிடமும் செல்வார்கள். ஆச்சரியப்படத்தக்கவகையில், மிகவும் பாதிப்படைந்துள்ள முறைசாரா நிதி சார்ந்த நடுத்தரவகுப்பானது சுய உதவி நிறுவனங்களில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றதாகத் தோன்றுகிறது.

இந்த ஆய்வுக்கட்டுரையானது இலங்கையினை விசேஷ மேற்கோளாகக் காட்டி, வளர்முக நாடுகளிலுள்ள முறைசாரா சேமிப்பு, கடனுதவிகள் பற்றி ஆராய்கிறது. இது சுய உதவிச் செயற்பாடுகள் பற்றியே முக்கியமாக ஆராய்கிறது. தனிப்பட்ட அவதானிப்புகளைவிட, இலங்கையில் ஆறுமாதகாலம் வாழ்ந்த 4 பட்டதாரி மாணவர்களினால் சேகரிக்கப்பட்ட தகவல்களிலும், இவ்வாய்வானது தனது கவனத்தை ஈர்க்கிறது. உலகம் முழுவதிலும் பலதரப்பட்ட பெயர்களில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள சுழற்சி முறைச் சேமிப்புக் கடனுதவி கழகங்களின் (ரொஸ்கா) சீட்டு முறை பற்றி திரு. எம். ஓவர்ஹோல் என்பவரும், திரு. பி. பேகர்ஸ் என்பவரும் ஆராய்ந்தார்கள். திரு. எம். பூட் என்பவரும் திரு. ஜே. வேல் என்பவரும் கண்டி மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் வாழ்ந்து, தனிப்பட்ட குடும்பங்களின் சேமிப்பு, கடனுதவி, முதலீட்டு போக்கு பற்றி ஆராய்ந்தனர். இவர்கள் நாளாந்த நிதிப் பிரச்சினைகள் பற்றி பெண்களுடன் கலந்துரையாடி, ஒரு ஆண் அவதானிப்பாளனால் பெற்றுக்கொள்ள முடியாத, பெண்கள் சார்பான அபிப்பிராயத்தினை அளித்தனர்.

மக்கள் எவ்வாறு சேமிக்கின்றனர்?

கொள்கை அமைப்பாளர்களும், அபிவிருத்தி திட்டமிடுவோரும் வறிய மக்கள் சிக்கன ஊக்கம் அற்றவர்கள் என்ற கற்பனையை தம்மிடையே ஆதரித்து வருகின்றனர். எனினும், வறிய மக்களால் சேமிக்க முடியுமென்றும், அவர்கள் சேமித்து வருகிறார்கள் என்றும், பூகோளத்தின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகள் தெரிவிப்பதோடு, இவர்கள் கொண்டிருந்த கற்பனைக்குச் சவாலாகவும் உள்ளது. இம் மக்கள் ஆலயக் குழுக்கள், நாட்டியச் சங்கங்கள், ரொஸ்காஸ், கலாச்சாரக் குழுக்கள், வயதுக் குழுக்கள் ஆகியவற்றில் பணத்தினை வைப்பிலிடுகிறார்கள். இவர்கள் நிதிக் கம்பெனிகள், கிறிஸ்மஸ் குழுக்கள், வரிக் கொடுப்பனவுக் குழுக்கள், யாத்திரிக நிதியம், அந்திய கால உதவிச் சங்கங்கள் என்பவற்றில் சேமிப்பினைக் கைக்கொள்கிறார்கள். அல்லது நடமாடும் வங்கியியலாளர்கள், நகை அடைவு பிடிப்போர், வர்த்தகர்கள், தென்கிழக்காசியாவில் உள்ள செட்டியார்கள் போன்று பணங் கொடுப்போர் போன்ற நிதி நடவடிக்கைகளில் அநுபவங்கொண்ட தனிப்பட்டோரிடம் தமது சேமிப்புக்களை ஒப்படைக்கிறார்கள்.

சிக்கனமானது, இயற்கையாகவே, சீரற்ற வருமானப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ச்சலுடன் உருவாகிறது. இலங்கையிலுள்ள கிராமிய மக்களில் குறிப்பாக குறைந்த வருமானம் பெறுபவர்கள் சேமிப்பதற்கான மிக உக்கிரமான ஆவல் கொண்டவர்களாக இருக்கின்றனர். ஒரு முக்கிய வெளிக் கிராமச் சுற்றுலாவிற்கு வேண்டிய பணத்தைச் சேமிப்பதற்காக, ஒரு குடும்பம் சோற்றுடன் உண்பதற்கு கறிகளை எவ்வாறு தவிர்த்துக் கொண்டது என்பது பற்றி பூட் என்பவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏழுவயது அல்லது அதற்குட்பட்ட பிள்ளைகளுக்கு பெற்றோரினூடாக மட்டாகச் செலவழிக்கும் திறமைகள்பற்றி கற்பிக்கப்படுவதோடு, இவர்களுக்கு பாடசாலையில் வழங்கப்படும் நாளாந்த பிஸ்கெட்டுகளில் ஒரு பகுதியினை சேமிப்பு நிதிக்காக ஒதுக்குவதற்கு ஊக்கமும் அளிக்கப்படுகின்றது. இலங்கையில் மிகவும் பிரபல்யமடைந்துள்ள கிராமிய அபிவிருத்தி இயக்கமான சர்வோதயத்தின் கிராமியப் பணியாளர்களுக்கான கிராமிய நிதியியல் மாநாட்டில் பங்குபற்றியோர் குறிப்பிடத்தக்க உயர்ந்த சேமிப்பு மட்டங்களைக் கொண்டிருந்தனர். பங்குபற்றிய 41 பேரில் ஆண்கள் 25 ஆகவும், பெண்கள் 16 ஆகவும் இருந்ததுடன், இவர்கள் 21 ற்கும் 35 ற்குமிடைப்பட்ட வயதினராகவும் இருந்தனர். ஆண்களின் சராசரி மாதவருமானத்தில் அதிகளவு வேறுபாடு காணப்படாததுடன், இம் மாதவருமானம் ரூபா 434 (20 அமெரிக்க டொலர்) ஆகவிருந்தது. சேமிப்பில் ஈடுபடாதிருந்த 5 பேர்களில் நால்வர் திருமணம் புரியாதவர்களாகும். மீதியாயுள்ள ஆண்களின் சராசரி மாதச் சேமிப்பானது ரூபா 112 ஆக இருந்ததுடன், இது அவர்களின் வருமானத்தின் 26 வீதமாகவும் இருந்தது. சேமிப்பு வீதமானது, சம்பளத்திற்கு எதிர்மாறான வீதத்தில் மாறுபட்டது. ஊதியங்கள் குறைவாக இருக்கும்போது, அவை தொடர்பான சேமிப்பு வீதமானது உயர்வாக இருந்தது. பெண்களின் சராசரி மாத வருமானம் ரூபா 840 ஆக இருந்ததுடன் (17 அமெரிக்க டொலர்) சேமிப்பு வீதமானது 21 வீதமாக இருந்தது. இதே மாதிரியான சேமிப்பு வீதங்கள், மூன்றாம் உலக நாடுகளிலும் நிலவி வந்தது.

சேமிப்பானது பணமாகவோ, பொருளாகவோ அல்லது கடன் உரிமைகளாகவோ மேற்கொள்ளப்படலாம். மிகவும் குறைந்த பண வருமானங்களைப் பெறும் பெண்கள் சேமிப்புயுக்திகளை அமைப்பதில் மிகவும் கைதேர்ந்தவர்களாக உள்ளார்கள். இவர்கள் தங்களின் நாளாந்த உணவிற்கூட ஒரு சில கறண்டி பிரமாணமுள்ள அரிசி அல்லது சீனி என்பவற்றைச் சேமிக்கிறார்கள். இவ்வாறு சேமிக்கப்பட்ட ஒரு கிழமைக்குரிய பொக்கிஷமானது ஒரு இடத்தில் களஞ்சியப் படுத்தப்படலாம்; அல்லது பணமாக மாற்றப்படலாம்; அல்லது ஒரு சீட்டு நிதிக்கு வழங்கப்பட்லாம். உதாரணமாக, ஈரப்பலாக்காய் தாராளமாக கிடைக்கும் காலங்களில் சமையலுக்கு உபயோகிக்கப்படுவதுடன், வருடத்தின் எஞ்சிய பகுதியில் குறைந்த செலவில் உணவுகளை தயாரிப்பதற்காக உலர்த்தப்பட்டு, சேகரித்தும் வைக்கப்படுகிறது. சிங்களப் புதுவருடம் அல்லது திருமண வைபவம் அல்லது மகளின் பருவம் அடையும் வைபவம் போன்ற செலவு அதிகமுள்ள கொண்டாட்டங்களுக்காக உணவுப் பதார்த்தங்கள் பல மாதங்களுக்குப் பதுக்கி வைக்கப்படுகின்றது. வேல் என்பவர் வாழ்ந்த கிராமத்தில் பாய் இழைப்போர் இயல்பாகவே தமது தொழிலுக்கு வேண்டிய மிக முக்கிய பொருளான பிரம்பினை சேமித்து வந்தனர். இவ்வாறு சேமிக்கும் ஒருவர் சுகயீனம் காரணமாகவோ அல்லது வேறு இடத்தில் தொழில் செய்வதன் காரணமாகவோ தனது தொழிலைச் செய்ய முடியாதுள்ள சமயங்களில், தன்னிடமுள்ள பிரம்புகளை இன்னொருவருக்கு, பாய்களை விற்றுவரும் பணத்தினை தம்மிடையே பகிரக்கூடிய வகையில் ஒரு பொருத்தனையின் அடிப்படையில் கொடுக்கின்றார்கள்.

கடன் உரிமைகளுக்கூடாக சேமித்தல் என்பதற்கான விவரணமாக, ஒரு தொழிலாளி தனது ஊதியத்தினை இன்னொரு தினம்வரை ஒத்திவைக்கும்படி தனது வேலை கொள்வோனிடம் வேண்டிக்கொள்ளுதல் அல்லது ஒரு விவசாயி தனது விவசாய உற்பத்திகளை கொள்வனவு செய்பவனிடம் அதற்கான கொடுப்பனவுகளை, கடைசி உற்பத்தியினைக் கொடுக்கும்வரை தாமதப்படுத்துதலை விரும்புதல் என்பவற்றைக் குறிப்பிடலாம். திரு. பூட் வாழ்ந்துவந்த வீட்டின் எஜமானி, விடுதிக் காலத்துக்கான செலவு தொகையினை, அவர் அவ்வீட்டினை விட்டுச் செல்லும் இறுதித் தினத்தில் செலுத்தும்படி வேண்டிக் கொண்டதை இன்னொரு அநுபவ உதாரணமாக இங்கு குறிப்பிடலாம். சிற்சில சமயங்களில், அவள், தமது வீட்டில் தங்குபவரிடம் சில ரூபாய்களைக் கடனாகப் பெற்றிருக்கிறாள். படிப்படியாக அதிகரித்துவரும் தனது கடன் உரிமையைப் பேணுவதற்காக, எடுக்கப்பட்ட இக்கடனை ஓரிரு நாட்களில் மீளச் செலுத்துவதில் இவள் அதிக சிரமங்களை எடுக்க வேண்டியிருந்தது. இவ்வெல்லா சந்தர்ப்பங்களிலும் வருமானமானது வித்தியாசமாக காணப்பட்டது. கடன் கொடுத்தவர்கள், மிகவும் சீக்கிரத்தில் குறைந்த தொகைகளைப் பெறுவதைவிட, பிறிதொரு தினத்தில் ஒரு கணிசமான பெரிய தொகையினைப் பெறவே விரும்பினார்கள். கடன் உரிமைகளானது, அநேக சேமிப்பாளர்களுக்கு தமது பணத்தினைச் சரியான இடத்தில் வைப்பீடு செய்வதைக் கண்டறிவதிலுள்ள பிரச்சினைக்கும் ஒரு தீர்வாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் பலதரப்பட்ட நோக்கங்களுக்காகச் சேமிக்கிறார்கள். விவசாயமானது ஒரு பருவ விவகாரமாக இருப்பதால் கிராமிய மக்கள் ஒழுங்கற்ற வருமானப்பாய்ச்சலைக் கொண்டிருப்பதோடு, வரவினையும், செலவினையும் சம்படுத்துவதில் அதிக கவனமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். இச் சமப்படுத்தும் செயல் முறையில் சேமிப்பும், வாங்குதலும் கருவிகளாக அமைகின்றன. இவை அபாய முகாமைத்துவத்தின் அம்சங்களும் கூட, எதிர்பாராத செலவினங்களுக்கு முகங்கொடுப்பதற்காகவும், இக் கட்டான காலகட்டங்களில் தற்பாதுகாப்பிற்காகவும் மக்கள் தமக்கு வசதியாக தமது கையிருப்பின் செயற்படு மீதியினை வைத்திருக்க விரும்புகின்றனர். பிச்சைக்காரர்களுக்கு கொடுப்பதற்கென சிறியளவு அரிசியையோ அல்லது சிறிய தொகைப் பணத்தினையோ கொடுப்பதற்கென இவற்றை ஒதுக்கிவைக்கும் பெண்களும் இலங்கையில் உள்ளனர். தமது செல்வத்தினைப் பாதுகாப்பதற்கென ஒரு சிலர் கடனும் பெறுகிறார்கள். களஞ்சிய சாலைகளை வெறுமையாக்கி, பிற்காலத்தில் அதிக விலை குறிக்கப்பட்டுள்ள அரிசியினைக் கொள்வனவு செய்வதற்கான நிர்ப்பந்தத்தினைவிட, மிகவும் குறைந்த விலையில் தற்போது கிடைக்கும் அரிசியை கொள்வனவு செய்யும் பழக்கத்தின் மூலம் இது நன்கு விளங்கப்படுத்தப்படுகிறது.

வயோதிப காலப் பாதுகாப்பு, ஒருவரின் வாழ்க்கையில் ஏற்படும் கொண்டாட்டங்களுக்கான செலவுகள், சமய வைபவங்களுக்கான செலவுகள், ஒருவரின் தராதரத்தின் உயர்ச்சியோடு சம்பந்தமான செலவுகள் போன்ற சமூகநலன், நுகர்வு, உற்பத்தி முதலீடு என்பவற்றுக்கு இச் சேமிப்புகள் உபயோகிக்கப்படுகின்றன. வறிய மக்கள் தமது சேமிப்புக்களை நுகர்விற்கும், சமூக நலனுக்கும் பாவிக்கும் அதே சமயத்தில், உயர் வருமானம் பெறுவோர் தமது மேலதிக நிதியினை, தமது வருமானத்தினை அதிகரிக்கக் கூடிய உற்பத்தி நடவடிக்கைகளில் முதலிட்டு, அதன் மூலம் தமது வருங்கால நுகர்விற்காக உபயோகிக்கின்றனர் எனப் பொதுவாக எண்ணப்படுகிறது. அதாவது, வறிய மக்கள் தமது பொருளாதார, நிதி நிலைமையினை விருத்தி செய்வதில் சிரத்தை எடுப்பதில்லை எனப் பொருள்படுகிறது. கிராமிய மக்கள் தங்களின் பொருளாதார நிலைமையினை விருத்தி செய்ய மிகவும் நாட்டங் கொண்டவர்களாக உள்ளனர் என்று எமது ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. குறைந்ததும், ஒழுங்கற்றதுமான இவ்வருமானங்கள், எப்படியாயினும், ஒவ்வொருவரையும், ஆபத்திற்கு மிகவும் உணர்திறன் கொண்டவர்களாக அமைக்கிறது. மிகவும் சிறிய சமூகத்தில் வாழும் தனிப்பட்டோர், அநேக சந்தர்ப்பங்களில், எவை விவேகமாக, புத்தியான வேளாண்மை அமைப்பைக் கொண்டிருக்கின்றன, எவை பேராசையுடையவையாக கருதப்படக்கூடியவை போன்ற மாதிரிமுறைகளினால் வசப்படுத்தப்படுகிறார்கள். ஒரு சமூக வைபவத்திற்கு அல்லது திருமண வைபவத்திற்கு உணவு சேகரித்தல் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால், சிலர் பசியுடன் இருக்கும் சமயத்தில், முதலீட்டிற்காகவும், வருங்காலச் செல்வத்துக்காகவும் பெரிய தொகைகளைச் சேமிப்பது பொருமையையும், கண்டனத்தையும் உருவாக்குகிறது. முதலீடுகளையும், பொருட்களையும் வேறுபிரிக்க முடியாமை, குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு குறிப்பிடத்தக்க பிரச்சினைகளை உருவாக்குகிறது. ஒரு உழவு இயந்திரம், ஒரு பசு, ஒரு தையல் இயந்திரம், என்பவற்றைக் கொள்வனவு செய்ய அல்லது ஒரு வீட்டினைக் கட்ட அல்லது நீர்ப்பாசன வேலைகளுக்காக கிணறு வெட்ட கணசமானனளவு பணம் தேவைப்படுவதால், சேமிப்பதற்கு நீண்டகாலம் வேண்டியதாகவுள்ளது. இது சேமிக்கும் நடத்தைக்கான விளைவுகளைக் கொண்டுள்ளது. இதனோடு தொடர்புள்ள குறிப்பிடக்கூடிய பிரச்சினை யாதெனில் தனியாளாக சேமிப்பதோ அல்லது குழுவாகச் சேமிப்பதோ என்பதும், சேமிப்புகளை வீட்டில் வைத்திருப்பதா அல்லது ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளனிடம் ஒப்படைப்பதா என்பதுமாகும்.

அநேக மக்கள் தனிப்பட்டோராக, வீட்டிலே சேமிக்கத் தொடங்குகிறார்கள். ஆனால், பணம் தொகையாகச் சேரும் போது, தமது நாளாந்தத் தேவைக்குப் பிரயோகிப்பதற்காக சேமிப்பின் ஒரு பகுதியினை அர்ப்பணஞ் செய்யும் வாஞ்சையும் அதிகரிக்கிறது. சிறிது காலத்திற்குப் பின்பு, வீட்டினிலே பெரிய பொக்கிஷத்தை வைத்திருப்பது அநுகூலமற்றதாகத் தென்படுகிறது. தமது சேமிப்புக்களை மேலும் அதிகரிக்க விரும்பும் சேமிப்பாளர்கள் தங்களின் யுத்திகளை மாற்ற வேண்டியுள்ளது. இதற்குப் பல வழிகள் உள்ளன. உதாரணமாக, உணவுப் பண்டம், பொருட்கள், பணம் என்பவை வெள்ளி, பொன் அல்லது ஆபரணங்களாக மாற்றப்படலாம். பெண்களைப் பொறுத்தவரையில், ஆபரணங்கள் இவர்களின் தனிப்பட்ட சொத்தாக கருதப்பட்டதுடன், இனத்தவர்களால் கூட இலகுவில் கோரமுடியாதிருந்தது. ஒரு முறை, ஒரு கிராமவாசி, திரு. பூட் என்பவரிடம் பின்வருமாறு கூறினர். ''ஆபரணங்களற்ற ஒரு பெண்மணி, பின்னணியற்ற..... அவளைப் பாதுகாக்க குடும்பம் இல்லாத பெண்மணியைப் போன்றவள்'' எனக் குறிப்பிட்டார். பொன்னும், வெள்ளியும் பணவீக்கத்திற்கு எதிரான மேலதிக அநுகூலமான தடையினைக் கொண்டுள்ளன. இவை இலகுவில் பணமாக மாற்றிக் கொள்ளப்படலாம். இவை தற்போதுள்ள நிலையினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்படுத்துவதோடு, கடனுக்குரிய பாதுகாப்பாக அடைவும் வைக்கப்படலாம்.

ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளனின் பாதுகாப்பில் தனது பணத்தினைக் கொடுத்து வைத்திருக்கவும் ஒரு சேமிப்பாளன் தீர்மானிக்கக்கூடும். இது ஒரு வங்கி, கூட்டுறவுச் சங்கம், தபாற்கந்தோர் அல்லது ஒரு கடனுதவிச் சங்கமாக இருக்கலாம். எனினும், கிராமிய மக்கள் தாம் மிக அரிதாகத் தொடர்புகளை வைத்திருக்கும் நிறுவனத்தினைச் சார்ந்து, நம்பியிருப்பதைப்பற்றி சிந்திக்கிறார்கள் என்று கொள்வதற்கில்லை. இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் 1980 ல் கிராமிய வைப்புகளுக்கு 14 வீதத்திற்கும் 22 வீதத்திற்கும் இடைப்பட்ட வட்டி வீதங்களை வழங்கியதைப் போன்று கவர்சியான வட்டி வீதங்கள் இருநதும் கூட, கடை முதலாளிகள், நகை அடைவு பிடிப்போர், வர்த்தகர், வட்டிக்குப் பணங் கொடுப்போர், மதகுரு, ஆசிரியர் அல்லது அவருடைய அந்தஸ்திற்கு சமனான ஒருவர் போன்ற மரபு ரீதியான பொறுப்பாளிகளிடமே இவர்களின் நாட்டம் இருந்து வருகிறது. மிக அவதானமுள்ள சேமிப்பாளன், தமது சேமிப்புக்களை பல நம்பிக்கைப் பொறுப்பாளர்களிடம் கொடுத்து வைத்திருப்பான். லீல் என்பவர் தனது அறிக்கையில், பஞ்சாப் விவசாயிகள் தமது பண்ணை உற்பத்திகளின் விற்பனைப் பணத்தினை தங்களின் சௌகரியத்துக்காகவும், பாதுகாப்பிற்காகவும், எவ்வாறு கமிஷன் ஏஜன்டுகளிடம் மரபுரீதியாக வைப்பில் இடுகிறார்கள் எனத் தெரிவிக்கிறார். இலங்கையில் செட்டியார் இத்தகைய பங்கினை வகித்து வந்தனர். இவ்வித வைப்புகளுக்கு ஒரு வட்டியும் வழங்கப்படவில்லை. ஆனால், வைப்பாளன்; தனது வைப்புப் பணத்திற்கெதிராகப் கடன் பெறக்கூடியதாக இருந்தது. ஒரு குழுவுடன் அல்லது நிதி ஸ்திரம் கொண்ட நிறுவனத்துடன் சேமிக்கும்போது, சேமிப்பாளன் ஒரு பிணையை வாங்குகிறான். ஒழுங்கான வைப்பீடுகள், ஒருவனின் கடன் இறுப்புத் தன்மைபற்றிய நல் அபிப்பிராயத்தை நிலைநாட்டுவதுடன், ஒரு அவசரகால சந்தர்ப்பத்தில் அவன் கடன் பெறக்கூடிய சந்தர்ப்பத்தையும் அளிக்கிறது.

குழு ஒழுங்கு முறைகள்

தனிப்பட்ட சேமிப்பினைவிட, சேமிப்புக் கழகங்கள் பலவித அநுகூலங்களைக் கொண்டுள்ளன. நண்பர்களினதும், இனத்தவர்களினதும் சங்கடமூட்டும் கோரிக்கைகளைத் தவிர்க்கக் கூடியவகையில், திரவத்தன்மையினை சேமிப்பாளன் தவிர்த்துக் கொள்கிறான். இக் கழகங்கள் பாதுகாப்பாக வைப்புச் செய்யக் கூடிய நிலையமாகவுள்ளன. இங்கு பொருளாளர், பணத்துடன் தப்பியோடக்கூடிய சந்தர்ப்பங்கள் மிக அரிதாகும். மேலும், இக்குழுவின் அங்கத்தவர்கள் ஒழுங்காக, குறிக்கப்பட்ட பணத்தினைச் செலுத்த இணங்குவதால், இத்தகைய குழுவானது ஒரு உடன்படிக்கையுள்ள சேமிப்பினூடாக ஒரு ஒழுக்கக் கட்டுப்பாட்டினை மேப்படுத்துகிறது. சீட்டுமுறையின் அங்கத்தவர்கள், தங்களின் சேமிப்பு நடைமுறையினைத் தொடர்ந்து செய்வதற்காக, சீட்டுச் சுழற்சி வட்டத்தின் இறுதியிலேயே தமது இடம் வரப் பெரிதும் விரும்புகிறார்கள். ஆபிரிக்காவிலுள்ள முறைசாராச் சேமிப்புக் கழகங்கள், கூட்டு முயற்சி மூலம் அங்கத்தவர்களுக்கு மொத்தக் கொள்வனவில் கழிவு, வர்த்தகர்களும் அவற்றைச் சார்ந்த வியாபாரிகளும் இணையும் சமயத்தில் வேண்டிய பொருளாதார, சந்தைப்படுத்தல் அறிவுப் பரிமாற்றம் போன்ற பல பொருளாதார நன்மைகளை அளிக்கின்றன என்று ஒரு அறிக்கை தெரிவிக்கிறது.

பண்டச்சீட்டு, யாத்திரைச் சங்கம் ஆகிய இரண்டு வகையுமே இலங்கையிலுள்ள குழுச்சேமிப்புகளுக்கு உதாரணமாகக் காட்டக்கூடியவையாகும். குறிப்பிடப்பட்ட பண்ட அல்லது பொருட் சீட்டில், அங்கத்தவர்கள் ஒழுங்காக சமமான வைப்புக்களையிட்டு, பின்னர் வரிசைக்கிரமத்தில் ஒவ்வொருவரும் ஒரு பண்டத்தினைப் பெறுவர். ஒரு வியாபார ஸ்தாபனத்தில் கூட்டாகப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுகையில் அங்கத்தவர்கள் விலைக் குறைப்பு நன்மையை அடையக்கூடும். இற்றைவரையிலும் மிகவும் பிரபல்யம் அடைந்திருந்தாலும், பணவீக்கம் காரணமாக, இப் பண்டச் சீட்டு முறையானது சில இடர்பாடுகளை அநுபவித்தது. முதல் சில வட்டங்கள் முடிவடைந்த பின்பு, மீதமாகவுள்ள நிதியானது, விலை அதிகரிப்புக் காரணமாக, ஏனைய அங்கத்தவர்களுக்கு குறித்த அப்பண்டத்தினைக் கொள்வனவு செய்வதற்குப் போதாததாக வுள்ளது. சாதாரணமாக இப் பண்டத்தினை ஆரம்பத்திற் பெறும் அதிர்ஷ்டசாலிகள், இவ்விலை அதிகரிப்பினை ஈடுசெய்வதற்கான கொடுப்பனவைச் செய்ய தயக்கம் காட்டுகின்றனர்.

யாத்திரை சங்கங்கள் என்பது சேமிப்புக் குழுக்களின் இன்னொரு வகையானதாகும். இலங்கை மக்கள் தங்களின் மதக் கொண்டாட்டங்களில் ஒருதரம் பரிசுத்த ஸ்தலங்களுக்கு செல்வது ஒரு பாரம்பரியமாக இருந்துவருகிறது. ஒன்றாக இவ் யாத்திரையை செய்வதன் மூலம் பஸ்கட்டணங்களையும், தங்குமிடச் செலவுகளையும் குறைக்கக் கூடியதாகவுள்ளது. ஆனால், பணவீக்கமானது, இவ் யாத்திரையில் பங்குபற்றுவோருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். ஒரு சமயம், ஒரு கழகத்தைச் சேர்ந்த 42 அங்கத்தவர்கள் தமது சுற்றுலாவிற்கு வேண்டிய ரூபா 135 இனை மாதம் ரூபா 15 வீதம் ஒன்பது மாதங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குச் சேமித்து, சுற்றுலா நடத்துனராக கடமையாற்றிய ஒரு பெண் மணியிடம் கொடுத்து வந்தனர். இப்பெண் இவ்வாறு தொகையாகப் பெறப்பட்ட பணத்தினை தனது தனிப்பட்ட விடயங்களுக்காகப் பாவித்தாள். ஒன்பது மாதங்களின் முடிவில், அதிகரித்து வரும் எண்ணெய் விலைகள் காரணமாக பஸ்கட்டணங்கள் உயர்ந்துவிட்டன எனக்கூறி, ஒவ்வொரு அங்கத்தவரினதும் மொத்தச் சேமிப்புத் தொகையினைத் திருப்பிக் கொடுத்துவிட்டாள்.

பரஸ்பர உதவி என்பதே இத்தகைய குழுச் சேமிப்புத் திட்டங்களின் மூலக்கருவாக இருக்கிறது. ஆசியாவிலுள்ள கிராம அரிசிவங்கி இதற்கு நல்ல உதாரணமாகும். அங்கத்தவர்கள் தங்களின் பங்கு அரிசியை ஒரு பொதுவான களஞ்சிய இருப்பிற்கு அளித்து, கடன் வேண்டும் அங்கத்தவர்களுக்கு இதிலிருந்து பொருளாக வழங்கப்படுகிறது. அறுவடைக்குப் பின்பு, மீண்டும் இருப்புகள் சேர்க்கப்படுகின்றன. இந்தோனிஷயா, இந்தியா, கொரியா ஆகிய தேசங்களில் அரிசி வங்கிகள் காணப்படுகின்றன. இலங்கையிலுள்ள அரிசிச் சீட்டுமுறையானது, இவ்அரிசி வங்கியின் ஒரு திரிபுபடுத்திய அமைப்பாகும். பரஸ்பர உதவியானது அடிக்கடி, ஒரு காப்புறுதித் திட்டத்திற்குச் சமானமாகவுள்ளது. பிறந்த தினம், பருவம் அடைதல், திருமணம், மரணம் போன்ற வாழ்க்கையோட்ட நிகழ்வுகளுக்கு வேண்டிய செலவினங்களுக்கு எதிராக அங்கத்தவர்களை காப்புறுதி செய்வதற்காக ஒரு பாதுகாப்பு நிதியம் சேர்க்கப்படுகிறது. இலங்கையின் மிக வறிய பிரதேசங்களில் கூட காணப்படும் அந்திமகால உதவிச் சங்கங்கள் இதற்கு நல்ல உதாரணமாகும். இதில் இருவகைகள் உள்ளன. ஒன்று, மரணம் சம்பவிக்கும் சமயத்திலேயே பணத்தைச் சேகரிக்கிறது. மற்றதில், ஒழுங்காகப் பங்குப்பணம் கட்டப்படுகிறது. இதில் இரண்டாவதாகக் கூறப்பட்ட வகையானது மிகவும் விருப்பத்தைக் கொண்டதாயிருப்பதற்கு காரணம் இங்கு இச்சங்கங்கள் பணத்தைச் சேகரிப்பதோடு மட்டும் நிற்பதில்லை. முதலீடுகள் மிக அரிதகவுள்ள ஒரு சமுதாயத்தில், இது பெறுமதிவாய்ந்த மூல வளங்களின் வீண்விரயமாக இருக்கும்.

இலங்கையின் தென்பகுதியிலுள்ள பொட்டல என்ற கிராமத்தில், இத்தகைய உள்ளூர்ச் சங்கத்தின் மாதாந்த நிதியின் ஒரு பகுதியானது, உற்சவ உபகரணங்கள் கொள்வனவு செய்து அங்கத்தவர்களுக்கு கட்டணமின்றி கடனாக வழங்குவதற்கு உபயோகிக்கப்பட்டது.* ஆனால் வைத்திய உதவிகள், பிறப்பு, வீட்டு அபிவிருத்தி என்பவற்றுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன. அத்துடன் இச்சங்கம் சொந்தமாக வயோதிபர் மடத்தினையும் நடாத்திவந்தது. இந்த நலனுதவி – அந்திமகால உதவிச் சங்கம் மேலதிகமாக நிதி நடவடிக்கைகளை விரிவாக்கியமையினால், 1980 ம் ஆண்டு அநேக நலனுதவி செயற்பாடுகளை கைவிட்டு, முழுமையாக அந்திமகால சங்கமாக தன்னை மாற்றிக் கொண்டது.

ஏனைய கிராமங்களில், இவ்வாறு சேர்க்கப்பட்ட பணம் கடனுக்கு வழங்கப்பட்டது. குருநாகலிலும், கென்கல்ல என்ற இடத்திலுமுள்ள அந்திமகால உதவிச் சங்கங்கள் அங்கத்தவர்களுக்கு குறுகிய தவணை அடிப்படையில் கடன் வழங்குகின்றன என்று பேகர்ஸ் என்பவரும், ஓவர் கேட்ஸ் என்பவரும் தெரிவித்துள்ளனர். கென்கல்லவில் அமைந்திருந்த சங்கத்தில் 30 அங்கத்தவர்கள் இருந்ததுடன், கடுமையான செயற்பாட்டு விதிகளும் அமுல்படுத்தப்பட்டது. ஒவ்வொரு கிழமையும் கூட்டம் கூட்டப்பட்டதுடன், இதற்கு கட்டாயமாகச் சமூகம் அளிக்க வேண்டியும் இருந்தது. பிணைக்கு எதிராகவே கடன்கள் வழங்கப்பட்டன. அங்கத்தவர்களிடம் மாதத்திற்கு 10 வீத வட்டியும், அங்கத்தவரல்லாதோரிடம் 12 வீதவட்டியும் அறவிடப்பட்டது. வட்டி வருமானமானது, இந் நிதியோடு சேர்க்கப்படுகிறது. இந்த அந்திம காலச் சங்கம் படிப்படியாக, அநேகமாக நினையாப்பிரகாரமாக, கடன் வழங்கும் முக்கிய கடமையினை மேற்கொண்டது.

''சமாகன்'', ''பொலி பெட்டிய'', ''பெட்டிக்காளி'' ஆகியன ஒரே பொருளைக் குறிக்கும் மூன்று பிரதேசங்களில் உபயோகிக்கப்படும் பெயர்களாகும்.* இவ்வெல்லாக் குழுச் சேமிப்புகளிலும் காணப்பட்ட பிரதானமான ஒழுங்குமுறையாதெனில், பங்குபற்றும் அங்கத்தவனொருவன் தனது சேமிப்புக்களை, பாதுகாப்பிற்காக, ஒரு ஒழுங்கான கால இடைவெளிகளில், ஒழுங்குபடுத்துபவனிடம் கையளிப்பதாகும். சாதாரணமாக ஒருவருட காலத்தின் பின்பு, இத்தொகைப்பணம் மீள அளிக்கப்படுகிறது. இதில் வட்டியானது சேர்க்கப்பட்டோ, சேர்க்கப்படாதோ இருக்கலாம். அமைப்பாளன் இத்தகைய சேமிப்புகளை ஒரு செயற்படு மூலதனமாக தனது சொந்த விடயங்களுக்கு உபயோகிக்

(27-ம் பக்கம் பார்க்க)

* ஒரு கிராமத்தில் செல்வந்தர், வறியோர் ஆகியோருக்கு வேறுவேறாக சங்கங்கள் இருந்ததுடன், சாதி வித்தியாசங்கள் கூட அங்கத்துவத்தைத் தீர்மானிக்கின்றன. இன்னொரு தென்பகுதிக் கிராமமான கினிமெல்லககா என்ற கிராமத்தில் 500 குடும்பங்கள் இருந்ததுடன், மூன்று அந்திமகாலச் சங்கங்களும் நடைமுறையில் இருந்து வந்தது.

* சமாகன் என்பது கம்பெனியையும், பொலி என்பது வட்டியையும், பெட்டிய என்பது பெட்டியையும் குறிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட கவனத்துக்குரிய வலயங்கள்

மூன்றும் உலக ஏற்றுமதி முறையாக்க வலயங்கள்

மெல்வின் வெஸ்ட்லேக்
லக்ஸ்மன் ஜயவர்த்தன

மூன்றும் உலகில் தோன்றியுள்ள கடுமையான வர்த்தக நிலைமைகளும் வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடுகளும் ஏற்றுமதி முறையாக்க வலயங்கள் பரவுவதற்கு ஊக்கமளிக்க வேண்டும். வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக அமைக்கப்படும் விசேட உற்பத்தி மண்டலங்களே ஏற்றுமதி முறையாக்க வலயங்கள் எனப்படுகின்றன. இவை அடிக்கடி வசிய உபாயமாக அபரிமிதமான வரிச் சலுகைகளையும் சுங்கத் தீர்வைக் குறைப்புகளையும், தொழிலாளர் சம்பந்தமான ஊக்கிகளையும் உபயோகிக்கின்றன.

சில பொருளியலாளர்கள் அவற்றினால் ஏற்படக் கூடிய நன்மைகளைக் குறித்துச் சந்தேகங்களை எழுப்பியிருந்தபோதிலும், இத்தகைய வலயங்கள் 1960 களுக்குப் பிறகு துரிதமாக அதிகரித்து செழித்தோங்கியுள்ளன. சோஷலிஸ்ட் நாடுகள், முதலாளித்துவ நாடுகள், அபிவிருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் ஆகியனவெல்லாம் வெற்றி முழக்கம் செய்த இந்தச் சகடத்தில் குதியாட்டம் போட்டு ஏறின. என்றுலும், அவை ஈட்டியுள்ள வெற்றியின் அளவுகளில் மாறுபாடுகள் உண்டு.

சரக்குகள் உள்ளேயும் வெளியேயும் வரியில்லாமல் போகும் சுதந்திர துறைமுகங்கள் பல நூற்றுண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டு விட்டன. இதற்கு நேர் மாறுக, ஏற்றுமதி முறையாக்க வலயங்கள் சரக்குகள் வலயம் வழியாகச் செல்லும்போது பெறுமதியைக் கூட்டும் ஏதாவதொரு முறையாக்கத்துக்கு உட்பட்டால் மட்டுமே சலுகைகளை வழங்குகின்றன. முதலாவது அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுமதி முறையாக்க வலயம் 1959ம் ஆண்டில் அயர்லாந்திலுள்ள ஷானுன் விமான நிலையத்தில் அமைக்கப்பட்டது.

மொரீஷியஸ் அரசாங்கம் இப்பொழுது நாடெங்குமுள்ள கைத்தொழில் பேட்டைகளில் ஏற்றுமதி முறையாக்க வலய வசதிகளை அளிக்கின்றது. மெக்ஸிகோவின் ஏற்றுமதி முறையாக்க வலயங்கள் பிரதானமாக அமெரிக்காவின் எல்லைப் புறத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளன. ஹொங்கொங் முழுவதும் நடைமுறையில் ஓர் ஏற்றுமதி முறையாக்க வலயமாகவே இருக்கின்றது. எனினும், முதலீட்டாளர்களுக்கு ஊக்கமூட்டுவதற்காக அங்குள்ள சில கைத்தொழில் பேட்டைகளில் மேலதிக வசதிகள் அளிக்கப்படுகின்றன. சீனு, ஹெய்னுனுடன் நான்கு விசேஷ பொருளாதார வலயங்களைக் கொண்டுள்ளது. அத்துடன் முதலீட்டாளர்களுக்கு வரிச் சகாயங்களும் தீர்வை (காப்புவரி)ச் சலுகைகளும் வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பல சுதந்திர (கட்டுப்பாடற்ற) துறைமுகங்களும் சீனுவில் உள்ளன.

ஏற்றுமதி முறையாக்க வலயங்களின் தொகை அதிகரித்துள்ளதால், வெளிநாட்டு முதலீடுகளுக்கான போட்டியும் அதிகரித்துள்ளது. நிறைவுப் பொருள் (முடிவாகத் தயாரிக்கப்படும் பொருள்) வேறெங்கேனும் விற்கப்படுவதாயிருந்தால், இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்கள், மற்றும் சரக்குகள் மீது சகல ஏற்றுமதி முறையாக்க வலயங்களிலும் சுங்கத் தீர்வைகள் அறவிடப்படாது விடப்படுகின்றன. மற்றும் ஊக்கச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இலாபங்கள் மீது நெடுங்காலத்துக்கு வரி விலக்குகள் முதல் வாடகைகளுக்கும் சேவைகளுக்கும் உதவி மான்யமளிப்புவரை இச்சலுகைகள் அளிக்கப்படுகின்றன. சுவிஸ் பாணியில் (சுவிட்ஸர்லாந்து வங்கிகள் அவற்றின் கணக்குகளை அரசாங்கத்துக்கோ அல்லது வெளியாருக்கோ வெளியிடத் தேவையில்லை; அந்தரங்கமாக வைத்திருக்கலாம்.) வங்கிக் கணக்குகள், துரைத்தன அதிகாரிகளின் கட்டுப்பாடுகளில்லாமை ஆகிய வசதிகளும் ஏ. மு. வலயத்தில் உண்டு.

சில ஏ. மு. வலயங்கள், இலாபங்களைக் கட்டுப்பாடின்றித் தாயகத்துக்கு அனுப்பும் சலுகையை முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றன. மற்றும் ஏ. மு. வலயங்கள் தங்கள் சொந்த நிர்வாக அதிகார சபைகளையும் தங்கள் சொந்த உள்ளமைப்புகளையும் தனிவங்கித் தொழில் வசதிகளையும், ஏன் தங்கள் சொந்த வர்த்தகக் கொள்கையையுங் கூட கொண்டுள்ளன. சில சமயங்களில் வேலை — நிறுத்தங்கள் தடைசெய்யப்படுகின்றன. குறைந்தபட்ச சம்பளச் சட்டங்கள் நிறுத்திவைக்கப்படுகின்றன. இலங்கை, வெளிநாட்டுக் கம்பெனிகளைத் தேசியமயமாக்க, அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அதன் உரிமையைக் கைவிட்டுள்ளது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் இவ்விதம் ஏ. மு. வலயங்களை உற்சாகத்துடன் கட்டியணைத்துள்ளதன் பின்னுல், ஏற்றுமதிகளுக்கு அனுகூலமாகவும், உலகப் பொருளாதாரத்துடன் நெருக்கமாக ஒன்றிணைவதற்காகவும், சுய நிறைவுத்தன்மையை அதிகரிக்கக் கூடிய இறக்குமதி - பிரதியீட்டுக் கைத்தொழில் முறையிலிருந்து வெகுதூரம் விலகிச் செல்லும் கொள்கை உள்ளது.

எனினும், சிலநாடுகள் ஏ.மு. வலய முறையில் உள்ளடங்குவதான தாராளவகை நடவடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளைத் தவிர்த்துள்ளன. இந்தியாவும் சீனாவும் காப்புவரித் தடைகளை நீக்காமலும் உள்நாட்டுக் கைத்தொழில்களைச் சர்வதேச போட்டிக்கு உட்படுத்தாமலும் சுதந்திர வர்த்தகத்தின் நன்மைகளைப்பெற முயன்றுள்ளன. இதில் அந்நாடுகள் வரையறுத்த அளவுக்கு வெற்றிபெற்றுள்ளன.

ஏ.மு. வலயங்கள், வெளிநாட்டு முதலீடுகள் சம்பந்தமாக அவ்வளவு அனுபவம் பெறாத நாடுகளுக்கு ஏணியின் படிகளில் ஒன்றாக விளங்குகின்றன. வாஷிங்டன் நிருபரொருவர் இது பற்றிக் கூறுகிறார்: ''ஏ. மு. வலயங்கள் புதிய ஏற்றுமதிக் கொள்கைகளைச் சோதிப்பதற்கான ஒரு களம்; அநாவசியமான காப்புவரி முறைகள், சிவப்பு நாடா முறைகள் ஆகியவற்றின் சகிக்க முடியாத நிர்ப்பந்தங்களைக் குறைப்பதற்காக, பரிசோதனை நடத்திப் பார்ப்பதற்கான ஒரு வழி''

ஏ.மு. வலயங்களிலுள்ள பிரதான கவர்ச்சி தொழிலாளர்களின் மலிவுதான் என்று பல்தேசிய முதலீட்டு நிறுவனங்களும் மற்றும் முதலீட்டாளர்களும் கருதுகின்றனர். இவ்வலயங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பள விகிதங்கள் வழக்கமாக, கைத்தொழில்மய நாடுகளில் வழங்கப்படுவதை விட பத்திலிருந்து முப்பது மடங்கு வரை குறைவாயிருக்கின்றன.

வடஅமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உள்ளகாப்புவரி முறைகள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஏ. மு. வலயங்களின் கவர்ச்சியை அதிகரித்துள்ளது. உதாரணமாக, மேற்கு நாடுகளுக்கு மூன்றும் உலகநாடுகள் விற்கும் நெசவுத் துணிகளையும் ஆடைகளையும் அடக்கும் சர்வதேச ஒப்பந்தங்களின் கீழ், சகல பிரதான வளர்முக நாடுகளின் உற்பத்தியாளர்கள்மீது ஏற்றுமதிக் ''கோட்டா''க்கள் விதிக்கப்பட்டுள்ளன. சில மூன்றும் உலக உற்பத்தியாளர்களும் சில மேற்கத்திய கம்பெனிகளும் தங்களுடைய விற்பனைக் ''கோட்டா''க்களை நிறைவு செய்யாத நாடுகளில் வியாபார நிலையங்களை அமைத்துள்ளன.

மூன்றும் உலக நாடுகளிலுள்ள, குறிப்பாக இலத்தீன் அமெரிக்காவிலும் கரிபியன் பிரதேசத்திலுமுள்ள ஏ. மு. வலயங்களில் முதலீடு செய்வதற்கு அமெரிக்கக் கம்பெனிகளே மிக முக்கியமான ஆதாரமாக விளங்குகின்றன. ஜப்பானிய, ஆஸ்திரேலிய முதலீடுகள் ஆசியாவிலே செறிந்துள்ளன. ஐரோப்பிய முதலீடுகள் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் காணப்படுகின்றன. தென் கொரியா, ஹொங்கொங் போன்ற புதிதாகக் கைத்தொழில் மயமாகும் நாடுகள் அதிகமாக ஆசியாவிலுள்ள மற்றும் ஏ. மு. வலயங்களிலேயே முதலீடு செய்து வருகின்றன.

நெசவுத் துணிகளையும் மின்சார உபகரணங்களையும் மின்னணு (இலத்திரன்)ச் சாதனங்களையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் ஏ. மு. வலயங்களிலுள்ள வேலைகளில் ஏறக்குறைய 80 சதவிகிதத்துக்குப் பொறுப்பாயிருக்கின்றன. மற்றும் உற்பத்திப் பொருள்களில், பாதணிகள், தோல் சாமான்கள், ஒளியியல் சாதனங்கள், விளையாட்டுக் கருவிகள், பிளாஸ்திக் பொருள்கள், விளையாட்டு உபகரணங்கள், மோட்டார்ப் பாகங்கள், சிறு போக்குவரத்துச் சாதனங்கள் ஆகியனவும் அடங்கும்.

சிலரின் கருத்துப்படி, வட பகுதியிலும் கிழக்குப் பகுதியிலுமுள்ள விசேஷ ஏ. மு. வலயங்கள் 17,000 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தகத்துக்குப் பொறுப்பாயிருக்கின்றன. இது உலகின் மொத்த வியாபாரத்தில் ஏறக்குறைய 9 சதவிகிதமாகும். அடுத்தசில ஆண்டுகளில் அவற்றின் பங்கு இருமடங்குக்கு மேல் அதிகரித்துவிடுமென்று கூறப்படுகின்றது.

(25-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார். ஆனால் இவர், அங்கத்தவர்களுக்கும், அங்கத்தவரல்லாதோருக்கும் கூட கடன் வழங்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிங்களப் புதிய வருடத்தில் உணவிற்காகவும், உடுபுடவைகளுக்காகவும் மேலதிகச் செலவினம் ஏற்படுவதால் இத்தகைய திட்டங்கள் அநேகமாக சிங்கள புது வருடத்துடன் முடிவுறுகின்றன.

தெற்கிலிலுள்ள கொலனிக்குடியேற்றமான பின்கோம விலுள்ள ஒரு சமாகனில் 22 அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் மாதாந்தம் 10/- செலுத்துகிறார்கள். இவ் அங்கத்தவர்கள், தாம் எடுக்கும் கடனை ஒரு மாதத்திற்குள் மீளச் செலுத்த முடியுமாயின், வட்டியைச் செலுத்துவதன் மூலம் கடனைப் பெற்றுக் கொள்ளலாம். நீண்ட காலக் கடனுக்கு வட்டியாக மாதமொன்றிற்கு அங்கத்தவர்களிடம் 10 வீதமும், ஏனையோரிடம் 20 வீதமும் அறவிடப்படுகிறது. ஒருவருட முடிவின் பின்பு, சேமிப்புகள் மீளக் கையளிக்கப்படுவதுடன், பங்கிலாபங்கள் பங்கிடப்படுகின்றன. கடன் பெற்றவர்கள், கடன் பெறாதோரைவிட அரைவாசிப் பங்கிலாபத்தினையே பெற்றனர். மொத்தக் கடன் தொகையானது, கூட்டுச் சேர்க்கப்பட்ட சேமிப்புகளின் 50 வீதத்திற்கு மேற்செல்லமாட்டாது. தனது வர்த்தக முயற்சிகளுக்கு செயற்படு மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே இத்தகைய சமாகனை தான் ஒழுங்கு செய்ததாக அமைப்பாளன் ஒத்துக் கொண்டான்.

பொதுவாக, மக்கள் வங்கிகளைவிட இத்தகைய முறைசாரா நிறுவனங்களை சிறந்தவையாக கருதுகின்றனர். பணம் வேண்டிய சமயங்களில், வங்கிகளில் உடனடியாகப் பணம் பெறமுடியாதிருந்ததென அநேகர் தெரிவித்தனர். முறைசாரா வட்டிவீதங்கள் மேலதிகமானவையாகக் கருதப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடினமான பாதை

ஏற்றுமதி முறையாக்க வலயங்கள் ஏற்றுமதிகளை அடிப்படையாகக்கொண்டு கைத்தொழில்களைப் பெருக்குவதற்கு எந்த மந்திர சக்திவாய்ந்த குறுக்கு வழிகளையும் காட்டவில்லையென்பதைப் பல வளர்முக நாடுகள் கண்டுபிடித்துள்ளன. இம் முயற்சியில் வெற்றிகளைவிட தோல்விகளே அதிகமாயிருக்கின்றன.

வெற்றி எத்தனையோ காரணிகளைப் பொறுத்திருக்கலாமாதலால் - ஒரு நாட்டை அடையத்தக்க வாய்ப்பு, முக்கிய சந்தைகளுக்கு அந்நாட்டின் அண்மை, மலிவான தொழிலாளர்கள் உடன்டியாகக் கிடைக்கும் வசதி, அரசியல் ஸ்திரம், இவற்றிற்கெல்லாம் மேலாக, பகிரங்க வர்த்தகம் நடத்தும் பொறுப்பேற்றல் – எந்தத் தனியொரு மாதிரியமைப்பையும் இலட்சிய முறையென்று கருதுவதற்கில்லை என்று பாரிஸில் தலைமையகத்தைக் கொண்ட பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான ஸ்தாபனம் கூறுகிறது. பல நாடுகளைப் பொறுத்தவரை, ஏ. மு. வலயங்களுக்கு ஆகும் செலவுகள் அவற்றினால் கிடைக்கும் நன்மைகளை மிஞ்சிவிடும் பேரபாயமும் உண்டு. அப்பொழுது அரிதாயுள்ள நிதிவளங்கள் வற்றி விடும்.

ஏற்கெனவே சுதந்திர வர்த்தக தத்துவத்துக்கு உள்ளத்தில் நிறைய இடமளித்துள்ள சில நாடுகள், குறிப்பாகத் தென் கொரியாவும் தைவானும் வெளிநாட்டு மூலதனமும், தொழில்நுட்பவியலும் பெற ஏ. மு. வலயங்களை நன்கு பயன்படுத்தியுள்ளன. இந்தியாவும் சீனாவும் தங்களுடைய பொருளாதாரங்களைத் திறந்து விடுவதில் முழுமையற்ற, சந்தேகார்த்தமான ஓர் அணுகு முறைக்கு அதிக முக்கியமளித்ததால் இவ் விஷயத்தில் அவ்வளவாக வெற்றி பெறவில்லை.

பனாமாவும் ஹொங்கொங்கும் சிங்கப்பூரும் ஏ. மு. வலயங்களை விருத்தி செய்வதற்கு ஏற்றிறக்குமதி நிலைய வியாபாரத்தின் அனுகூலங்களைத் திரட்டிப் பயன்படுத்தியுள்ளன. ஆனால், இத்துறைக்குத் தாமதித்து வந்த பிலிப்பைன்ஸ், இலங்கை, இந்தோனீஷியா போன்ற நாடுகள் அவ்வளவாக நன்மையடையவில்லை.

அமெரிக்காவின் எல்லைப்புறத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மெக்ஸிகோவின் ஏ. மு. வலயங்கள் தொடர்ந்து முதலீடுகளை ஈர்த்து வந்துள்ளன. ஆனால், லண்டனில் தலைமையகத்தைக்கொண்ட பொருளாதாரப் புலனாய்வு நிலையம் அண்மையில் நடத்திய ஓர் ஆய்வின்படி தெற்கே தூரத்தில் பனாமாவின் ஏ. மு. வலயம் மட்டுமே செழித்தோங்குகிறது.

தென்னமெரிக்காவிலுள்ள வலயங்கள் ஏற்றுமதிக் கைத்தொழில்களை விருத்தி செய்ய ஒன்றுஞ் செய்யவில்லை. கரிபியன் பிரதேசத்திலே பஹாமாஸில் மட்டுமே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மத்திய கிழக்கிலுள்ளவர்களும் ஏமாற்றமடைந்துள்ளனர். ஆபிரிக்காவின் உப சஹாராப் பகுதிகளில் ஏ. மு. வலய முயற்சிகள் ஒப்பியல் ரீதியாகப் பொருட்படுத்தத் தக்கனவாயில்லை.

வெற்றிகளின் தொகை வரையறுக்கப்பட்டதாயிருந்த போதிலும் - இந்தப் பட்டியலில் இடம் பெறும் இன்னொரு நாடு மொறீஷியஸ் - ஏ. மு. வலயங்கள் ''பொருளாதார வளர்ச்சிக்குப் பயனுள்ள பங்களிப்புச் செய்ய முடியும்'' என லண்டன் பொருளாதாரப் புலனாய்வு நிலையம் அண்மையில் நடத்திய ஆய்வறிக்கை கூறுகிறது. எனினும், ''வழக்கமாக அவை (ஏ. மு. வலயங்கள்) பொருளாதார அபிவிருத்திக்கு முக்கிய அத்திவாரங்களாயிருக்க ஏற்றனவாயில்லை'' என்றே அவ்வறிக்கை முடிவில் கூறுகிறது.

சுதந்திர தொழிற்சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் சமீபத்தில் நடத்திய பரிசீலனையின் முடிவுகள் அதைவிட கடுமையாயிருக்கின்றன. இந்த அறிக்கை ''மிக அனுகூலமான நிலைமைகளிலும் பெரும்பாலான ஏ. மு. வலயங்களின் நன்மைகள் ஆகக் குறைவாகவே இருந்து வந்துள்ளன'' என்று வாதிக்கிறது. ''நடைமுறையில், வெளிநாட்டு முதலீடுகளால் கிடைக்கும் ஆதாயங்கள் வரையறுக்கப்பட்டனவாகவே உள்ளன; சென்மதி நிலுவை நிலைமைகள் அபிவிருத்தியுறவில்லை; வலயங்கள் ஒற்றை – அமைப்பு வகையான உற்பத்தி முறைகளையே ஆகர்ஷிக்கின்றன; இவை பெரும்பாலும் பகுதி உற்பத்திமுறைகளாகவே இருக்கின்றன; உலகெங்குமுள்ள வலயங்கள் சிருஷ்டித்துள்ள வேலைகளின் தொகை பத்து இலட்சத்துக்கு மேல் போகவில்லை; உள்நாட்டுப் பொருளாதாரத்துடன் ஏற்படுத்தப்படும் தொடுப்புக்கள் குறைவாகவே உள்ளன; தொழில்நுட்பவியலின் இடமாற்றம் பொதுவாக நடைபெறவேயில்லை'' என்று அவ்வறிக்கை கூறுகிறது.

1983 ம் ஆண்டில் அங்டாட் (வர்த்தகம், அபிவிருத்தி பற்றிய ஐ. நா. மகாநாட்டு ஸ்தாபனம்) தயாரித்த ஐயப்பாடான அறிக்கையொன்று ஏற்றுமதி முறைப்படுத்தும் வலயங்களின் நன்மைகளையும் செலவுகளையும் மூன்றும் உலக நாடுகள் கவனமாக மதிப்பிட வேண்டுமென்று வலியுறுத்துகிறது. மூன்றும் உலக நாடுகளிலுள்ள ஏ. மு. வலயங்களின் முதலீடுகளில் பெரும்பகுதியை வழங்கும் செல்வந்த நாடுகளுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான ஸ்தாபனத்தின் (ஓ. ஈ. சி. டி) செயலகம் கூட சந்தேகங்களைத் தெரிவித்துள்ளது. - குறிப்பாக, விருந்தோம்பும் நாடுகளில் சில வழங்கியுள்ள தாராளமான வரிச்சலுகைகளைப் பற்றி.

பொருளியல் நோக்கு, மார்ச் 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டாளர்கள் ஒரு நாட்டிலுள்ள முழு வியாபார சூழ்நிலையினால் கவரப்படுகிறார்களேயன்றி விசேஷ சலுகைகளால் கவரப்படுவது குறைவு என்று இந்த ஸ்தாபனம் (ஓ.ஈ.சி.டி.) கூறுகிறது. இதில் அரசியல் அரங்க நிகழ்வுகள், அரசாங்க ஒழுங்குவிதிகளின் தொகை பொன்ற காரணிகளும் அடங்கும். எதிர்க்கட்சி அதிகாரத்தைப் பெற்றால் தற்போதுள்ள வெளிநாட்டு முதலீடுகள் சம்பந்தமாக கொள்கைகளை மாற்றிவிடக் கூடிய சாத்தியக் கூறு உள்ள இலங்கை போன்ற நாடுகள் வெளிநாட்டு மூலதனத்தை ஈர்க்கக் கஷ்டப்படக் கூடிய நிலைமைக்குரிய காரணங்களை அது தெளிவாக்குகின்றது.

செனிகல் நாட்டிலுள்ள டாக்கரில் 11 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்ட ஏ.மு. வலயத்தில் கடந்த ஆண்டளவில் விரல்விட்டு எண்ணக் கூடிய கம்பெனிகள் தான் காணப்பட்டன. மேலதிக ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டிருந்தபோதிலும், அவற்றால் கவரப்பட்டோர் சிறு தொகையினரே. ஜமெய்க்காவில் கிங்ஸ்டன் நகரிலுள்ள ஏ.மு. வலயத்தின் உள்ளமைப்பு உலக வங்கிப் பண உதவியுடன் திருத்தியமைக்கப்பட்டுள்ள போதிலும், எட்டு வருடங்களில் ஏழு உற்பத்திக் கம்பெனிகளை மட்டுமே அது கவர்ந்துள்ளது. இவற்றில் வேலை செய்வோரின் தொகை 1,000 க்குக் குறைவு.

முதலீடுகள் முன்வருவதற்கு ஆயத்தமாயிருந்தாலுங்கூட, விருந்தோம்பும் நாடு அதன் குறிக்கோள்களை - அதிக மூலதன உப்பாய்வுகள், அதிகமான வேலைகள், அதிகரித்த வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியங்கள், தொழில்நுட்பவியலின் இடமாற்றம், அதிவேகமான கைத்தொழில் அபிவிருத்தி சாதிக்குமா என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.

மூலதன உப்பாய்வுகள்

ஏ.மு. வலயங்களில் செய்யப்படும் வெளிநாட்டு முதலீடுகள் விருந்தோம்பும் நாட்டின் மூலதன இருப்புக்குச் செய்யும் பங்களிப்பு அற்பமாகவே இருக்கிறதென்று விமர்சகர்கள் கூறுகிறார்கள். தொழிலாளர்கள் செறிந்து, ஒன்றிணைப்புச் செயற்பாடுகளில் ஈடுபடும் நடவடிக்கைகளையும் எளிய செய்முறைகளையுமே வலயங்கள் ஈர்ப்பதுதான் இதற்குப் பெரும்பாலும் காரணமாகும்.

வடபகுதியிலுள்ள கம்பெனிகள் ஏ.மு. வலயங்களிலுள்ள உப நிறுவனங்களுக்குப் பொருள்களை ஒன்றிணைப்புக்கான கூறுகளை அனுப்புகின்றன; ஒன்றிணைக்கப்பட்ட சரக்குகள் பின்னர் ஒன்றில் தாய்க் கம்பெனிகளுக்குத் திருப்பியனுப்பப்படுகின்றன; அல்லது மூன்றாவது நாடுகளுக்கு எற்றுமதி செய்யப்படுகின்றன.

1970 களில் ஏ.மு. வலய உற்பத்திக்கான இடங்களில் வெளிநாட்டுக் கம்பெனிகள் முதலீடு செய்த மூலதனம் பத்து இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் சென்றது அரிது; இம் முதலீடுகளில் பல 5,00,000 அமெரிக்க டொலர்களுக்குக் குறைவாகவே இருந்தன.

சிருஷ்டிக்கப்பட்ட வேலை ஒன்றுக்கு 5,000 அமெரிக்க டொலர்களுக்கு மேற்பட்ட மூலதனம் முதலீடு செய்யப்பட்டமை விதிவிலக்காகவே இருந்து வந்துள்ளதென அங்டாட் கூறுகிறது. ஏ.மு. வலயங்களில் முக்கிய இடம்பெறும் மின்னணுவியல் (இலத்திரனியல்), ஆடைகள் ஆகியவற்றின் முதலீடுகள் பெரும்பாலும் தையல் எந்திரங்கள் அல்லது பற்றாசு இரும்புகளுக்கும் பூதக்கண்ணாடிகளுக்கும் வரையறுக்கப்பட்டவாறே இருந்துள்ளன.

இதற்கு நேர்மாறாக, விருந்தோம்பும் நாடுகள் ஏ.மு. வலயங்கள் அமைந்துள்ள இடங்களில் ரஸ்தாக்களையும், கட்டங்களையும் பயன்படு வசதிகளையும் அமைப்பதில் கனத்த அளவிலான பணத்தைச் செலவிட்டுள்ளன. காணிகளும் தொழிற்சாலைகளுக்கான இடப்பரப்புகளும் மலிவாக வழங்கப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து விருந்தோம்பும் நாடுகளுக்குக் கிடைக்கும் வருவாய்கள் மூலதனச் செலவுகளையும் செயற்பாட்டுச் செலவுகளையும் உள்ளடக்கத் தவறிவிடலாம்.

வேலைகள்

லண்டன் பொருளாதாரப் புலனாய்வு நிலையத்தின் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 35 நாடுகளில் பதினெட்டு நாடுகள் 1978 ம் ஆண்டுக்குப் பின்பு அவற்றின் ஏ.மு. வலயங்களில் வேலைவாய்ப்புகளின் அதிகரிப்பைக் கண்டுள்ளன. எனினும், மூன்றாம் உலக நாடுகளிலுள்ள ஏ.மு. வலயங்களில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளவர்களின் மொத்தம் தொகை பத்து இலட்சத்துக்குக் குறைவாகவே உள்ளதென அங்டாட் மதிப்பிடுகிறது. இது மூன்றாம் உலகிலுள்ள நாடுகளில் உத்தியோக பூர்வமாகப் பதிவுசெய்யப்பட்ட கைத்தொழில்களிலுள்ள தொழிலாளர் படையில் 2.6 சதவிகிதமாகும்.

வேலையற்றிருக்கும் கோடிக் கணக்கானோருடன் ஒப்பிடுகையில், இது பொருட்படுத்தக் கூடியதல்ல. இதிலிருந்து ஏ.மு. வலயங்கள் புதிய வேலைகளைச் சிருஷ்டித்து வருகின்றனவா அல்லது மற்றும் பகுதிகளிலிருந்து வேலைவாய்ப்புகளை இடமாற்றும் பணியை மட்டும் செய்து வருகின்றனவா என்பது தெளிவாகத் தெரியவில்லை. மொறீஷியஸிலும் சிங்கப்பூரிலும் ஹெய்தியிலும் 'ஏ.மு. வலயங்கள்' உற்பத்திக் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள மொத்தத் தொழிலாளர் படையில் 35 - 55 சதவிகிதத்தினரை வேலைக்

(31 -ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப முயற்சிகள்

ஏற்றுமதி முறையாக்க வலயங்களை அமைக்கும் நடவடிக்கைகளை முதலாவதாக எடுத்த நாடுகளிடையே தைவானும் தென்கொரியாவும் இடம் பெறுகின்றன. 1960 களின் நடுப்பகுதி போன்ற அவ்வளவு ஆரம்ப காலத்திலேயே இத்துறையில் இறங்கிவிட்ட இவ்விரு நாடுகளும் மலிவான தொழிலாளர்களைத் தேடிய வெளிநாட்டு முதலீடுகளில் பெரும்பகுதியை ஈர்த்தன.

ஆரம்பத்திலிருந்தே அவை வெற்றிபெற்றன. 1969ம் ஆண்டளவில் தைவானின் வலயங்களில் வியாபார நிலையங்களை அமைப்பதற்கான விண்ணப்பங்கள் இத்தகைய நடவடிக்கைகளுக்குக் குறிக்கப்பட்ட பிரதேசத்தை வெகுவாக மிஞ்சிவிட்டன. மேலும், இரு வலயங்கள் துரிதமாக அமைக்கப்பட்டன. தென்கொரியாவும் அதன் ஆரம்ப பெறுபேறுகளால் ஏ. மு. வலயத்தில் உள்ள வசதிகளை அதிகரிக்க ஊக்கம் பெற்றது. முதலாவது ஏ. மு. வலயங்கள் அமைக்கப்பட்டதற்குப்பின் வந்த தசாப்தத்தில் அதன் கைத்தொழில் வளர்ச்சி உச்சக் கட்டத்தை அடைந்தது.

இரு நாடுகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீது கடும் நிபந்தனைகளை விதிக்கத் தொடங்கின. தென்கொரியா உற்பத்தி முழுவதையும் ஏற்றுமதி செய்யும் நோக்கமுள்ள கம்பெனிகளுக்கு ஊக்கமளித்தது. தைவானும் குறைந்த பட்ச முதலீட்டையும், அதன் வலயங்களில் முறையாக்கம் செய்யப்படும் பொருள்களுக்கு குறைந்த பட்ச கூட்டிய விலையையும் வற்புறுத்தியது.

அந்நாடுகள் சுதந்திர சந்தை முறைக்கும் ஊக்கமளித்தன. ஏ. மு. வலயங்களில் உருவாகிய இம்முறை உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் ஊடுருவிச் சென்றதால், சகல துறைகளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அதிக கவர்ச்சியூட்டின. ஏ. மு. வலயங்களின் அனுகூலங்களை ஏ. மு. வலயங்களுடன் இணைந்த பல கட்டுப்பாடுகளின்றி இருநாடுகளிலும் எந்த இடத்திலும் அனுபவிக்கலாம்.

ஏ. மு. வலயங்களுக்கு வெளியே முதலீடு செய்தால், வெளிநாட்டுக் கம்பெனிகள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை உள்நாட்டுச் சந்தையில் விற்கலாம். இதனால் இருநாடுகளிலும் உள்நாட்டுச் சந்தையில் சுபிட்சம் அதிகரித்து வந்தது. தைவானினதும் தென்கொரியாவினதும் தெளிவான ஸ்திரமும் நீண்டகால முதலீடுகளை வளர்த்தது. இதில் அதிக அளவில் அமெரிக்காவுக்குள்ள தொடர்பு ஓர் உத்தரவாதமாகப் பயன்பட்டது.

தென் கொரியாவில் 1964ம் ஆண்டில் செய்யப்பட்ட 58 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான வெளிநாட்டு முதலீடுகள் 1984ம் ஆண்டில் 600 கோடி அமெரிக்க டொலராக அதிகரித்தன. 1966ம் ஆண்டில் 6 கோடி 20 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியாயிருந்த அதன் உற்பத்தி ஏற்றுமதிகள் 1984ம் ஆண்டில் 300 கோடி அமெரிக்க டொலர் பெறுமதிக்கு அதிகரித்தன.

தைவானிலும் ஏ. மு. வலயங்கள் ஏற்றுமதிப் பெருக்கத்துக்கும், ஏற்றுமதி வழிப்பட்ட கைத்தொழில் பெருக்கத்துக்கும், தேர்ச்சிபெற்ற தொழிலாளர் படையொன்று உருவாவதற்கும் உதவியுள்ளன. இந்த வலயங்கள், உயர் தொழில் நுட்பமும் உயர் சம்பளமுமுள்ள ஒரு பொருளாதாரமாகத் தைவான் உருமாறுவதற்குத் தூண்டுகோலாயிருந்துள்ளன.

1970 களின் பிற்பகுதியில் வெளிநாட்டுக் கம்பெனிகள் நிகர இலாபங்களில் 38 சதவிகிதத்தை மட்டுமே தாய் நாட்டுக்குத் திருப்பியனுப்பின. இலாபத் தொகை முழுவதையும் தாய்நாட்டுக்குத் திருப்பியனுப்ப அக்கம்பெனிகளை அனுமதிக்கும் சட்டவிதிகள் உள்ளன. இது தைவானில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கொண்டுள்ள கவர்ச்சியைக் கோட்டிடுக் காட்டுகின்றது.

ஏ. மு. வலயங்களில் முதலீடுகள் செய்யப்படும் வேகம் உண்மை அடிப்படையில் இப்பொழுது குறைந்து விட்டது. தைவானின் மொத்த ஏற்றுமதிகளில் வலயத்தின் பங்கு வீழ்ச்சியடைந்து வருகிறது. ஆனால் இதுவும் கூட விரிவான வெற்றிக்கு ஓர் அறிகுறியாகும். "இந்தப் போக்கு ஆரோக்கியமானது" என்று கூறும் ஏ. மு. வலயங்களுக்கான முதலீட்டுச் சேவைத் திணைக்களத்தின் தலைவர் வான் லீ - வென் மேலும் கூறுகிறார்; "எங்கள் பொருளாதாரம் முன்னேறி வருகிறதென்பதை அது எடுத்துக் காட்டுகிறது."

தைவான் ஒரு சிறந்த பொருளாதாரமாகிவிட்டதாலும், தேர்ச்சியற்ற தொழிலாளர் படை குறைந்துவிட்டதாலும் ஏ. மு. வலயங்கள் தங்கள் கவர்ச்சியை இழந்து வந்துள்ளன. உதாரணமாக, தைவானின் ஏ. மு. வலயங்களில் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களின் சம்பளம் மாதமொன்றுக்குச் சராசரியாக 240 அமெரிக்க டொலர்கள். இதனுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் வழங்கப்படும் சம்பளம் 55 அமெரிக்க டொலர்களிலிருந்து 100 அமெரிக்க டொலர்கள் வரையாகும். வலயத்துக்கு வெளியே சராசரிச் சம்பளவிகிதம் அதைவிட மிக அதிகம். கைத்தொழில் பொதுவாக அதிக உற்பத்தித்திறன் பொருந்தியதாகவும் மூலதனச் செறிவுள்ளதாகவும் இருப்பதையும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர்களை அதிகமாக உபயோகிப்பதையும் இது பிரதிபலிக்கின்றது.

இருபது வருடங்களுக்கு முன்பு தனது முதலாவது ஏ. மு. வலயத்தைத் திறந்த தைவான், உடுதுணிகள், மின்சார உபகரணங்கள் ஒன்றிணைப்பு போன்ற குறைவான தொழில் நுட்பமும் தொழிலாளர் செறிவும் உள்ள கைத்தொழில்கள் பிலிப்பைன்ஸிலும் தாய்லாந்திலுமுள்ள புதிய அமைவிடங்களுக்கு இடம்மாறுவதைக் காண்கின்றது.

இந்தப்போக்கு அரசாங்கப் பொருளியலாளர்களுக்கு அவ்வளவாகக் கவலையளிக்கவில்லை; அண்மையில் சடப் பொருளியல், எரிசக்தி இயல், திட்பக்கருவிகள் உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளைக் கவர்வதற்காக எச்ஸின் விஞ்ஞான - தொழில் நுட்பவியல் பூங்கா என்னும் ஒரு புதுவகையான ஏ. மு. வலயம் திறக்கப்பட்டுள்ளது.

தென் கொரியாவிலும் நிலைமை இது போன்றே உள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் நடக்கும் கூட்டு முயற்சிகளில் குறைந்தபட்சம் 50 சதவிகிதப் பங்கு உள்நாட்டு முதலீடாயிருக்க வேண்டுமென்பதை அரசாங்கம் சில காலமாக ஆதரித்து வந்துள்ளது. அதன் கனத்த கைத்தொழில், உயர் தொழில் நுட்பப் பொருள்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்டுவரும் இடையறாத அதிகரிப்பு, ஒரு வெளிக்கரை ஒன்றிணைப்புத் திட்டாக இருந்ததிலிருந்து அது எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளதென்பதைக் காட்டுகிறது.

— லக்ஸ்மன் ஜயவர்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(29-ம் பக்கத் தொடர்ச்சி)
கமர்த்துகின்றன என்று சுதந்திர தொழிற் சங்கங்களின் சர்வ தேச சம்மேளனம் கூறுகின்றது.

ஏ. மு. வலயத் தொழிலாளர்களில் எண்பது சதவிகிதத்தினர் 16 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களாவர். இது சமூகப் பிரச்சினைகளை உண்டாக்கலாம். மொறீஷியஸில் 1975 ம் ஆண்டுக்கும் 1982 ம் ஆண்டுக்குமிடையே தொழிலாளர் படை ஆண்டுக்கு ஏறக்குறைய 10,000 வீதம் அதிகரித்தது. ஆனல், மிக முக்கியமாகச் சீனிக் கைத்தொழிலில் ஆண்களுக்கான வேலை வாய்ப்புகள் வீழ்ச்சியடைந்தன. பிரதான வளர்சித் துறையான ஏ. மு. வலயங்களில், 12,200 புதிய வேலைகளில் 2,400 வேலைகள் ஆண்களுக்கானவையென்று லண்டன் பொருளாதாரப் புலனய்வு நிலையம் கூறுகிறது.

சுதந்திர தொழிற் சங்கங்களின் சர்வதேச சம்மேளனம் மேலும் கூறுவதாவது: ''ஏ. மு. வலயங்கள் குறைந்த செலவிலான தொழிலாளர்களைச் சுரண்டுவதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன.... சுகாதார, பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் போன்ற சமூகப் பொறுப்புகளையும் தொழிற் சங்கங்களை அங்கீகரிப்பதையும் அவை தவிர்க்கின்றன.''

ஏ. மு. வலயங்கள் பல்தேசிய நிறுவனங்களைக் கவர்வதற்குக் காரணம், அந்நிறுவனங்கள் விரும்பியபோது தொழிலாளர்களை வேலைக்கமர்த்தவும், வேலை நீக்கம் செய்யவும் முடியும் என்பதேயாகுமெனக் கூறும் சுதந்திர தொழிற் சங்கங்களின் சர்வதேசசம்மேளனம், மெக்ஸிகோவின் ஏ. மு. வலயங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட 40,000 பேரில் அரைவாசிப்பேர்எவ்வாறு 1974 - 75 ம் ஆண்டுகளில் ஏற்பட்ட தற்காலிக வர்த்தக மந்தத்தின் போது வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர் என்பதைச் காட்டுகிறது.

வெளிநாட்டு நாணயச் சம்பாத்தியங்கள்

ஏ. மு. வலயங்கள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருள்களையும் எந்திரக் கூறுகளையுமே உபயோகிப்பதால், நிகர வெளிநாட்டு நாணய நன்மை அடிக்கடி குறைவாக இருக்கிறது.

இலாபங்கள்மீது பெரும்பாலும் வரி விதிக்கப்படுவதில்லை. எனவே, விருந்தோம்பும் நாட்டுக்கு ஏற்படும் பிரதான நன்மைகள், தொழிலாளர்களின் சம்பளங்கள், தொழிற்சாலை வாடகைகள் அல்லது மின்சாரம், நீர், போக்குவரத்து வாகனக் கட்டணங்கள் ஆகிய உருவத்திலேயே வருகின்றன.

மூன்றும் உலக நாடுகளிலுள்ள ஏ. மு. வலயங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் நிகர இறக்குமதிப் பொருளடக்கம் இறுதி விலையில் ஏறக்குறைய 60 சதவிகிதமாகவோ அல்லது அதற்கு மேற்பட்டதாகவோ உள்ளது. தென் கொரியா, தைவான், கொலம்பியா ஆகிய நாடுகளிலுள்ள ஏ. மு. வலயங்கள் மாத்திரம் இதற்கு விதிவிலக்காக உள்ளனவென்று லண்டன் பொருளாதாரப் புலனய்வு நிலையப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இலங்கையில் அது 1983 ம் ஆண்டில் 68 சதவிகிதமாகவும், பிலிப்பைன்ஸில் 1982 ம் ஆண்டில் 73 சதவிகிதமாகவுமிருந்தது. சில கைத்தொழில்களில், உதாரணமாக மின்னணுவியலில் அது (நிகர இறக்குமதிப் பொருளடக்கம்) இதைவிட உயர்வாகக்கூட இருக்கிறது.

ஏ. மு. வலய உற்பத்திப் பொருள்களின் விற்பனைப் பெறுமதியில் தொழிலாளர் சம்பளங்கள் 10 சதவிகிதத்திலிருந்து 18 சதவிகிதம் வரையான தொகைக்குப் பொறுப்பாயிருக்கின்றனவென்று சிலர் கூறுகிறார்கள். ஆனல், விருந்தோம்பும் நாடுகள் இவ்வலயங்களிலிருந்து ஈட்டும் வருவாயில் தொழிலாளர் சம்பளங்கள் 70 சதவிகிதத்துக்கு மேற்பட்ட தொகைக்குப் பொறுப்பாயிருக்கின்றனவென்று அங்டாட் கூறுகிறது.

எனினும், சில நாடுகள் இதைவிட நல்ல வருவாயைப் பெற்றுள்ளன. தென் கொரியாவில் மஸனில் அமைந்துள்ள ஏ. மு. வலயத்தைப் பொறுத்தவரை, 1971 ம் ஆண்டுக்கும் 1979 ம் ஆண்டுக்குமிடையே உள்நாட்டுக் கூட்டிய பெறுமதி ஏற்றுமதிப் பெறுமதியில் 28 சதவிகிதத்திலிருந்து 52 சதவிகிதம் வரை உயர்ந்தது. அதேகாலத்தில், கூட்டிய பெறுமதியில் உள்நாட்டு மூலப் பொருள்களின் பங்கு 6 சதவிகிதத்திலிருந்து 47 சதவிகிதம் வரை உயர்ந்ததென பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான ஸ்தாபனம் (ஓ. ஈ. சி. டி.) வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

வளர்முக நாடுகள் ஏற்றுமதி செய்த உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், ஓரளவு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஆகியவற்றின் மொத்தத் தொகையில் 5சதவிகிதத்துக்குக் குறைவானதற்கே ஏ. மு. வலயங்கள் பொறுப்பாயிருக்கின்றன என்று அங்டாட் கூறுகிறது. ஆனல், சில நாடுகளிலுள்ள ஏ. மு. வலயங்கள் இதைவிட நன்ருகச் செயலாற்றியுள்ளன. உதாரணமாக, 1979 ம் ஆண்டில் மொறீஷியஸ் ஏற்றுமதி செய்த சகல பாரம்பரிய மற்ற பொருள்களிலும் 90 சதவிகிதத்துக்கு மேற்பட்டதற்கு வலய ஏற்றுமதிகள் பொறுப்பாயிருந்தன.

தொழில் நுட்பம்

ஏ. மு. வலயங்கள் தொழிலாளர் செறிந்த கைத்தொழில்களையே கவர்வதால், தொழில் நுட்ப ரீதியான நவீன உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகள் கைக்கொள்ளப்படுவது அபூர்வமாகவே இருக்கிறது.

விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பவியல் தேவைப்படக்கூடிய முன் - ஒன்றிணைப்பு பெரும்பாலான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் நடைபெறும் கைத்தொழில்மயமான நாடுகளில் அமைந்திருக்கிறது உதாரணமாக, குறைகடத்தி உற்பத்தியில், உற்பத்தியின் இரு உயர் தொழில்நுட்ப அம்சங்கள் - முகமுடி செய்தலும் நீர் உற்பத்தியும் – வழமையாக வெளிநாட்டு முதலீட்டாளரின் தாய்நாட்டிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. ஏ. மு. வலயங்களிலுள்ள வேலையின் வேறுபாடற்ற சலிப்பூட்டும் தன்மையால் பயிற்சியளிப்பதற்கு ஏற்படுத்தும் வாய்ப்பு வெகு குறைவு. எனினும், சீனாவின் விசேஷ வலயங்களில் கூட்டு முயற்சிகளுக்குத் தெரிவு செய்யப்படும் முகாமையாளர்கள் இறுதியில் தங்களுடைய அனுபவத்தையும், தொழில்நுட்பத் தேர்ச்சியையும் மற்ற இடங்களிலுள்ள தொழில் சாலைகளுக்கு எடுத்துச்செல்ல வேண்டுமென்று சீனர்கள் வற்புறுத்துகிறார்கள்.

கைத்தொழில் அபிவிருத்தி

ஏ. மு. வலயங்கள் உற்பத்தி செய்வனவற்றில் இறக்குமதிப் பொருள்களே அதிக அளவில் அடங்கியிருப்பதன் காரணமாக, இவ்வலயங்கள் பிரதானமாகச் சேவைகள், நிர்மாணக் கைத்தொழில்கள் வாயிலாகவே விருந்தோம்பும் நாட்டுப் பொருளாதாரத்தின் மீதிப் பகுதிகளுடன் இணைக்கப்படுகின்றன. ஏ. மு. வலயங்களில் கம்பெனிகள் தொழிலாளர்களுக்கு வழங்கும் சம்பளங்கள் உள்நாட்டு நுகர் பொருள்கள்மீது செலவிடப்படும்போது, அவை பெருக்கல் விளைவை ஏற்படுத்துகின்றன.

இத்தகைய பின்முக இணைப்புகள் வரையறுக்கப்பட்டனவாயிருக்கின்றன. எனினும், மூன்றும் உலக நாடுகளில் அதிக அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் சில, அவற்றை விரிவாக்குவதிலும் ஏ. மு. வலயங்களைப் பரந்த பொருளாதாரத்துக்குள் இணைப்பதிலும் சிறிதளவு வெற்றி பெற்றுள்ளன.

நடுத்தர பரிமாணமுள்ள வளர்முக நாடுகளில் அதிகளவு முன்னேறியுள்ளவை ஏ. மு. வலயங்களிலிருந்து மிக்க பயனடைந்துள்ளன. மேற்கத்திய முதலீட்டாளர்களுடன் கூட்டு முயற்சிகளில் உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்கள் சம்பந்தப்பட்டிருப்பது பின்முக இணைப்புகளை விருத்தி செய்வதில் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது.

அதிகளவு வெற்றியீட்டியுள்ள நாடுகள், மூலதனப் பொருள்களையும் இடைநடுவான உற்பத்திப் பொருள்களையும் உற்பத்தி செய்யும் பன்முகப்படுத்தலில் இறங்கியுள்ளன. அதாவது, தொழில்நுட்பவியலின் இடமாற்றத்துக்கு அடிகோலக் கூடிய மின்சார சாதனங்கள், கைத்தொழில் இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களையும் மற்றும் கைத்தொழில்களையும் ஆரம்பித்துள்ளன.

பெரிய உள்நாட்டுச் சந்தைகளைக் கொண்டுள்ள நாடுகள் உள்நாட்டு நுகர்வுக்கான பொருள்களையும் உற்பத்தி செய்ய வெளிநாட்டு முதலீட்டாளர்களை அனுமதித்தால், முதலீடுகள் சம்பந்தமாக அவர்களிடமிருந்து இப்பொழுதுள்ளதைவிட நல்ல அனுகூலமாக நிபந்தனைகளைப் பேசிப்பெற முடியுமெனச் சிலர் வாதிக்கிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வளர்முக நாடுகள் தாங்கள் தெரிவுசெய்த அபிவிருத்திக் குறிக்கோள்களை விருத்தி செய்யக் கூடிய வகையான முதலீடுகளைப் பெறுவதெனில், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான ஊக்குவிப்புகளைத் தேவைப்படும்போது மாற்ற வேண்டும்.

எனினும், ஏ. மு. வலயம் எவ்வளவுக்கெவ்வளவு ஒரு தனிமையான திட்டமாக அமைந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு நன்மைகள் குறையும். சுதந்திர சந்தையையும் பாதுகாக்கப்பட்ட உள்நாட்டுச் சந்தையிலிருந்து விலகித் தனிமையில் செயற்படும் ஏற்றுமதி வழிப்பட்ட துறையையும் கொண்டுள்ள ஈரடுக்குப் பொருளாதாரம் வெற்றி பெறுவது சாத்தியமல்ல.

தீர ஆலோசியாது ஏ. மு. வலயங்களை அவசரமவசரமாக அமைக்கும் சாத்தியக் கூற்றால் ஊக்குவிப்புகள் வழங்குவதில் ஏற்படும் பலத்த போட்டி மேலும் மோசமாகிவிடுமென்றும் பலர் கவலைப்படுகின்றனர். ஊக்குவிப்புகளை அளிப்பதில் மிதமிஞ்சிய தாராளம் காட்டினால், அது செல்வத்தில் மிதக்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வறியோர் பணஉதவி செய்வதாகவே இருக்கும்.

வளர்முக நாடுகள் அறவிடாது விட்டுவிடும் இலாபங்கள் மீதான வரிகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களின் சொந்த நாட்டு அரசாங்கங்கள் வருல் செய்யும். இது தென் பகுதியிலிருந்து வடபகுதிக்கு வருமானம் நேரடியாக மாற்றப்படுவதைப் பிரதிபலிக்கின்றது. புதிதாகக் கைத்தொழில்மயமாகிவரும் நாடுகள் சம்பந்தமாக வெற்றிபெற்ற ஒன்று வேறிடங்களிலும் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையைப் பரப்பியதற்காகச் சிலர் உலக வங்கியையும், ஐ. நா. கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனத்தையும் குறைகூறுகிறார்கள். (உதாரணமாக, சமீபவருடங்களில் மொரிஷியஸிலும் ஜமெய்க்காவிலும் மெக்ஸிகோவிலும் ஏ. மு. வலயங்கள் அமைக்கப்படுவதற்கு உலக வங்கியே மூல காரணமாயிருந்துள்ளது).

மெல்வின் வெஸ்ட்லேக்
லக்ஸ்மன் ஜயவர்த்தன

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசுபிக் வலயத்தில் மீண்டும் ஒரு பூமியதிர்ச்சி ஏற்படுமா.

சன்பிரன்சிஸ்கோ நகரத்தை முற்றிலும் அழிவுறச் செய்த 1906 ம் ஆண்டு பூமியதிர்ச்சியின் 80 ம் ஆண்டு நிறைவின்போது கலிபோர்னிய அதிகாரிகள் சன்பிரான்சிஸ்கோ மக்களுக்கு மகிழ்ச்சி தரமுடியாத ஒரு செய்தியை நினைவூட்டினர். அதாவது, அவர்கள் நின்றிருக்கும் பூமி நொய் மையானதும், அதிர்ச்சிகளுக்கு உள்ளாகக் கூடியதும் என்பதே அச் செய்தியாகும். சன்பிராஸ் சிஸ்கோவிலிருந்து மெக்சிக்கோ எல்லை வரையிலான பிரதேசத்தில் நிலத்தின் கடின ஓட்டில் ஒரு வெடிப்பு விழுந்து வருவதாகவும் இதன் விளைவாக அமுக்கம் அதிகரித்து வருவதாகவும் புவிச்சரித வியலாளர்கள் எச்சரித்து வருகின்றார்கள். ஒன்று திரண்டிருக்கும் இவ்வமுக்கம் திடீரென்று வெடித்துச்சிதறி பாரதூரமான அழிவுகளை ஏற்படுத்தக்கூடும் என அவர்கள் கூறுகின்றனர்.

கடைசியாக ஏற்பட்ட மிகப்பெரிய பூமியதிர்ச்சி கடந்த வருடம் மெக்சிகோவில் ஏற்பட்டது. மெக்சிக்கோ நகரம் மலைப்பாங்கான மணல்மேட்டு ஈரநிலங்களில் ஆழம் குறைந்த ஏரிகளுக்கு மேல் நிர்மாணிக்கப்பட்டதாகும். இதன் காரணத்தினாலேயே புவியதிர்ச்சி மையத்திலிருந்து 250 மைல் தொலைவில் இருக்கும் இந்நகரம் கடும் பாதிப்புக்குள்ளாகியது.

பசுபிக் கரையிலிருக்கும் அமெரிக்க கரையோரப்பகுதி மிக அதிகமாக புவியதிர்ச்சி அபாயம் நிலவும் பிரதேசங்களில் ஒன்றாகும். பூமியின் கடின ஓட்டை உருவாக்கும் ஆறு பிரதான தகடுகளில் இரு தகடுகளின் எல்லையிலேயே இப்பிரதேசம் அமைந்துள்ளது. இத்தகடுகள் கீழேயுள்ள மிருதுவான பொருட்களுக்கு மேல் மிதந்து வழுக்கிச் செல்லும் போதும், ஒன்றின் மேல் ஒன்று மோதும் போதும் பாறைகளில் அமுக்கம் கூடுகிறது. கடைசியில் ஒன்று சேர்க்கப்பட்டிருந்த சக்தி பூமியதிர்ச்சி மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Poobalasingham Book Depot
Phone 23631
Jaffna

பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

283, கே. சிறில் சீ. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்[illegible] அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org